
மாங்கல்யம்
தந்துனானே
சித்ராபாலா

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : மாங்கல்யம் தந்துனானே |
| ஆசிரியரின் பெயர் | : சித்ராபாலா |
| மொழி | : தமிழ் |
| முதற் பதிப்பு | : டிசம்பர், 2005 |
| தாள் | : 11.6 kg வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொத்தப் பக்கங்கள் | : 200 |
| நூல் கட்டுமானம் | : சாதா அட்டை பைண்டு |
| நூல் வெளியிடுவோர் | : இராமு நிலையம்<br>23, காசிம் தெரு,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-600 014 |

**விலை ரூ.65.00**

| | |
|---|---|
| ளி அச்சு | : 'சிவம்'ஸ், போன்: 9444232005 |
| ச்சிட்டோர் | : கே.வி.எஸ். ஆப்செட்,<br>சென்னை-14 |


# மாங்கல்யம்
# தந்துனானே

## உள்ளே...


➤ மாங்கல்யம் தந்துனானே 5

➤ நீ என் தேவதை 105




# மாங்கல்யம் தந்துனானே



சகல வசதிகளுடன் விஸ்தாரமாக இருந்த அந்த மருத்துவ அறையின் பஞ்சு மெத்தையில் படுத்திருந்த சிந்தியாவின் முகத்தில் தாய்மையின் பளபளப்பு சற்று அதிகமாக இருந்தது.

கண்களில் கனவுடன் தன் வயிற்றைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். மூன்று மாதக் கரு அவள் அழகிய உருவத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தி விடவில்லை.

'ஊ...ம்..ம்.. இன்னும் ஏழு மாதம் ஆகும்' என்று ஏக்கமாய் தனக்குள் முணங்கியபடி படுக்கையில் இருந்து எழுந்தாள்.

அறைக்கு வெளியே காலடி ஓசை கேட்கவும், புடவையைச் சரி செய்தபடி அறையின் வாசலை நோக்கி உதட்டில் சின்னச் சிரிப்புடன் நடந்த சிந்தியாவின் செவிகளில்,

''கருவை அழிச்சிடுங்க டாக்டர்'' என்ற அவள் கணவனின் கர்ண கடூரமான சொற்கள் விழுந்து திகைக்க வைத்தது.

ஆனால் நொடியில் தன்னை நிதானித்தவள், 'இந்த கடு சொற்கள் நிச்சயமாக என்னுடைய கணவரின் வாயிலிருந்து வந்திருக்க முடியாது. என் கணவன் கொடூரமானவன் இல்லை

சிசுவை அழிக்கும் மாபாதகனும் இல்லை. என் காதுகள் தவறாக எதையோ அர்த்தம் பண்ணிக் கொண்டிருக்கின்றன' என்று தன்னை சமாதானப்படுத்த முயன்றாள்.

ஆனால் மீண்டும்...

''ம்.. ம்.. மிஸ்டர் வெங்கட் எதற்கும் சிந்தியாவிடமும் ஒரு வார்த்தை...'' என்று சொல்ல முற்பட்ட டாக்டரை அவன் குரல்,

''வேண்டாம்'' என்று அடக்கியது. கேட்கவே, சிந்தியாவின் மேனி நடுங்கியது. ஒன்றும் புரியாமல் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. கைகால்கள் உதறத் தொடங்கின. வாயிலிருந்து கேவல் வெளிப்படாமல் இருக்க தன்னுடைய நடுங்கிய விரல்களால் உதட்டை பொத்தினாள். உள்ளம் 'ஹோ' என்று கதறிற்று.

அதிர்ச்சி, நம்பவே முடியாத அதிர்ச்சி. சுலபத்தில் எதற்கும் கலங்காத சிந்தியாவின் கண்களில் இருந்து கண்ணீர் வெடித்து சிதறியது. அதற்கு மேல் தாங்காமல் கால் மடிந்து மயங்கித் தரையில் சாய்ந்தாள் சிந்தியா. அரைகுறையான நினைவில், அவள் உதடு, 'குழந்தை, என் குழந்தை' என்று சொன்னதையே திரும்பத் திரும்ப முணுமுணுத்தது. அந்தக் குழந்தைக்கு நேரப் போகும் அவலத்தை எண்ணிப் பார்த்தோ, என்னவோ, திடீரென்று 'வீல்' என்று அவள் அலற,

உடனே அருகில் இருந்த டாக்டர் ''ஒன்றுமில்லை. காம் டவுன்..'' என்று சமாதானப்படுத்த மீண்டும் மயக்கத்தில் ஆழ்ந்தாள் சிந்தியா.

மறுமுறை அவள் முழுசாக நினைவு திரும்பி கண் விழிக்கும் போது, அவள் அருகே மாமியார் முகத்தில் கவலை பொங்க அமர்ந்திருந்தார்.



நெஞ்சை ஏதோ இறுக்க, வேகமாகத் தன்னுடைய கைகொண்டு வயிற்றைத் தொட்டுப் பார்த்தாள் சிந்தியா. தன் மணிப்பயல் வயிற்றுக்குள்ளே அழிந்து விட்டான் என்பதை அவளால் உணர முடிந்தது. கண்களில் இருந்து 'கொட கொட' என்று கண்ணீர் வழிந்தோடியது.

அவள் கண்ணீரின் அர்த்தம் புரிந்த சிந்தியாவின் மாமியார் சங்கரி.

''கர்ப்பஸ்திரீகள் கொஞ்சம் கவனமாக இருக்கணும்மா. கால் தடுக்கி கீழே விழுந்திட்டே போல மயங்கிட்டியாம். அதிர்ச்சியில் கரு கலைஞ்சு போச்சு'' என்றார் கவலை பொங்க.

'எவ்வளவு பொய், எவ்வளவு பொய் அம்மம்மா...' என்று கண்களை இறுக மூடினாள். மூடிய கண்களில் இருந்து வந்த நீர் பெருகி, தலையணையை நனைத்தது. நினைவு திரும்பிய சிந்தியாவின் அழுகையைக் கண்ட வெங்கட் வேகமாக வந்து அவளின் தலைப்பக்கமாக அமர்ந்து, அவளின் நெற்றியை ஆறுதலாக நீவி விட்டான். கணவனை உணர்ந்ததும் அழுகையினூடே கண்களை கடினப்பட்டுத் திறந்தாள் சிந்தியா.

''என்னடா, அழக் கூடாது, ஷ் ஷ் ஷ், இனிமேல் நடப்பது எல்லாம் நல்லதாகவே நடக்கும்'' என்று கண்களில் அன்பு பொங்கக் கணவன் பேசிய நாடக வசனத்தைக் கேட்டவுடன் சிந்தியாவின் கண்களில் எல்லையில்லா வெறுப்பு குடியேறியது. அவள் நெஞ்சம், வஞ்சகனே, ஏமாற்றுக்காரனே, கொடுமைக்காரனே, என் சிசுவை அழித்த மாபாதகா' என்று அவனைத் தூற்றியது.

அவளின் பார்வையின் காரணத்தை உணராமல் புருவத்தை வில்லாக வளைத்தான் வெங்கட். பின் ஒரு நெடிய மூச்சை விட்டான்.

"சிந்து, எல்லாம் சரியாகிவிடும் எதையாவது நினைச்சு மனசை புண்ணாக்கிக் கொள்ளாதே" என்று சொல்லியபடி அவளின் கண்ணீரைத் தன் கைக்குட்டையால் துடைத்தான்.

ஒன்றும் பேசாமல், கொதித்த மனதுடன் அவன் கையை விலக்கினாள். அவனுக்கும் தனக்கும் அதுநாள் வரை இருந்த பந்தம் அறுந்து போனது போல் இருந்தது.

உலகத்தில் யாருக்குமே கிடைக்காத கணவன் தனக்குக் கிடைத்திருக்கிறான் என்று பூரித்து இருந்தவளுக்கு இன்று அவன் பெயரைக் கேட்டாலே அறுவறுத்துப் போனது.

துரோகம்

நம்பிக்கைத் துரோகம்.

குழந்தை நன்றாக வளர்கிறதா பார்க்கணும் என்று மிகப் பிரியமாக கடந்த மூன்று நாட்களாக வரிந்து வரிந்து அவளை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றதன் காரணம் இப்போது நன்கு புரிந்தது.

கல்யாணம் ஆன மூன்று மாதத்தில் அவன் அவளை பிரியமாக அழைத்துச் சென்ற இடம் ஒன்று உண்டு என்றால் அது அவள் கர்ப்பத்தைக் கலைக்கவென்று வந்த ஆஸ்பத்திரிக்குதான் என்று புரிந்து கண்களில் கண்ணீர் மேலும் பெருகியது.

சிசுவை அழிக்கும் அளவுக்கு இவன் கேவலமானவனா?



அதுவும் அவளுக்குத் தெரியாமல் இரகசியமாக!

கட்டிய கணவனை இந்த மூன்று மாதத்தில் புரிந்திருக்கிறாளா என்ன?

அவன் எப்படிப்பட்டவன்?

"என்ன யோசனை சிந்து. இன்னும் இரண்டு நாட்களில் வீட்டுக்குப் போய் விடலாம். இழந்ததையே நினைச்சு அழுதுகிட்டு இருக்காதே. உடம்பு பலவீனமாகி விடும்" என்று மெல்லிய குரலில் மென்மையாகச் சொல்ல.

சிந்தியாவின் உதடு துடித்தது.

"என்னம்மா..." என்று உருகிப் போனான் வெங்கட். அவனுடைய அன்புக் குரலில் அழுகை மீண்டும் எட்டிப் பார்த்தது. 'செய்வதையும் செய்து விட்டு பிராயச்சித்தம் போல் இத்தனை உருக்கமா?' என்று உள்ளுக்குள் பொருமியபடி முகத்தை அவன் பார்வையில் இருந்து திருப்பிக் கொண்டு,

"எனக்கு என் அம்மாவைப் பார்க்கணும்" என்று உறுதியான குரலில் கூறினாள் சிந்தியா.

ஒரு நிமிடம் யோசித்தவன்,

"நாளைக்கு வர ஏற்பாடு செய்கிறேன். ஃபேக்டரியில் கொஞ்சம் முக்கியமான வேலை இருக்கு. போய் முடிச்சுட்டு சீக்கிரமாக வந்துடறேன் சிந்து. அதுவரைக்கும் நல்லாத் தூங்கி ரெஸ்ட் எடு" என்று சொல்லி ஒதுங்கி நின்று மருமகளையே கண்கள் கலங்கப் பார்த்துக் கொண்டிருந்த தாயிடமும் சொல்லிக் கொண்டு கிளம்பினான்.




மாலை நேரம், வெங்கட்டின் உயிர்த் தோழன் ராகுல் தன் மனைவி நிஷாவுடன் ஆஸ்பத்திரிக்குச் சிந்தியாவின் நலன் விசாரிக்க வந்தான்.

ராகுலைக் கண்டவுடன் வெங்கட் அவனை அழைத்துக் கொண்டு அறையை ஒட்டியிருந்த சின்ன ரெஸ்ட் ரூமுக்கு ஏதோ முக்கியமான விஷயம் பேச வேண்டும் என்று அழைத்துச் சென்று விட்டான்.

நிஷாவைக் கண்டதும், சிந்தியாவிற்கு மீண்டும் கண்களை துருத்திக் கொண்டு கண்ணீர் வந்தது. கல்யாணமான புதிதில் வெங்கட்டுடன் ஒரு முறை அவர்கள் வீட்டிற்குச் சென்றிருக்கிறாள். பின்பும் இரண்டொரு முறை அவளை சந்தித்திருக்கிறாள். சம வயதுப் பெண்கள் என்பதாலும், எண்ணங்களும் கருத்துக்களும் கிட்டத்தட்ட ஒத்திருந்ததால் அங்கே இருவரிடத்திலும் 'நட்பு' இருந்தது.

சிந்தியாவின் முகம் சோம்பிப் போய் இருப்பதைக் கண்ட நிஷா,

"ஓ... கமான் சிந்து. நடந்தது நடந்து முடிஞ்சு போச்சு. ரொம்ப சோக கீதம் வாசிக்காதே. மெடிக்கலி யு ஆர் ஃபிட் ஃபார் கேரியிங் எ சைல்ட். இது ஒரு அசந்தர்ப்பம் அபார்ஷன் ஆயிடுச்சு. நீ உர்ன்னு இருக்கேன்னு பாவம் வெங்கட்டோட முகமே நல்லா இல்லே."

'பாவ காரியம் பண்ணிட்டு நிம்மதியோடு இருந்திடத்தான் முடியுமா?' என்று சிந்தியாவின் நெஞ்சு கொந்தளித்தது.

"அவர்... அவருக்கு... அவர்தான்..." என்று அழுகை யினூடே தன் மனதை அழுத்தும் அவலத்தை அவளிடமாவது



சொல்லி ஆறுதல் தேடலாம் என்று எண்ணி திக்கித் திக்கி சிந்தியா பேசத் தொடங்க,

அதைத் தவறாக அர்த்தம் பண்ணிய நிஷா மேலே அவளை பேச விடாமல்,

"ஓ.. வெங்கட் கஷ்டப்படறார் அப்படிங்கறியா?" என்று சின்னதாய் சிரித்தாள். சிந்தியாவிற்கு ஆறுதல் சொல்லும் விதமாக, "உங்களுக்குக் கல்யாணம் ஆகும் முன்னாடியே எங்கிட்டே வெங்கட் சொல்லியிருக்கார். குழந்தை பெத்துட்டா இந்த பெண்கள் எவ்வளவு குண்டா இளமை போய் அசிங்கமாக ஆயிடறாங்க.

நானெல்லாம் என்னோட மனைவியை குழந்தை பெத்துக்கவே விட மாட்டேன். குழந்தைகள் என்றானால் அதன் தொல்லை தாங்க முடியாததாக இருக்கும். நச்சு நச்சுன்னு. நிம்மதி போய்விடும். வருடத்தில் இரண்டு மாதம் நானும், அவளும் ஹாய்யா உல்லாசமாக உலகத்தைச் சுற்றிப் பார்க்க எந்தப் பிக்கலும் பிடுங்கலும் இல்லாமல் கிளம்பணும். அப்படிம்பார். அவர் பேசறதைக் கேட்டா, நாம கூட குழந்தைங்க பெத்துக்கக் கூடாதுன்னு முடிவெடுத்து விடுவோம். குழந்தைகள் சொகுசு வாழ்க்கைக்கு அப்படி ஒரு தொல்லை என்கிற மாதிரிப் பேசுவார்."

நிஷா பேசியதைக் கேட்ட சிந்தியாவின் அழுகை போன இடம் தெரியவில்லை. விழிகள் வெறித்திருந்தன.

"ஆனால் நீ பிரெக்னென்டா இருக்கேன்னு வெங்கட் எங்கிட்டே சொன்னப்ப எவ்வளவு வெட்கப்பட்டார் தெரியுமா? உங்க கனவெல்லாம் என்ன ஆச்சுன்னு நான்

தீண்டினேன். என் சிந்துவின் விருப்பம் என் விருப்பம் அப்படின்னு கை விரிக்க சிரிச்சார்!"

'எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்கிக் கொண்டு ஊருக்குத் தெரியாமல் தன்னோட விருப்பத்தை காதும் காதும் வைச்சாப்ல அழகா முடிச்சட்டு. ச்சே. இவரெல்லாம் ஒருமனிதரா? மூன்று மாதம் இவருடன் வாழ்ந்திருக்கிறேனே என்று உள்ளுக்குள் வெறுத்துப் போனாள்.

'எந்த மானமுள்ள மனிதனாவது தன் குழந்தையைக் கர்ப்பத்திலேயே அழிக்க முயல்வானா?' சிந்தியாவின் நெஞ்சம் படபடவென்று அடித்துக் கொண்டது.

சிந்தியாவின் முகம் சற்றும் தெளிவடையாமல் முறுக்கிக் கொண்டிருக்கவும்,

"முகமெல்லாம் வியர்க்கிறது. ஏன் சிந்து வெங்கட்டை உன்னிடம் வரச் சொல்லவா? ராகுலும் அவரும் அந்த ரூமில் உட்கார்ந்து ஃபேக்டரி விஷயம் பேசறாங்க" என்று விரலால் பக்கத்து அறையைச் சுட்டிக் காட்டினாள். "வெங்கட் ஃபேக்டரியில் ஏதோ ப்ராப்ளம் போல இருக்கு. லேபர்ஸ்க்குள்ளே பயங்கர கலாட்டாவாம்" என்று தொடர்ந்து பேசிய நிஷா சிந்தியாவின் முகம் இருந்த கடுப்பைக் கவனித்து,

"ரொம்பக் கஷ்டமா இருக்கா?" என்று குரலில் கவலையுடன் கேட்டாள். கர்ப்பம் தானாகவே கலைந்திருந்தால் சிந்தியா இவ்வளவு கஷ்டப்படுவாளோ என்னவோ? ஆனால் கர்ப்பம் கலைக்க இரகசியமாக ஏற்பாடு செய்தது தன் கணவன் என்ற நினைப்பைத்தான் அவளால் தீரணிக்க முடியவில்லை.



வெங்கட் போன் மூலம் திருச்சியில் இருக்கும் சிந்தியாவின் அப்பா சூர்யநாராயணனுக்கு விஷயம் சொல்லி விட, மறுநாள் காலையிலேயே அவரும் அவர் மனைவி விமலாவும் சென்னை வந்து சேர்ந்தார்கள். இரக்கமற்ற மிருகத்திடம் வாழ்க்கைப்பட்டோமே என்று தன்னுடைய விதியை எண்ணி நொந்து போய் இருந்த சிந்தியாவுக்குத் தன் பெற்றோரைப் பார்த்ததும்தான் தெம்பே வந்தது.

இனியும், இங்கே இருந்து கணவன் முகத்தையும், அவன் காட்டும் பரிவையும்/பாசத்தையும் காண அவளுக்குத் துளியும் விருப்பமில்லை. அவளுக்கு அது மிகுந்த எரிச்சலை தந்தது. களவுக்குப் பின் கதவை அடைப்பது போல் இப்படி ஒரு கேவலமான காரியத்தைச் செய்து முடித்து விட்டு உருகி உருகி அன்பைக் காட்டினால் என்ன? காட்டா விட்டால் தான் என்ன?

உடம்புப் பிடியாக இருந்து மறுநாளே அவர்களுடன் திருச்சி செல்லத் தயாரானாள்.

"உனக்கு இன்னும் உடம்பு சரியாகவில்லை சிந்து. பெட் ரெஸ்டில் இருக்கணும் என்று டாக்டர் சொல்லியிருக்கிறார். அடுத்த வாரம் நானே உன்னை திருச்சி கூட்டிட்டு போறேன். இப்பொழுது வேண்டாம்" என்று வெங்கட் எவ்வளவோ சொல்லியும் பிடிவாதமாக இருந்தாள் சிந்தியா.

"விடு வெங்கட். அபார்ஷன் ஆனதில் இருந்து ரொம்ப அழுதுகிட்டே இருக்கா. ஒரு வாரம் அம்மா வீட்டில் ஆறுதலாக இருந்து விட்டு வரட்டும். ஆனா ரொம்ப கவனமாக இருக்கணும் சிந்தியா. அதிகமாக நடக்காதே உடம்பை பார்க்கணும்" என்று சொல்லி வெங்கட்டை அடக்கினார் சங்கரி.

அழுத்தமாக ஒரு நெடிய மூச்சை விட்டவள் அதன் பிறகு மறுக்கவில்லை.

படுக்கை வசதிக் கொண்ட ஏர் கண்டிஷன் 'டெம்போ டிராவல்ஸ்' வண்டியில் சிந்தியா வசதியாக பயணிக்கும்படி ஏற்பாடும் செய்தான். வெங்கட் அவளுக்காக பார்த்துப் பார்த்து ஒவ்வொன்றாய் செய்யச் செய்ய, அவள் இளகு வதற்குப் பதில் இறுகிப் போனாள்.

தனியாக தன்னிடம் பேச அவன் முயல்வதை உணர்ந்த சிந்தியா, அதற்கு வாய்ப்புத் தராமல் வண்டியில் ஏறும் வரை தன் தாயுடனேயே ஒட்டிக் கொண்டிருந்தாள்.

அவளின் ஒதுக்கத்தின் காரணம் புரியாமல் புருவத்தை உயர்த்தி குழப்பத்துடன் அவளை செய்வதறியாது முறைத் தான் வெங்கட்.

வெங்கட்டின் முகத்தைக் கூடக் காணப் பிடிக்காமல், அழுகையில் திமிறின உதட்டை அழுந்தக் கடித்துக் கொண்டு, இனி ஒரு போதும் அவன் இருக்கும் இடத்திற்குத் திரும்பி வரப் போவதில்லை என்ற முடிவோடுதான் சிந்தியா திருச்சி பயணமானாள்.




திருச்சி வீட்டிற்கு வந்ததும், அதுவரை அடக்கி வைத்திருந்த அழுகை முட்டிக் கொண்டு வர, தாயின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு பொங்கிப் பொங்கி அழுதாள் சிந்தியா.



வந்ததும் வராததுமாக உடைந்துப் போய் அழும் மகளை விமலாவும், சூர்யநாராயணனும் பார்த்துத் திகைத்துப் போய் நின்றார்கள்.

யோசனையும், கவலையுமாக மகளின் முதுகை வருடிய விமலா, அவளாகவே பேசட்டும் என்று தன் கணவனுக்கு ஜாடை காட்டிப் பேசினாள்.

''நான் ஏமாந்திட்டேன்ப்பா, ஏமாந்து விட்டேன். இனிமேல் என்னவானாலும் திரும்பி அந்த வீட்டுக்குப் போகமாட்டேன். உங்களுடன் இங்கேயே இருப்பேன்'' என்று அழுகையைச் சற்று நிறுத்தி சிந்தியா சொல்ல, ஒன்றும் புரியாதது போல் இருவரும் அதிர்ந்த விழியை அகல விரித்தனர்.

தன்னுடைய கணவனே தன் கருச் சிதைவுக்குக் காரணம் என்று சொல்லக் கூசி,

''அவருக்கு என் மேல் உண்மையான பிரியம் இல்லை. அவரோடு சேர்ந்து வாழ எனக்கு இஷ்டம் இல்லை. எனக்குத் தெரியாமல் அங்கே ஏதேதோ நடக்குது. ப்ளீஸ்பா என்னை அங்கே போகச் சொல்லி, வற்புறுத்தாதீங்க'' என்று தொண்டை கரகரக்க மூச்சு விடாது பேசும் மகளைக் கண்டு திகைத்தனர் பெற்றோர்.

பெண்ணை அருமை பெருமையாக வளர்த்து, சந்தோஷமாக நல்ல இடத்தில் கட்டி கொடுத்து விட்டோம் பெற்றோராக. தங்கள் கடமையைச் செவ்வனே செய்து விட்டதாக எண்ணி அன்று வரை பூரித்துப் போய் இருந்தவர்கள் மகள் சொன்ன செய்தியில் சர்வமும் கலங்கிப் போனார்கள்.

நல்ல குடும்பம், அதோடு மிக அருமையான பிள்ளை. அதுவும் மிகவும் விரும்பி சிந்தியாவை கேட்க, ஜாக்கிரதை

யாக எல்லாம் தீவிர விசாரித்த பிறகுதானே கல்யாணத்தை நடத்தினார்.

எதில் தப்பு வந்தது?

சின்ன விஷயங்களுக்குச் சிந்தியா பிரச்சினை பண்ணும் பெண்ணல்ல. முட்டாள் தனமான முடிவு எடுப்பவளும் அல்ல. சொல்லப் போனால் சூர்யநாராயணன் முடிவு எடுக்கத் தினறும் நிறைய விஷயங்களில் சிந்தியாவின் உதவியை நாடியிருக்கிறார்.

அவளின் முடிவில் எப்பொழுதும் தெளிவு இருக்கும். இரண்டு பக்கங்களின் நியாய அநியாயங்களைப் பட்டியல் போட்டு ஆராய்ந்த பின் முடிவெடுப்பாள். சரி என்று உணர்ந்து விட்டால் அதிலே உறுதியாக உடும்புப் பிடியாக நிற்பாள். முடிவில் இருந்து மாற்றுவதென்பதும் முடியாத காரியம்.

மகளின் குணாதிசயங்கள் மிக அறிந்தவரான சூரிய நாராயணன் கலங்கி மனதை கடினப்பட்டு சமாளித்து,

"யோசித்துதான் பேசறியா சிந்தியா? ஒன்று சொல்றேம்மா, மாப்பிள்ளை தங்கம். அவருக்கு ரொம்பச் சோதனை கொடுத்திடாதே" என்றார்.

மகள் தந்து பித்து என்று பேசியதைக் கேட்டு, அரண்டு போயிருந்த விமலா, கணவன் அமைதியாகப் பேசிய பேச்சைக் கேட்டவுடன் கோபமானாள். ஆனால் மகள் முன்னே தன் கோபத்தைக் காட்டப் பிரியம் இல்லாமல்,

"சிந்து போய் பிரயாணக் களைப்புத் தீர குளிச்சுட்டு வா, நிதானமாப் பேசலாம். எடுத்தோம், கவிழ்த்தோம்ங்கற விஷயமில்லை கல்யாணம்" என்று மகளை அவளுடைய அறைக்கு அனுப்பினாள்.



பிறகு நேரே கணவனிடம் வந்து, "என்னங்க, அவள் மாப்பிள்ளை பிடிக்கவில்லை, அவரோடு சேர்ந்து வாழ மாட்டேன் அப்படி இப்படின்னு உளர்றா, நீங்க அவளுக்கு ஒத்து ஊதற மாதிரிப் பேசறீங்க. நல்ல வார்த்தை நாலு எடுத்துச் சொல்லி இரண்டு நாளையில் கொண்டு போய் அவளை மாப்பிள்ளை வீட்டில் விட்டுவிட்டு வாங்க. இதெல்லாம் ஆறப் போடற விஷயம் இல்லை" என்று சூடாகப் பேசினாள் விமலா.

"ஒரு வாரம் போகட்டும், ஏற்கனவே ரொம்ப களைச்சுப் போயிருக்கா, மெதுவாப் பேசலாம். என்ன பிரச்சினை என்றாலும் சரி பண்ணிடலாம். நீ வேற ரொம்ப அவளை நோகடிக்காதே அவளே சொல்வா" என்றார்.

"என்னத்தைச் சொல்வா? இப்படி ஏதாவது குண்டு போடுவா என்று தெரிஞ்சிருந்தால், அங்கிருந்து கூட்டிட்டே வந்திருக்க மாட்டேன். ஒரு பெண்ணுக்குப் புருஷன்தாங்க எல்லாம். இந்தக் காலத்துப் பெண்களுக்கு இதெல்லாம் தெரிய மாட்டேங்குது.

'இம்'ன்னா உடனே பெட்டியத் தூக்கிட்டு பிறந்த வீட்டுக்கு வந்திடறாங்க,. நம்ம சிந்து அப்படி இல்லேன்னு இல்ல நினைச்சேன்."

"கரு கலைஞ்சு போன சோகத்தில் மனசு வெறுத்து இல்லாததையும், பொல்லாததையும் நினைச்சு வருத்தப்படறா. கொஞ்ச நாள்லே சரியாகிவிடும் விமலா. இந்த நேரத்திலே நாமதான் அவளுக்கு அனுசரணையா இருக்கணும். தன்னாலே தன் புருஷனுக்குக் குழந்தையக் கொடுக்க முடியவில்லை. அடுத்த கருவும் கலைஞ்சிட்டா என்ன பண்ணுவோம்

அப்படின்னு ஒரு பயம் அவளறியாமல் அவளிடம் உருவாகியிருக்கும். அந்த பயம் மனசை விகல்பமாக்கி புருஷனை சந்தேகத்துக்கு உரியவனாக்கிடுச்சு. எல்லோரும் தன்னைத் தனியே விட்டு விடுவாங்களோன்னு தோணி யிருக்கு. இப்ப தேவை அவளுக்கு மன அமைதி. கொஞ்ச நாள் மாப்பிள்ளை கிட்ட இருந்து பிரிந்து இருக்கறதும் நல்லதுதான். தூரப் போகப் போகத்தான் அன்பு வளர்ந்து இறுக்கமாகும்'' என்று சூர்யநாராயணன் தன்னுடைய மனைவிக்கு விளக்கினார்.

மனைவியை ஓரளவு சமாதானப்படுத்தினாலும் அவர் உள்ளுக்குள் சமாதானமாகவில்லை. வெங்கட்டிற்கும், சிந்தியாவிற்கும் இடையில் ஏதோ பிரச்சனை இருக்கிறது. சின்ன விஷயத்திற்கு இவ்வளவு தூரம் பேசக் கூடிய பெண்ணல்ல, எங்கோ பலமாக அடிப்பட்டு வந்திருக்கிறாள் என்று அவர் மனம் உணர்ந்து துடித்தது.

அவளை அவள் போக்கிலேயே விட்டுப் பிடிக்கலாம் என்று முடிவெடுத்தார் அவர்.

''கடவுளே என் செல்ல மகள் வாழ்க்கையைச் சீரமைக்கக் கொடு'' என்று முணங்கலாக வேண்டிக் கொண்டார்.

தொலைபேசியில் வெங்கட் பேசிய போதெல்லாம் டயர்டா இருக்குன்னு தூங்கிக் கொண்டிருக்கிறாள் என்று பதில்தான் கிடைத்தது.

நம்பினான் வெங்கட்

முதல் குழந்தை 'அபார்ஷன்' என்றால் சாதாரண விஷயம் இல்லையே. தாங்கிக் கொள்ள இதயம் வேண்டுமே. உடம்பும்,



மனமும் தளர்ந்து இருக்கும் என்று புரிந்து அவளின் நலத்தை அக்கறையாக விசாரித்தான்.

சூர்ய நாராயணன் ஒன்றும் புரியாமல் விழித்தார். நிஜமாகவே அக்கறைக் காட்டும் வெங்கட் அதில் போலித்தனம் சத்தியமாக இல்லை. தவறு யாரிடம்? குழம்பினார்.

மாலையில் காலேஜ் முடித்து வீடு வந்த இளைய மகள் மஞ்சுவிடமாவது ஏதாவது விஷயம் சிந்து சொல்வாளா? என்று எதிர்பார்த்தார்கள்.

சகோதரிகள் இருவருக்கும் இரு வயதுதான் வித்தியாசம். நல்ல தோழிகளாகப் பழக்கம் இருந்தது. சிந்துவைக் கண்டதும் கண்கள் விரித்தாள். ஆனால் அன்று மலர்ந்த பூ போல் இருக்கும் அவள் முகம் வாடி போயிருந்தது. மஞ்சுவிற்கு அதிர்ச்சியாக இருந்தது.

காரணம் குழந்தை இழப்பு என்று முதலில் அவள் எண்ணினாலும், நாலைந்து நாட்கள் சென்ற பின்பும் அவள் இருந்த நிலையும், கட்டிய கணவனைப் பற்றிய சிறு விஷயங்களைக் கூடப் பகிர்ந்து கொள்ளாத நிலையும் மஞ்சுவை சிந்திக்கத் தூண்டியது. அவளின் சிந்தனைகளின் விளைவாக சிந்தியாவை கேள்விகளும் கேட்டாள்.

பதில் ஒன்றும் புரிந்த மாதிரி முழுதாக வரவில்லை. மொத்தத்தில் சிந்து 'வெங்கட்' என்ற பெயரையே வெறுக்கிறாள் என்று விவரம் மட்டும் தெள்ளத் தெளிவாக மஞ்சுவிற்குப் புரிந்து அதிர்ந்துப் போனாள்.

சிந்துவின் திருமண வாழ்க்கை தொடங்கிய வேகத்திலே முடிந்து விட்டதோ?




சரியாக ஒரே வாரத்தில் வெங்கட் சிந்தியாவை அழைத்துச் செல்ல என்று திருச்சி வந்தான்.

தன் கணவனைக் கண்டதும் நிமிர்ந்து கூட அவன் முகத்தைக் காணப் பிடிக்காமல் தன்னுடைய அறைக்குள் சென்று முடங்கினாள் சிந்தியா.

வெங்கட் புருவத்தை நெறித்தான். இது அவன் எதிர்பாராதது.

சூர்யநாராயணனும், விமலாவும் தன் மகளின் நடத்தைக்கு என்ன பதில் சொல்வது என்று தயங்கிப் போய் நிற்க,

''அத்தான் அக்கா இதை உங்களிடம் கொடுக்கச் சொன்னா'' என்று ஒரு கடிதத்தை தயங்கியபடியே அவன் முன் நீட்டினாள் மஞ்சு.

இது என்ன புது வழக்கம் என்பது போல் வியந்து கடிதத்தை பிரித்து படித்தவனின் நெற்றி நரம்புகள் புடைத்துக் கொண்டு எழும்பின. கை முஷ்டி இறுகியது.

முகம் செவசெவக்க எதிரில் தன்னையே, செய்வதறியாது கவனித்துக் கொண்டிருந்தவர்களைப் பார்த்துவிட்டு, சிந்தியா இருந்த அறையை நோக்கி நடந்தான்.

கட்டிலில் அமர்ந்து மடியில் இருந்த தலையணையில் முகத்தை கவிழ்த்திருந்த சிந்தியாவைக் கண்டதும் அவனையும் மீறி நீண்ட பெருமூச்சு வெளிவந்தது.

அவன் மனைவி



ஆசைக் கொண்டு மணந்த புத்தம் புது மனைவி.

கையில் இருந்த கடிதம் உறுத்த, கடிதத்தை சிந்தியாவின் முன் நீட்டினான் வெங்கட்.

''இதற்கு என்ன அர்த்தம் சிந்தியா?'' என்று கடுமையான குரலில் கேட்டான்.

தலையணையில் இருந்து முகத்தை நிமிர்த்திய சிந்தியா உணர்ச்சியற்ற குரலில்,

''நான் விவாகரத்துக்குத் தயார் என்று அர்த்தம்'' என்றாள்.

''அதுதான் ஏன் என்கிறேன்'' பொறுமையற்ற குரலில் வினவினான்.

அவனைப் பார்த்தால் மிகவும் கடுமையாகப் பேச வேண்டும். அழுது தன்னுடைய பலவீனத்தைக் காட்டக் கூடாது என்று எண்ணியிருந்த சிந்தியாவிற்கு ஒன்றையும் கட்டுக்குள், அடக்க முடியாமல் போயிற்று.

''எனக்கு உங்களைப் பிடிக்கவில்லை. உங்கள் எண்ணங்களைப் பிடிக்கவில்லை. மூன்று மாதம் உங்களுடன் வாழ்ந்த அந்த 'போலி' வாழ்க்கை போதும். இனியும் என்னைத் துன்புறுத்தாதீர்கள். எனக்கு நிம்மதி வேண்டும். என்னை விட்டு விடுங்கள்'' என்று அழுதபடி அவன் இருந்த திசையை நோக்கி கண்களில் நீர் கசிய கையெடுத்துக் கும்பிட்டாள்.

அவள் பேசப் பேச நம்ப முடியாமல் வெறித்துப் பார்த்தான் அவன். அவனுடைய பார்வையில் அடிப்பட்ட சீற்றம் இருந்தது.

அதற்குள் ''மாப்பிள்ளை'' என்று சூர்யநாராயணன் அறைக்குள் வர அவரையும் சிந்தியாவையும் மாறி மாறிப்

பார்த்த வெங்கட், ஏதோ பேச வாய் திறந்து, பின் ஒன்றும் பேசப் பிடிக்காமல் முகம் கடுகடுக்க புயலென வெளியேறினான்.

அதன் பின் அவன் அவளைச் சந்திக்க முயற்சிக்கவே இல்லை.

அது அவன் அவமானம் காரண காரியம் தெளிவாக இல்லாமல் உங்களைப் பிடிக்கவில்லை என்ற மனைவியின் சொற்களில் உள் மனது அடி வாங்கியது.

அது ஆறாத ரணமாக இருந்தது.

நாட்கள் நகரத் தொடங்கியது. இடையில் ஒரு நாள் சங்கரி திடீர் பிரவேசமாக வந்தார்.

வெங்கட்டிடம் அவ்வளவு பேசி அவனை நிராகரித்தவளுக்கு மாமியாரைக் கண்டதும் நா பேச எழும்பவில்லை.

சிந்தியாவைத் தன் பக்கத்தில் அழைத்து ஆசையாக நெற்றியில் முத்தமிட, சிந்தியாவின் கண்களில் கண்ணீர் தளும்பியது. அவளை சங்கரி தன்னுடனேயே சென்னைக்கு அழைத்துச் செல்லப் பிரியப்பட்டார்.

வெங்கட் செய்த காரியத்தை சொல்லத் துடித்த உதட்டை பற்களால் கடித்தாள்.

கணவனின் பாவகாரியத்தை அவனைப் பெற்ற தாயிடம் கூட அவளால் சொல்ல முடியவில்லை.

அவன் செய்த 'பாவ' காரியத்தைச் சொல்லப் போனால் தமுக்கு கட்டி அடித்துச் சொல்லி, அவன் பெயரை நாறடித்திருக்க வேண்டும். அவள் செய்யவில்லை. அவளால்



செய்ய முடியவில்லை. அதன் காரணம் அவளுக்கு விளங்கவில்லை.

"அத்தை கொஞ்ச நாள் அம்மாக்கிட்டே இருந்துட்டு வருகிறேன். என் மனசில் என்னென்னவோ குழப்பங்கள், கேள்விகள் என்னை அலைக்கழிக்கின்றன. இந்த மனநிலையில் நான் அங்கே வருவது எனக்கும் நல்லதில்லை. உங்க மகனுக்கும் நல்லதில்லை. ப்ளீஸ் அத்தை இதுக்கு மேல் என்னை ஒன்றும் கேட்காதீர்கள். ப்ளீஸ்.. ப்ளீஸ்.." கண்கள் தளும்ப ஆனால் உறுதியான குரலில் சிந்தியா பேசினாள்.

ஒரேயடியாக வர முடியாது என்ற முடிவை அவள் வாயால் அவரின் முகம் பார்த்துச் சொல்லத் தைரியம் வரவில்லை. பெற்ற மகளைப் போல அவளை அவர் மூன்று மாதம் நடத்தியது அவள் நெஞ்சில் ஓர் ஆழ்ந்த அன்பை அவர் மேல் உண்டாக்கியிருந்தது உண்மை.

கண்களை மூடி ஒரு நிமிடம் அமைதிக் காத்தார் சங்கரி. பின் "சிந்து, உனக்கும், வெங்கட்டிற்கும் என்ன மனக்குழப்பம் என்று உனக்குச் சொல்ல விருப்பம் இல்லை என்றால் நான் கேட்க மாட்டேன். ஆனால், என்ன விஷயம் என்றாலும் நீ இங்கே இருப்பது தப்பும்மா. உனக்கு எப்பொழுதும், எந்த விஷயத்திலும் கை கொடுக்க நானிருக்கிறேன். அதுதான் உன் வீடு. நீ அங்கேதான் இருக்கணும், புரிஞ்சுக்கோ சிந்து" என்று மன்றாடலாய் முடித்தார் அவர்.

அதற்கும் பதில் பேசாமல் சிந்தியா தலைகுனிந்தபடி மவுனமாக நிற்க,

"சிந்து குழந்தை என்பது கடவுள் செயல். அது கடவுளால் தீர்மானிக்கப்பட்டு நமக்குக் கிடைக்கும் புதையல். அது தவறினால் நீயோ, அவனோ பொறுப்பல்ல" என்று அவர் பேச

இந்தத் தவற்றுக்கு அவன்தானே நூறு சதவீதம் பொறுப்பு. சிந்துவின் நெஞ்சு துடிதுடித்தது. வலித்தது.

'இவர் பேசுவதைப் பார்த்தால் மகனின் தப்புக் காரியத்திற்குக் கூட சேர்ந்து ஒத்துழைப்புக் கொடுத்தாரா?' என்று கேட்க நா துடிதுடித்தது. ஆனால் நியாயமுள்ள அவள் நெஞ்சம், மாமியாரின் மேல் பழியைப் போட்டதற்கு நொந்தது.

மருமகளின் பல முகபாவ மாற்றங்களில், சங்கரி அவளின் கரங்களை மெல்ல அழுத்தினார். அதில் ஆறுதல் தெரிந்தது. சிந்துவின் மனம் பல விதங்களில் குழம்பிக் கொண்டிருப்பதற்கு முகம் சாட்சியளிக்க சங்கரி மெல்ல எழுந்தார்.

''என் மகனிடம் தப்பு இருக்கிறது என்று உன் முகம் சொல்கிறது சிந்து. என்னால் அதை நம்பவே முடியவில்லை. ஆனால் எதுவென்றாலும் பேசித் தீர்க்கலாம்'' என்று கண்கலங்கிப் பேசினார்.

தம்பதியரை இணைக்க பெரியவர்கள் எடுத்த இந்த முயற்சிக்கு சிந்தியா ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை. விடாமல் முயன்று பார்த்த பெரியவர்களுக்கும் சிந்தியாவின் மேல் கோபம் வந்தது நியாயமே. வெங்கட்டிற்குக் காரணம் புரியாத நிலை அவளைத் தேடும் தன் மன நிலையை யாரும் அறியாமல் கட்டுப்படுத்தினான்.

எதையோ மனதில் வைத்துக் கொண்டு வெங்கட்டை வெறுக்கும் சிந்தியா காரணத்தைச் சொல்ல மறுக்க, சூர்ய நாராயணன் ஒருவேளை மாப்பிள்ளைக்கு வேறு ஏதாவது பெண் தொடர்பு இருந்து மகள் கண்டுபிடித்து விட்டாளோ? என்ற பெரும் சந்தேகத்தைத் தவிர வேறு ஒன்றும் தோன்றாத



தால், சிந்தியாவிடம் அதைப் பற்றிப் பேசிப் பார்க்க, சிந்தியா தந்தையைத் திடுக்கிட்டுப் பார்த்தாள்.

சூர்யநாராயணன் மேலும் துருவ,

''அப்படி எதுவும் இருந்ததாக எனக்குத் தெரியாது. சொல்லப் போனால் அவரைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது'' என்று கசங்கிய நெஞ்சுடன் அழுகையின் குழறின குரலில் சிந்து சொல்ல,

சூர்யநாராயணன் திகைத்தார்.

எப்படிப் பேசினாலும், எந்த வகையில் பேசினாலும் சிந்துவிடமிருந்து வேண்டிய செய்தி வரவில்லை.




**சி**ந்தியா முழுவதும் வீட்டிலேயே சோம்பிப் போய் பழைய நினைவுகளில் மூழ்கிக் கிடக்காமல், ஒரே மாதத்தில் தன் தோழியின் உதவியுடன் திருச்சி கம்ப்யூட்டர் கல்வி நிறுவனத்தில் வேலையில் அமர்ந்தாள். வேலையில் ஒன்றியும் போனாள்.

''என்னம்மா இதெல்லாம்'' என்று கவலையுடன் கேட்ட தந்தையிடம் ''பொழுது போகவில்லைப்பா'' என்று கைவிரித்துச் சொன்னாள்.

அக்கம்பக்கத்து மனிதர்களின் குசுகுசு பேச்சு அவள் காதில் விழுந்ததாகவே தெரியவில்லை. ஏதோ அவள் வாழ்வில் திருமணம் என்ற ஒன்று நடந்ததை முற்றிலும் மறந்து விட்டதைப் போல் நடந்து கொண்டாள்.

ஆனால், வெளியில் வெங்கட்டை மறந்து விட்டதைப் போல் காட்டிக் கொண்டாலும், சுற்றிச் சுற்றி அவளது உள்ளம் அவனுடைய நினைப்பையே அசை போட்டது. ஏமாற்றப் பட்ட நெஞ்சு பரிதவித்துப் போனது.

நன்றாக யோசனை செய்து பார்த்ததில் வெங்கட்டுக்கு ஒருநாளும் ஒரு பொழுதும் அவள் மேல் பிரியம் இருந்ததைப் போல் தோன்றவில்லை. பிரியம் இருந்திருந்தால் அவள் ஆசையுடன் போற்றியிருந்த தாய்மை பருவத்தை முளையிலேயே கிள்ளி விட்டிருப்பானா?

கல்யாணமான இந்த மூன்று மாதங்களில் அவன் அவளுடன் பகிர்ந்து கொண்டது வெகு சொற்ப நேரம்தான். எந்த நேரமும், ஃபேக்டரி வேலை என்று ஓடி ஓடி அலைந்தவன் அவளுடன் பகிர்ந்து கொண்டது சரியாக சொல்லப் போனால் இரவு வேளையை மட்டும்தான். அப்பொழுது அதை பெரும் பாக்கியமாக நினைத்துப் பூரித்துப் போய் இருந்தவளுக்கு இப்பொழுது அதை நினைத்தாலே அறுவெறுப்பாக இருந்தது.

அவனைப் பற்றி அவனுடைய குணாதிசயங்களைப் பற்றி சிந்தித்துப் பார்த்தவளுக்கு அவனைப் பற்றித் தனக்கு ஒன்றுமே தெரியாது என்பது 'பொட்டில்' அறைந்தாற் போல் புரிந்தது.

அவனுக்கு நானோ, என் மனசோ முக்கியமாக இருக்க வில்லை. என் தேகம்தான் வேண்டியிருக்கிறது என்று தெள்ளத் தெளிவாகப் புரிந்தபோது நெஞ்சில் வலிக்கிறது.

இப்படியாக அவனைப் பற்றி நினைப்பதும், தன் மனதை வதைத்துக் கொள்வதுமாக நாட்களைக் கழித்தாள் சிந்தியா.



நாட்கள் மெல்ல ஊர்ந்து வாரங்களாகி பின் மாதங்களாகி பிறகு வருடங்களாகியது. இரண்டாவது வருடத்தையும் தொட்டது.

இந்த இரண்டு வருடங்களில் வெங்கட்டின் நினைவுகள் கொஞ்சம் கொஞ்சமாக சிந்தியாவின் நெஞ்சிலிருந்து அடியோடு மறைந்து விட்டது. அல்லது மறந்து விட்டது என்று தன்னையே ஏமாற்றிக் கொண்டாளோ?

இடைப்பட்ட காலத்தில் சங்கரி இடை இடையே தொலைபேசியில் சிந்தியாவுடன் பேசுவதுண்டு. மகனைப் பற்றிப் பேசினால் அவளிடம் இருந்து பதில் கிளம்பாததில், பொது விஷயமாகப் பேசத் தொடங்கினார். ஆனாலும் அவளின் தொடர்பை நிறுத்தவேயில்லை. முதலில் அவரிடம் பேசச் சிந்தியா தயங்கினாலும், 'மாமியார்' என்ற நினைப்பை உதறி, தன் மேல் அன்பு கொண்ட அன்பான உறவினர் என்று தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டு அவரிடம் பேசினாள்.

ஒரு தீபாவளி நாள் அன்று வீட்டிற்கு வந்து மருமகளை கவனித்து விட்டு பின் கிளம்பும் போது கண் கலங்கச் சென்றார்.

கள்ளம் கபடமற்ற அமைதியான சிந்தியாவின் முகம் பார்த்து, மகனின் வாழ்க்கையை கெடுத்து விட்டாயே என்று மிரட்டவோ, அதட்டவோ, முடியாமல் போயிற்று அவரால்.

பிரிவில் கணவன் மனைவி இருவரும் சந்தோஷித்திருக்க வில்லை என்பதை அவரால் புரிந்துக் கொள்ள முடிந்தது. ஒருநாள் இருவரும் ஒன்று சேருவார்கள் என்ற அலாதியான நம்பிக்கை அவரிடம் இருந்தது.

குருட்டு நம்பிக்கையா? இல்லை தீர்க்கதரிசி நம்பிக்கையா?

நாட்கள் மெல்ல உருண்டோடியது.

சிந்தியா வேலை பார்த்த கம்ப்யூட்டர் நிறுவனத்தில் ப்ராஜக்ட் லீடர் ஆக இருந்த பிரகாஷ், சிந்தியாவுக்குக் கிடைத்துக் கொண்டிருந்த கொஞ்ச நஞ்ச நிம்மதிக்கும் குழி வெட்டினான்.

அவளை உயிருக்குயிராக காதலிக்கிறானாம். சிந்தியாவுக்கு அவனை இழுத்து வைத்து அறையலாம் போல் இருந்தது. ஆனாலும் கொதித்த மனதை மிகவும் கட்டுப்படுத்திக் கொண்டு பொறுமையாக,

"நான் மணமானவள் பிரகாஷ். இந்த மாதிரி எல்லாம் என்னிடம் பேசாதே" என்று சின்னப் பிள்ளையிடம் பேசுவதைப் போல் பேசினாள்.

"உன் விஷயம் தெரியும். கேள்விப்பட்டேன். அது முடிந்து போன கதைதானே சிந்தியா..."

என்று தொடர்ந்து பேசியவன் அருகில் நிற்கக் கூடப் பிடிக்காமல் ஒரு முறைப்புடன் மேலே நடந்தாள் சிந்தியா.

ஆனால் அடுத்து வந்த நாட்களிலும் அவளைத் தேடி வந்து தேவையில்லாமல் பேச்சுக்களைத் தொடர, சிந்தியா விலகிப் போனாள்.

போதாதற்கு ஒருநாள், பிர்காஷ் தாய் தந்தையரையும் அழைத்துக் கொண்டு, வீடு ஏறி வந்து சம்பிரதாயமாக சிந்துவை மணம் புரிய விரும்புவதாகக் கேட்க, உடம்பெல்லாம் தீப்பற்றி எரிவது போல் தவித்துப் போனாள்.



அவர்கள் போன பின்பு தந்தை பேசிய பேச்சிலும் கூட சிந்தியா பிரம்மைப் பிடித்துப் போனாள்.

மறுமணம்?!

எப்படி சாத்தியம்?!

மறுமணம் பற்றிய பேச்சில், இரண்டு நாட்கள் சிந்தியா இருந்த இருப்பில் மீண்டும் யாரும் சிந்தியாவிடம் மறுமணத்தைப் பற்றிப் பேச பயந்தார்கள்.

நிறுவனத்தில் பிரகாஷ் மீண்டும் அவளை அணுக, ஒரே வார்த்தையில் முடியாது. பிடிக்கவில்லை என்று முகத்தில் அடித்தாற் போல் அவனுக்குப் பதில் கொடுத்தாள். அது அவன் மண்டையில் உறைத்ததுபோல் தெரியவில்லை. அவளையேச் சுற்றிச் சுற்றி வந்து கண்களில் முகத்தில் ஏக்கத்தைப் பிரதிபலித்துக் கொண்டு நிற்க, சிந்தியாவிற்குப் பற்றிக் கொண்டு வந்தது.

சிந்தியாவின் சின்னஞ்சிறு நெஞ்சில், வெங்கட்டின் நினைவுகள், அவள் மறுத்தாலும், நிலைத்திருந்தது உண்மை.




சூர்யநாராயணனுக்கு வேலை திருச்சியிலிருந்து சென்னைக்கு மாற்றலானது.

மறுபடியும் சென்னைக்கா என்று சிந்தியாவிற்கு உள்ளூர கலக்கம் ஏற்பட்டாலும் தயங்காமல் சென்னை வந்தாள். கூடவே பிரகாஷின் தொந்தரவில் இருந்து விடுதலை என்ற உள்ளூர சந்தோஷம் இருந்தது நிஜம்.

ஊர் மாற்றத்தினால் திருச்சியில் தொலைத்த வேலையை சென்னையில் சுறுசுறுப்பாகத் தேடினாள்.

மஞ்சு காலேஜ் படிப்பை முடித்து விட்டதால் அவளுக்கு வரன் தேடும் படலத்தை மும்முரமாகத் தொடங்கினார் சூர்யநாராயணன்.

தங்கையின் திருமணம் என்ற பேச்சு வந்தவுடனேயே சிந்தியாவின் நினைவுகள் சிதற ஆரம்பித்து விட்டது.

பெண்ணாகப் பிறந்தவளுக்கு பூரணத்துவம் கிடைக்கும் தாய்மை பேறு இல்லாமல் பெண்மைக்குப் பெருமை கிடையாது என்பது அவளுடைய வாதம். இந்த ஜென்மத்தில் அந்தப் பெருமை அவளுக்கு கிடைக்கப் போவதில்லை. அவளுடைய பிறப்பும் முழுமை பெறப் போவதில்லை என்ற ஏக்கம் அவளிடம் உண்டு.

மஞ்சுவிற்காவது நல்ல முறையில் இன்பமான வாழ்வு அமைய வேண்டும் என்று மனமாரக் கடவுளைப் பிரார்த்தித்தாள் சிந்தியா.

மஞ்சு சிந்தியாவைப் போல கண்டு இழுக்கும் வசீகர அழகு இல்லை என்றாலும் அவளும் சராசரிக்கும் மேற்பட்ட அழகுதான். அதனால் வரன் அமைவதில் அவ்வளவு சிரமம் இருக்காது என்று எண்ணியிருந்த சூர்யநாராயணன் தம்பதியருக்கு ஏமாற்றம்தான்.

இரண்டு குடும்பம் வீடு வரை வந்து மஞ்சுவைப் பெண் பார்த்து விட்டுச் சென்று பிடிக்கவில்லை என்று கடிதம் எழுதினார்கள்.

சிந்தியாவிற்கு ஒரே ஆச்சரியம்.



மஞ்சுவைப் பிடிக்காமல் போக எப்படி முடியும்? அதுவும் ஒருத்தருக்கு இரண்டு பேராக ஒரே மாதிரி முடிவு.

யோசித்துப் பார்த்தும் விடை கிடைக்கவில்லை. அவளுக்கு அன்று ஒரு இன்டர்வியூ. அட்டெண்ட் பண்ணிட்டு வீட்டுக்குள் நுழைந்தபோது அவள் வீட்டில் இல்லை என்று எண்ணி, அம்மாவும், அப்பாவும் பேசிக் கொண்டிருப்பது கேட்டது.

"ஆயிரம் காலத்து திருமண பந்தத்தை பெரியவள் இவ்வளவு சீக்கிரம் வெட்டிவிட்டு வந்திருக்கா. சின்னவளும் அப்படிச் செய்ய மாட்டாங்கறது என்ன நிச்சயம் அப்டின்னா அந்த வரன் வீட்டில் சொன்னப்ப அவங்களை வெட்டி போட்றலாம் போல் கோபம் வந்தது விமலா. ஏற்கனவே புண்ணோட இருக்கிறவங்க மனசை பிராண்டி விடுவதில் இந்த மனுசங்களுக்கு என்ன சந்தோஷமோ?" என்ற அப்பாவின் மெல்லிய குரல் கேட்டு அதிர்ந்து சத்தமில்லாமல் கதவில் சாய்ந்தாள் சிந்தியா. கடைசியாக நான்தான் மஞ்சுவின் வாழ்க்கைக்குத் தடையாக இருக்கிறேனா என்று கண்களில் நீர் துளிர்க்க சிலையென்று உறைந்தாள்.

"சிந்துவை நினைக்க நான் அழாத நாளில்லை. வெளியில் நமக்காகச் சிரித்தாலும் உள்ளுக்குள்ளே எதையோ நினைத்து புழுங்கிப் போறா. அது என்னனும்தான் எனக்குப் புரிய வில்லை. அப்படி என்னதான் அவளுக்கும் வெங்கட்டுக்கும் இடையில் நடந்திருக்குமோ? பெத்த தாய் எங்கிட்ட கூட விஷயம் என்னன்னு இதுவரை அவள் மூச்சு விட்டது இல்லை" என்று புலம்பினாள் விமலா.

"பெரிய இடம்னு சட்டு புட்டுன்னு சிந்துவைக் கட்டிக் கொடுத்தாப்ல மஞ்சுவை கட்டிக் கொடுத்திடக் கூடாது

விமலா. அவள் மனசுக்குப் பிடிச்சவனா பார்த்துக் கட்டி வைக்கணும். அப்பதான் ஒட்டுறவா இருக்க முடியும்" என்று அவர் தொடர்ந்து ஏதேதோ பேச, சிந்தியாவின் காதில் ஒன்றும் தெளிவாக விழவில்லை.

தன்னால் தங்கையின் திருமணம் தடைப்படுகிறது என்ற நினைப்பை அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அப்பொழுதுதான் வீட்டிற்குள் நுழைவதைப் போல பாவனை செய்து நடந்தவள், பின் தன் அறைக்குள் போய் படுக்கையில் விழுந்து அழுகையில் குலுங்கினாள்.

அன்று இரவு முழுவதும் அவளால் தூங்கவே முடியவில்லை. ஏதோ முள்ளின் மேல் படுத்து இருப்பதைப் போன்ற உணர்வுதான் அவளுக்கு இருந்தது.

இந்த துன்பத்தில் இருந்து மீளுவது எப்படி என்று மண்டையை உடைத்த சிந்தியாவுக்கு மறுநாளே வழி கிடைத்தது.




அன்று சூர்யநாராயணன் வீட்டிற்கு வரும் போதே யோசனையாக இருந்தார்.

உடை மாற்றி, டிபன் சாப்பிட்டு முடிக்கும் வரை ஒன்றுமே பேசவில்லை. விஷயம் ஏதாவது பெரிய விஷயமாக இருந்தால் அவர் முடிவெடுக்கத் திணறி விடுவார். மவுனமாகவே இருப்பார். அதனால் அவரைப் பார்த்த மாத்திரத்திலேயே ஏதோ பிரச்சனை என்று புரிந்து விடும்.

வேலை மாற்றலில் சென்னை வந்தே இரண்டு மூன்று மாதங்கள்தானே இருக்கும். அதற்குள் வேறு மாற்றல் வந்து



விட்டதா? இல்லை வேறு என்ன பிரச்சினையாக இருக்கும்? என்று வீட்டில் பெண்கள் மூவரும் யோசனையில் இருக்கத் திடீரென்று சூர்யநாராயணன் பேசத் தொடங்கினார்.

"இன்று 'நம்ம' மாப்பிள்ளையிடம் இருந்து எனக்கு போன் வந்தது" என்று மெல்ல விஷயத்திற்கு வந்தார்.

"எந்த மா.." என்று தொடங்கிய விமலா கண்களின் பார்வை சிந்துவின் மேல் நிலையாக இருக்கக் கண்டவுடன் ஒரு நொடி அவரின் நெஞ்சம் துடிப்பை நிறுத்தியது.

தந்தையின் பார்வை சொன்ன பதிலில் சிந்துவின் அழகிய முகம் இறுகியது. ஆனால் வாய் ஒற்றை வார்த்தையில் உடனே கேள்வியும் கேட்டது.

"ஏன்?"

"சம்பந்தியம்மாவிற்கு உடல் நலம் சரியில்லையாம். இரண்டு மாதமாகவே படுக்கைதான் போல. ஒழுங்காக சிகிச்சை எடுத்துக் கொள்ள மறுக்கிறார்களாம். உன்னை ரொம்பத் தேடுகிறாராம். எப்பொழுதும் உன் பெயர்தானாம். என்ன செய்யலாம் சொல்லு" என்று சிந்தியாவிடம் கேள்வி கேட்டார் சூர்யநாராயணன்.

சிறிது நேரம் சிந்தியாவிடம் ஒரு அசைவையும் காணோம்.

மீண்டும் சூர்யநாராயணன் பேச்சை மெதுவாக ஆரம்பித்தார்.

"நீங்கள் இருவரும் ஒன்றாக சேர்ந்திருப்பதை கண் நிறைய பார்க்க வேண்டுமாம். அப்படி என்றால் அவர் உயிர் வாழ்வதில் ஒரு அர்த்தம் இருக்குமாம். கணவனை சிறு வயதிலேயே இழந்து கஷ்டப்பட்டு ஒற்றை வாழ்க்கையை

வாழ்ந்தவர், மீண்டும் மகனும் அதேபோல இருப்பதைக் கண்டால் அவரால் தாங்க முடியவில்லையாம். வாழ்ந்த வாழ்க்கையில் ஒரு நிறைவும் இல்லையாம். இதெல்லாம் மாப்பிள்ளை சொல்லவில்லை. போன் மூலம் சம்பந்தியம்மாவின் உடல் நிலை மோசமாக இருக்கிறது என்று மாப்பிள்ளை சொன்னதும் எனக்கு இருப்பே கொள்ளவில்லை. உடனே ஆபீஸில் 'பர்மிஷன்' போட்டு விட்டு அவர்களைப் பார்க்க வீட்டுக்குச் சென்றேன். சம்பந்தியம்மாவைப் பார்த்துப் பேசியதிலிருந்து எனக்கு மனசே சரியில்லை.

ஒரு உயிர் மனநிறைவேயில்லாமல் பிரியணுமா? ட்ரீட்மெண்ட் எடுத்துக் கொள்ள முழு ஒத்துழைப்பும் கொடுத்தால் நூறு சதவீதம் பிழைப்பதற்கு வாய்ப்பு இருக்கும் போது ஒத்துழைப்புத் தர மறுப்பது தற்கொலைக்குச் சமானம் அல்லவா? அதைத் தவிர்க்க உன்னால் முடியும். நீ அவர்கள் வீட்டிற்குச் சென்றாலே பாதி வியாதி குறைந்த மாதிரிதான் அட்லீஸ்ட் அவர்கள் குணமாகும் வரையாவது வெங்கட் மனைவியாக அங்கு இரும்மா பிறகு எல்லாம் விதிவசம்."

சேர்ந்திருப்பதைப் பார்க்க வேண்டுமா? சிந்து அந்த வார்த்தையில் குழைந்துப் போனாள்.

அது எப்படி முடியும்? சாத்தியம்? தன்னிச்சையாக கால்கள் அவளை அவனுடைய அறைக்குள் அழைத்துச் சென்றது. நாற்காலியில் அமர்ந்து சில நிமிடங்கள் கண்களை மூடினாள். வேகமாக படபடத்த இதயம் ஓரளவு சீரானது. செய்தியைக் கேட்டதும் முதலில் தோன்றிய கோபம் மறைய, அவளுள் ஓர் நிதானம் வந்தது.

அவளால் ஓர் உயிரை பிழைக்க வைக்க முடியும் என்றால் அவள் உதவுவது அவசியமல்லவா? அதுவும் தாயைப் போல



மிகப் பிரியமான பெண்மணி கடந்த சில மாதங்களாகவே அவரின் தொடர்பு இல்லாததற்குத் தானாகவே பல காரணங்களைக் கற்பித்துக் கொண்டிருந்தாள். ஆனால் அப்படி திடகாத்திரமாக ஆரோக்கியமாக இருந்தவர் உடல் நிலை பாதிப்படைந்திருப்பார் என்று எண்ணிப் பார்க்கவேயில்லை.

இவள் மாமியார் வீட்டிற்குச் சென்றால் மஞ்சுவின் திருமணத்திற்கு முட்டுக் கட்டையாக தான் நிற்கும் நிலை மாறப் போகுமே.

அவளால் எத்தனைப் பேரின் நிம்மதி கெடுகிறது. அவளுக்கு இந்த ஜென்மத்தில் நிம்மதி கிடைக்கப் போவதில்லை. மற்றவர்களின் நிம்மதிக்காகவாவது சில காலம் வாழ்ந்தால் சரி என்று மனசு முடிவெடுத்தது.

ஆனால் வெங்கட்?

அவன் மனதில், வாழ்க்கையில் அவளுக்கு இடம் கிடையாது என்று தெள்ளத் தெளிவாக அவளுக்கு உணர்த்தியிருந்தான், சிந்தியா. புகுந்த வீட்டில் வாழும் நாட்களில் அவனால் எந்த இடைஞ்சல்களும் இருக்கப் போவதில்லை என்று நம்பினாள் சிந்தியா.

சில காலம் தானே என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள்.

அந்த சில காலம். மஞ்சுவின் திருமணம் முடிவதும், மாமியாரின் உடல் நிலை சரியாவதும் என்று அவள் முடிவெடுத்தாள். மாமியார் முழுவதும் குணமானபின், அவர் மகன் செய்த அநியாயத்தை எடுத்துரைத்து, அதன் பிறகும் தன்னால் அவனுடன் வாழ முடியாது என்று புரிய வைத்து

கிளம்பி விட வேண்டும் என மனதுள் உறுதி கொண்டாள் சிந்தியா.

சிந்தியாவின் முடிவில் சூர்யநாராயணனும் விமலாவும் உள்ளூர சந்தோஷமடைந்தனர்.

இவ்வளவு சுலபத்தில் சரி சொல்வாள் என்றே அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

விமலா இரவே மகளின் துணிமணிகள் அடங்கிய பெட்டியை 'ரெடி' செய்து விட்டார்.

சிந்துவின் உள்ளத்தில் பயங்கர போராட்டம் நடந்து கொண்டிருந்தது. அதுநாள் வரையில் அவள் வாழ்க்கையில் முடிந்து விட்ட அத்தியாயமாக இருந்த புகுந்த வீடு மீண்டும் தொடரப் போவது, அவளுக்குக் கனவு போல இருந்தது.

சில காலம் வரை மட்டுமே, மாமியார் குணமாகும் வரையில் மட்டுமே என்று எவ்வளவோ தன்னைத் தானே சமாதானப்படுத்தியும் கூட உள்ளுக்குள் ஏனென்றே தோன்றாத கலக்கம் நிறைந்திருந்தது.

மஞ்சுவின் பார்வை யோசனையுடன் சிந்துவின்மேல் இருந்ததை அவள் உணரவில்லை.

போகவேண்டும் என்று முடிவெடுத்தபின் நாட்களைத் தள்ளிப் போடக் கூடாது என்று சொல்லி சூர்யநாராயணன் உடனே மருமகனுக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

"சிந்து நாளை காலை மாப்பிள்ளையே வருகிறாராம். உன்னை அழைத்துப் போக" என்றார் ஏதோ மலையையே நகர்த்தியது போன்ற உணர்வு அவருக்குள்.



அவரைப் பொருத்த வரையில் மாப்பிள்ளையின் மேல் எந்தத் தவறும் இருப்பதாகத் தெரியவில்லை. இன்னும் வேறு பெண் தேடாமல், விவாகரத்துக் கோராமல் இடையிடையே அவரிடமும் நலம் விசாரிப்பதும் நல்ல மனிதனின் பண்பல்லவா?

மகள் மனம் மாறும் என்று இந்த இரண்டு வருடம் பொறுமை காத்தவர் அதுதானே நடக்கப் போவதில்லை என்று புரிந்து கொண்டார். இப்படி ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது நல்லதற்கே என்று மனதுள் எண்ணிக் கொண்டார். இந்த முறை மாப்பிள்ளை வீட்டிற்கு சிந்து போவதற்கு சரி சொல்லவே, இனி அவர்களின் எதிர்காலம் நல்ல முறையில் அமைந்து விடும் என்று எதிர்பார்க்கத் தொடங்கி விட்டார்.

வீம்பு பிடிவாதம் பிடிக்கும் மகள் எடுத்த முடிவில் இருந்து மீண்டும் மாறி விடுவாளோ என்று விமலாவிற்கு உள்ளூரப் பயமாக இருந்தது.




மறுநாள் காலை உணவு முடிந்தவுடன் வாசலில் மணி அடிக்க, அங்கே வெங்கட்டைக் கண்டதும் சிந்துவிற்குச் சில நொடிகள் சுவாசம் தடைப்பட்டது. எதிர்பார்த்திருந்த சந்திப்பு என்றாலும் அவனை இரண்டு வருடங்களுக்குப் பிறகு காணவும், பவுர்ணமி அலை போல் பழைய நினைவுகள் மடமடவென்று கிளம்பின. அவனைப் பார்த்த மாத்திரத்தில் உள்ளுக்குள் எழுந்த ஏக்கத்தின் பரிமாணம் அவள் நினைத்தும் பாராத அளவு ஏகப்பட்டதாக இருந்தது. அந்த ஏக்கத்தின் காரணமாக சிவரப் புரியாத

நிலையில் நெஞ்சம் வேறு படபடக்கக் கதவைத் திறந்த நிலையில் நிறுத்தி விட்டு, சட்டென்று முகம் திருப்பி உள்ளே நகர்ந்தாள்.

கூடவே நடந்தவன், பார்வை, அவளை விட்டு நொடி கூட விலகவில்லை. உச்சி முதல் அடி வரை அவனின் பார்வை அவள் நடக்கையில் கூடவே சென்றது.

அவனுடையவள்!

அந்த உணர்வுதான் இத்தனை வருடம் கழித்துப் பார்த்த பின்பும் மேலோங்கியிருந்தது. திடீரென்று ஒரு வார்த்தை கூட அவனிடம் பேச மறுத்தவள், வெறுத்தவள் காரணமே புரியாத நிலை அவனுக்கு பெண்கள் விநோதமானவர்கள், பெண்கள் புரியாத புதிர் என்றெல்லாம் கேள்விப்பட்டிருந்தான். ஆனால் அவன் கைபிடித்தவள் அதை அவனை உணர வைத்து விட்டாள். இரண்டு வருடமாகவே பிரிவு என்பது இருவரில் யாருக்கேனும் இன்பமாக இருந்தால் அதில் நியாயம் உண்டுதான். ஆனால் இவர்கள் பிரிவில் இருவருமே சந்தோஷமாக இல்லையே என்பது முக்கியமான விஷயம். வெங்கட் கவனித்துக் கொண்டுதானே இருந்தான். அவளும் சந்தோஷமாக இல்லை என்பது தெரியுமாகையால், அவனுக்குக் கட்டுக் கடங்காத கோபம் உண்டு. ஆனால் உள்ளுக்குள் கட்டியவள் மேல் இருந்த காதலில் அந்தக் கோபத்தின் அளவு கடலில் கரைந்த காயமாக போனதென்னவோ நிஜம்.

"அட மாப்பிள்ளை" என்று ஓடி வந்த விமலா உபசரிக்கத் தொடங்கினார். சூர்யநாராயணனும் உபசரிப்பில் இருந்த ஆர்வம் காட்டினார். மஞ்சு வரவேற்பாகச் சின்ன சிரிப்பொன்றை உதிர்த்தாள்.



சிந்து, வெங்கட்டுடன் காரில் ஏறிச் செல்லும் வரை சூர்யநாராயணனுக்கு உள்ளூரப் பதட்டமாகவே இருந்தது. தடாலடியாக முடியாது என்று சொல்லிவிடுவாளோ என்று பயமாகவே இருந்தது.

வெங்கட் அவள் இருந்த பக்கம் திரும்பப் பிரியம் இல்லாதவன் போல சாலையைப் பார்த்துக் கொண்டு தீவிரமாக எதையோ சிந்தித்துக் கொண்டு காரை ஓட்டினான். தாயிடம் போய் சேருவதற்குள் ஏதாவது அவனிடம் பேசி வீண் மன உளைச்சல் ஏற்பட்டு விடுமோ? என்ற கவலை அவளை அமைதியாக்கியது.

அவனைச் சிறிதும் பொருட்படுத்தாமல் வீடு வந்து சேரும் வரை தன் தலைவிதியை நொந்தபடி அமர்ந்திருந்தாள் சிந்தியா.

அங்கே மவுனம் நீடித்தது.




இத்தனை வருடங்களுக்குப் பிறகு சிந்தியா தான் புகுந்த வீட்டில் காலடி எடுத்து வைத்தபோது அவளால் இயல்பாகவே இருக்க முடியவில்லை. கனவு போல் வாழ்ந்த திருமண வாழ்க்கை அவள் நெஞ்சில் இன்னும் தெளிவான அழுத்தமான நினைவாகவே இருந்தது. சடாரென்று கண்கள் கண்ணீரால் நிறைந்து போயிற்று. நெஞ்சம் படபடவென்று வேகமாக அடிக்க, கைவிரல்களிலும் லேசான நடுக்கம் மெல்ல பரவவும் சமாளிக்க முடியாதோ என்று சிந்தியா திகைத்துப் போனாள்.

இவ்வளவு தூரம் அவள் பாதிக்கப்படுவாள் என்று நினைத்துப் பார்க்கவில்லை.

அவளின் தவிப்பை உணர்ந்த வெங்கட் நொடியும் யோசிக்காமல் அவளை நிதானப்படுத்த அவள் கைவிரல்களை இறுகப்பற்றினான்.

இப்படித்தான் இதைப் போலவேதான், திருமணமாகி முதன் முதலாக கணவனுடன் நெஞ்சமும் முகமும், பூரிப்பிலும், சந்தோஷத்திலும் மலர அவள் வீட்டில் நுழைகையில் திடீரென்று இனம் புரியாத பதட்டம் அவளை ஆக்கிரமித்ததும் அன்றும் வெங்கட் அவளின் மாற்றத்தை நொடியில் புரிந்து கொண்டு சட்டென்று அவள் கரம் பற்றி அழுத்தினான். அன்று அவனின் சிறு கை அழுத்தத்தில் நெஞ்சில் தோன்றிய கலவைகள் இருந்த இடம் தெரியாமல் காணாமல் போயின.

ஆனால் இன்று அவன் கைகளின் இறுக்கத்தில் சிந்துவின் நெஞ்சில் அனல் பறந்தது. அதன் சூட்டில் அவள் கண்களில் தேங்கியிருந்த கண்ணீரும் வறண்டு போனது.

அவளை அவன் தொடுவதா?

எவ்வளவு தைரியம்?

அவள் கண்கள் நிமிர்ந்து அவனைப் பார்க்கையில் வெறுப்பில் மிளிர்ந்தது. அதே வெறுப்பில் கைகளை உதறி அவன் விரல்களை உடனே விடுவித்துக் கொண்டபோதும் நெஞ்சில் அனல் குறையவே இல்லை. மன்னிக்கக் கூடிய தவற்றையா அவன் செய்திருக்கிறான்.

வெங்கட் பார்வை சிந்துவின் மேல் வெறுமையாகப் படர்ந்தது.



படுக்கையில் கை கால்கள் உணர்ச்சியற்ற நிலையில் உடல் மெலிந்து படுத்திருந்த மாமியாரைப் பார்க்கையில் சிந்தியாவிற்கு பகீர் என்றது. இவ்வளவு மோசமான அளவிற்கு உடல் பாதிக்கப்பட்டிருப்பார் என்று நினைக்கவில்லை.

சிந்தியாவின் இருண்ட முகத்தை நோட்டம் விட்ட வெங்கட், ''அம்மாவிற்கு இரண்டு மாதம் முன்னாடி 'ஸ்ட்ரோக்' அட்டாக் ஆகிவிட்டது. கைகால்கள் விளங்கவில்லை. ட்ரீட்மெண்ட் ஒழுங்காக எடுத்துக்க மாட்டேங்கிறாங்க'' என்று தாயின் தலையை விரல்களால் கோதிவிட்டபடி சொன்னான்.

மகனின் குரல் கேட்டுக் கண்களை மலர்த்திய சங்கரியின் கண்கள் சிந்தியாவைக் கண்ட மாத்திரத்தில் ஒளி பெற்றன.

''கடைசியாக நிஜம்மா கூட்டிட்டு வந்திட்டியாப்பா'' என்று நம்பமுடியாமல் வெங்கட்டின் முகத்தை நோக்க, அவன் மெல்லியதாய் தலையசைத்தான்.

''வந்திட்டியாம்மா'' என்று கண்களில் நீர் திரள கேட்டவர் ''என்னவோ போதாத காலம் நீங்க இரண்டு பேரும் பிரிஞ்சு போனீங்க. வெங்கட் இனிமே அவளை எங்கேயும் விடாமல் அன்பால் கெட்டியாகக் கட்டிப் போட வேண்டியது உன் கடமை. மீண்டும் நம்மைத் தேடி வீட்டிற்கு வந்த மகாலட்சுமியை விரட்டிடாதேடா'' என்று பலவீனமான குரலில் பேசினார்.

அதற்குள் பக்கத்தில் வந்த நர்ஸ்,

''இது மருந்து சாப்பிடும் நேரம்'' என்று சொல்லி இயந்திரத்தனமாக ஒரு மாத்திரையை சங்கரியின் வாயில் போட்டுத் தண்ணீரை ஊற்றினாள்.

அதன் பிறகு சிறிது நேரத்திற்கு அவரிடமிருந்து பேச்சே கிளம்பவில்லை. கண்களில் இருந்து மாலை மாலையாகக் கண்ணீர் கொட்டியது.

'உஷ்.. அம்மா..'' என்றபடி வெங்கட் தன் கைக்குட்டையால் அவரின் கண்ணீரை ஒற்றியெடுக்க..

''சிந்து இப்போ உங்களிடம் எந்த மனஸ்தாபமும் இல்லையே. இரண்டு பேரும் நல்லா பேசி ஒருத்தரை ஒருத்தர் நல்லா புரிஞ்சுக்கிட்டீங்களா? நான் இந்த இரண்டு வருடத்தில் இவனிடம் எத்தனையோ முறை சொல்லிட்டேன். சிந்து மனசில் ஏதோ பெரிய விஷயம் இருக்கு. போய்ப் பேசு, நீ தப்புப் பண்ணாத பட்சத்தில் அதற்கு நல்ல முடிவு கிடைக்கும்னு. அப்போ எல்லாம், தான் என்ற இறுமாப்பில் இருந்து இறங்காதவன், இப்போ நான் நோயுடன் போராடுவதைக் காணச் சகிக்காமல் இறங்கி வந்து, உன்னை அழைத்து வந்துவிட்டான்பார். எனக்கு நோய் வந்ததும் ஒரு விதத்தில் நல்லதுதான். இனிமேலயும் எங்களை விட்டுப் போயிடாதே சிந்து நான் உனக்கு அம்மாயில்லையா? எந்தக் கஷ்டம் இருந்தாலும் நீ என்னிடம் சொல், ஆனால் விட்டு விட்டுப் போய்விடாதே. போய்விட மாட்டியே, எங்களை விட்டு போய்விட மாட்டியே? மாட்டேன்னு சொல்லு சிந்து... மாட்டேன்னு சொல்லு'' என்று அழுகையில் கெஞ்ச.

சிந்தியா கண்களில் இருந்தும் கண்ணீர் பெருகியது. இனி இந்த வீட்டை விட்டுப் போக மாட்டேன் என்று ஆயிரம் சமாதானங்களைச் சற்றும் யோசிக்காமல் சங்கரியிடமும் சொல்லி அவரை அமைதிப்படுத்தி தூங்க வைப்பதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது அவளுக்கு.



அத்தையை குணமாக்க தன்னால் இயன்ற உதவியை செய்ய வேண்டும் என்ற நினைப்பு அழுத்தம் திருத்தமாக நெஞ்சில் பதிந்தது.

சிந்தியாவிற்கு புகுந்த வீட்டில் அழகு ரொம்ப பிடித்தமான விஷயம். மணமாகி முதல் முதலில் வீட்டைப் பார்த்தபோது பிரம்மித்துப் போனாள். வீடு மிகவும் நவீன முறையில் வடிவமைக்கப்பட்டிருந்தது. அதிலும் சங்கரி வீட்டை அலங்கரித்திருந்த பாங்கு அவளை மிகவும் கவர்ந்தது.

ஆனால் வீடு இப்போது இருந்த அழகைப் பார்த்து அவளுக்கு மயக்கமே வந்து விட்டது. நிர்வாகம் பண்ணிக் கொண்டிருந்தவர் படுத்துவிட்டதால் வேலைக்காரர்கள் பாடு படுகொண்டாட்டமாகி வீட்டை அலங்கோலப்படுத்தியிருந்தார்கள்.

கண்ணாடியாக முன்பு பளபளத்திருந்த பளிங்கு தரை ஒழுங்காகவே துடைக்காமல் கறைகள் திக்குத் திக்காக பல்லைக் காட்டியது. பூ ஜாடிகளில் பூக்கள் மாற்றப்பட்டு பல நாட்களாகியிருந்தது. அழகு அழகாக இடம் பார்த்து வைக்கப்பட்டிருந்த குஷன் நாற்காலிகள் ஆங்காங்கே இழுத்துப் போடப்பட்டிருந்தன. அலங்காரமாக மேஜை மீது வைக்கப்பட்டிருந்த கியூரியோக்களில் தூசி படிந்து உறைந்து போயிருந்தது.

வெங்கட் கூட இதெல்லாம் பார்த்துக் கொண்டு சும்மா இருந்தானா?

தாயின் உடல் நலக் குறைவில் மற்றதெல்லாம் முக்கிய மற்றவையாயிற்றா?

அவன் வீட்டில் எதிலும் நாட்டம் ஏற்படப் போவதில்லை என்று எண்ணிய சிந்தியாவிற்கு உள்ளூர அழுதாள்.

சங்கரி தூங்கும் சமயம், கொஞ்ச நேரம், யார் வீடோ, எக்கேடு கெட்டும் போகட்டும் என்று வெறுமனே வரவேற்பறையில் உட்கார்ந்திருந்தவளுக்கு சிறிது நேரத்திற்கு மேல் சகிக்க முடியாமல் போயிற்று.

சசி இருக்கும் நாட்கள், இவர்கள் வீட்டில் சாப்பிடும் சாப்பாட்டிற்கு சிறு வேலைகளையாவது செய்து வீட்டை நிர்வகிப்போம் என்று மனதை சமாளித்துக் கொண்டாள். பிறகு வேலைகள் வெகு துரிதமாகவே நடந்தது.

சிந்தியா கடகடவென்று இரண்டு வேலை ஆட்கள் உதவியுடன் வேலையை தொடங்கினாள். கீழ்த் தளத்தில் எல்லாவற்றையும் துடைத்து, அழகுப்படுத்தி முடிக்கையில் மணி ஆறு ஆகிவிட்டிருந்தது. இடையே வந்து போன டாக்டர் சங்கரியின் முகத்தில் புதுசாக தோன்றியிருந்த தெளிவைக் கண்டதும் திருப்தியடைந்தார். சிந்தியாவிடமும் ஒரிரு வார்த்தைகள் சங்கரிக்குச் செய்ய வேண்டிய சில எளிய பயிற்சிகளையும் பற்றிச் சொல்லி விட்டுப் போனார். பிஸியோ தெரபிஸ்ட்டும் நாளையிலிருந்து ட்யூட்டியை ஸ்டார்ட் செய்வார் என்ற செய்தியைச் சொல்லிவிட்டுப் போனார்.

மழைக்காலம் ஆதலால் ஆறு மணிக்குள் வானம் 'கும்' என்று இருட்டி வீட்டையும் இருட்டாக்கியது. வீட்டின் கீழ்த் தளத்தில் கிச்சன், ஹால், டைனிங் ஹால், ஸ்டோர் ரூம், பூஜை ரூம், பிறகு ஒரே ஒரு படுக்கை அறை. அதைதான் சங்கரி தன் உபயோகத்திற்கு வைத்திருந்தார்.



முதல் தளத்தில் மூன்று படுக்கை அறைகள், ஒரு சிட்டிங் ஹால் என்று சகல வசதிகளுடன் நவீன முறையில் அமைக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு அறையைத்தான் இரண்டு வருடங்களுக்கு முன் வெங்கட்டுடன் சிந்தியா பகிர்ந்து கொண்டாள். இப்பொழுது முதல் தளத்திற்குப் போகவே எரிச்சலாக இருக்க, கீழ்த்தளத்திலேயே முகம் கழுவி பொட்டிட்டுக் கொண்டாள்.

மாமியாருக்கு இரவுச் சாப்பாடு என்ன என்று நர்ஸிடம் விவரம் கேட்டாள்.

பொழுதை ஓட்டுவதற்காக ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு மாமியாரின் அறையில் கிடந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

"என்னம்மா இன்னும் வெங்கட் ஃபேக்டரியில் இருந்து வரவில்லையா?" என்று அவளின் வரவை உணர்ந்து அரைத் தூக்கத்தில் கேட்டார் சங்கரி. சிந்துவை தன் தாயிடம் விட்ட உடனேயே வெங்கட் வெளியே கிளம்பி விட்டிருந்தான். அவன் கிளம்பிச் சென்ற இடம் ஃபேக்டரி என்று சங்கரி சொல்லித்தான் சிந்தியாவிற்குத் தெரிந்தது.

"இன்னும் வரவில்லை அத்தை" என்று தூக்கத்தில் மூடி மூடித் திறந்த அவர் கண்களைப் பார்த்துக் கொண்டே சொன்ன சிந்தியா அவரின் தலைப்பக்கமாக நடந்து நெற்றியை நீவி விட்டாள். அந்த தொடுதலில் நிம்மதியாக உறக்கத்தில் ஆழ்ந்தார் சங்கரி.




தூக்க மாத்திரையின் உதவியால் நன்கு உறங்கிய சங்கரியம்மாள் ஒன்பது மணி போல் தூக்கம் கலைந்து விழித்தார்.

இன்னும் சிந்தியா அவள் அருகிலேயே இருப்பதைக் கண்டு முகம் சுருங்கினார்.

"இன்னுமா வெங்கட் வரவில்லை சிந்து?"

"அவர் அப்பவே வந்துட்டார். அத்தை நீங்க இப்ப என்ன சாப்பிடறீங்க? ராத்திரி பால் சோறுதான் சாப்பிடுவீங்களாம். நர்ஸ் சொன்னாள். நான் கொண்டு வந்து ஊட்டி விடட்டுமா?" என்று பேச்சை மாற்றினாள் சிந்து.

"நீ திரும்பவும் எங்களை விட்டுவிட்டு, போனால் நான் உயிரையே விட்டு விடுவேன் சிந்து" என்று சம்பந்தம் இல்லாமல் மீண்டும் அதே பேச்சைத் தொடங்கினார்.

"உங்களுக்குள்ள என்ன வேறுபாடு வந்து இரண்டு வருஷம் பிரிஞ்சி இருந்தீங்கன்னு நான் கேட்க மாட்டேன் சிந்து. என்னா அது கடந்த காலம். இப்ப நீங்க இரண்டு பேரும் சந்தோஷமா இருக்கீங்கதானே" என்று நம்பிக்கை வராமல் மீண்டும் மீண்டும் அவர் கேட்க.

என்ன பதில் சொல்வது என்று புரியாத நிலையில் தலையை மட்டும் ஆமோதிப்பதாக பலமாக ஆட்டிக் கொண்டு.

"அத்தை அவர் கூப்பிடற மாதிரி இருக்கு போய் என்னன்னு கேட்டுட்டு வந்திடறேன்" அங்கிருந்து நழுவினாள் சிந்தியா.

அத்தையைச் சமாதானப்படுத்துவதற்காகத் தான் கணவனைப் பார்ப்பதற்குச் செல்வதாகப் பாவனை செய்தபடி



ஹாலுக்கு வந்த சிந்தியா டி.வி.யை ஆன் செய்து சோபாவில் அமர்ந்தாள்.

கொஞ்ச நேரம் அதில் தெரிந்த பாட்டுகளில் மனம் ஒன்றிப் போனவளுக்கு அவளறியாமல் கண்கள் சிறிது அசந்து மூடியது.

அம்மாவைப் பார்க்க என்று மாடியிருந்து இறங்கி வந்த வெங்கட் சோபாவில் உட்கார்ந்த நிலையில் தூங்கிக் கொண்டிருந்த சிந்தியாவின் அழகில் தன் உறுதியை இழந்தான். இடம், பொருள், ஏவல் அத்தனையையும் மறந்தான். கண்கள் மின்னின. சத்தம் இல்லாத நடையும் மெல்ல தன் மனைவியை நெருங்கினான்.

வெங்கட்டின் அருகாமையை சிந்தியா உணரவே இல்லை.

அவனோ அவள் முகவாயை தொட்டு தன்புறமாகத் திருப்பி, அவள் கண் விழித்து என்ன? ஏது என்று உணரும் முன்பு அவளின் செவ்விதழ்களில் இதழ் பதித்தான். தூக்கி வாரிப் போடச் சட்டென்று விலகினாள் சிந்தியா.

அவன் உதட்டு உராய்வினால் கைகளில் ஏற்பட்ட நடுக்கத்தை அவனறியாமல் மறைத்தாள். துரிதமான சுவாசத்தால் நெஞ்சு வேகமாக ஏறி இறங்கியது. ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "எவ்வளவு தைரியம் இருந்தால் என்னைத் தீண்டுவீர்கள். உங்கள் முகத்தைப் பார்த்தாலே எனக்குப் பிடிக்கவில்லை என்று பளிச்சென்று முளையில் உறைக்கிற மாதிரி சொல்லியிருக்கேனே. பிறகும் ஏன் இப்படி அலைகிறீர்கள்" முகம் சிவ சிவக்க கடுகடுத்தாள்.

அவள் பேசுகையில் அவள் உதடு வைத்திருந்த விதத்தைப் பார்க்கையில், அவளுடைய கடினமான பேச்சில் மறைந்

திருந்த பதட்டத்தையும், பயத்தையும் அவன் அறிந்திருப் பானோ என்ற சந்தேகம் ஏற்பட்டது.

வெங்கட் அவள் பேச்சை வெகு சாதாரணமாக எடுத்துக் கொண்டான்.

“இங்கே பார் சிந்தியா, அம்மா மிகவும் புத்திசாலி. இருந்தாற் போல நீயும், நானும் கசப்பு மாறி விருப்பத்துடன் இணைந்து விட்டோம் என்று சொன்னதை அவர்களால் நம்ப முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. நடக்கும் விஷயத்தை வேவு பார்க்க என்று நர்ஸை தன்னுடனேயே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அம்மாவின் மனதை திருப்திப்படுத்துவதே என் நோக்கம். அதற்கு தகுந்தாற்போல் அவ்வப்போது இதுபோல் நடக்க நேரிடும்” என்று ஒன்றுமே நடக்காதது போல சகஜமான குரலில் பேச சிந்தியாவிற்குப் பதில் ஒன்றும் பேச முடியாமல் வாயடைத்துப் போனது.

பொய்...

எவ்வளவு அழகாகப் பொய் சொல்கிறான் என்று பிரமித்துப் போனாள்.

போதாதற்கு அந்த நேரம் பார்த்து, வெள்ளை உடுப்பு விசிற நர்ஸ் இவர்கள் இருவரையும் பார்த்தபடி பிளாஸ்கோடு சமையல் அறையை நோக்கிச் செல்ல காணவும் எது பொய், எது நிஜம் என்று புரியாமல் குழம்பிப் போனாள்.

ஆனாலும் அதற்காக?

அதிலும் முதல் நாளே, கணவன் உரிமையை நிலைநாட்ட அவன் செய்த காரியம் அவளின் நிம்மதியை கெடுத்தது



நர்ஸ் கண்காணிப்புப் பற்றி வெங்கட் சொன்னதில் சிந்துவிற்கு நிறையச் சந்தேகம் இருந்தாலும், அதை சாக்கிட்டு அவன் தன்னிடம் விளையாட இடம் கொடுக்கக் கூடாது என்பதில் அவள் மிகுந்த ஜாக்கிரதையாக இருந்தாள்.

இரவு படுத்துக் கொள்வதற்கு, முதல் தளத்தில் விருந்தினருக்கு என்று தயாராக்கப்பட்டிருந்த இரண்டு அறையில் சின்ன அறையை தேர்ந்தெடுத்துக் கொண்டாள்.

எத்தனை நாள் இந்த பித்தலாட்டம் செல்லுபடியாகும் என்று சிந்தியாவிற்கு யோசனையாக இருந்தது.

அத்தைக்கு கை கால்கள் நன்கு குணமான பின்பு அவரிடம் அவரின் மகனைப் பற்றிய முழு விவரத்தையும், தன்னால் அவனுடன் இதற்குப் பிறகும் சேர்ந்து வாழ முடியாது என்று எடுத்துச் சொல்லி, இந்தத் திருமண பந்தத்தில் இருந்து முழுசாக விலகிவிட வேண்டும் என்று மனதளவில் உறுதி செய்தாள்.

அடுத்து வந்த நாட்கள் மிகச் சாதாரணமாகவே கழிந்தன. அடிக்கடி வெங்கட்டின் பார்வை தன்னைத் துளைப்பதை அவளால் உணர முடிந்தது. என்னவோ அவள் நேர்மையை திருடுவது போலவும், சிந்தியா தான் தரங் கெட்டவள் போலவும் அவன் உறுத்து உறுத்துப் பார்க்கையில் அவளின் இரத்தம் கொதித்துப் போயிற்று.

இரண்டு மூன்று முறை, தனிமையில் அவன், அவளிடம் பேச்சு கொடுக்க எத்தனிக்க, இவனிடம் எனக்கென்ன பேச்சு என்ற பாவனையுடன் பாதி நேரங்களில் காது கேட்காது மாதிரி ஒதுங்கி போனாள்.

வெங்கட்டின் பார்வை கடினமாவதை அவள் உணரவே இல்லை.




ஒரு நாள் சாயங்கால வேளையில் பிஸியோ தெரபிஸ்ட் சங்கரிக்கு உடற்பயிற்சிகளை முடித்து விட்டுக் கிளம்பிய வுடன் சிந்தியா சங்கரியின் முன் வந்து நின்றாள். அவரின் உடல் நிலையும் நிறைய முன்னேற்றம் கண்டிருந்தது.

"அத்தை எவ்வளவு நேரம்தான் நீங்க இந்த ரூம்லேயே அடைஞ்சி இருப்பீங்க? வீல் சேர்ல உட்கார்ந்து தோட்டத்தை பார்க்க வர்றீங்களா?" என்று அவருக்கு தலையணையை சரி செய்தபடி கேட்டாள் சிந்தியா.

"ஆகட்டுமா, ஆனா உன்னால் தனியா என்னை தூக்கி சேரில் உட்கார வைக்க முடியாதே" சிந்தியாவை பார்த்ததில் இருந்து அவருக்கு முகத்தில் முன்பு இருந்த களை வந்துவிட்டது.

இரண்டு வருடத்தில் மகன், மனைவியைக் காணாமல் அலைப்புறுவதைக் கண்டு சகிக்காமல் தானே நோயில் விழுந்தார். இப்பொழுது மகன் முகத்தில் தெளிவைப் பார்க்கையில் சந்தோஷமாக இராதா என்ன?

"நானும், நர்ஸும் சேர்ந்து உங்களைத் தூக்கி விடுவோம் அத்தை" என்று சொல்லிவிட்டு அதைச் செயலில் செய்து காட்டினாள்.

அந்த சின்னப் பங்களாவில் 'ட' வடிவத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த தோட்டம் உண்மையில் மிக அழகாக



இருந்தது. சீராக பராமரிக்கப்பட்டிருந்த தோட்டத்தில் உயர் ரக குரோட்டன்ஸுடன் சீசனில் பூக்கும் பல பூ வகைகளும் இரண்டு வரிசையில் பூத்துக் குலுங்கிக் கண்களுக்கு புத்துயிரைத் தேடித் தந்தது.

வீல் சேரில் அவர் வசதியாக அமர்ந்திருக்கிறாரா என்று கவனித்து விட்டு சேரின் பிடியை கைகளினால் இறுக பிடித்துக் கொண்டு தோட்டத்தை நோக்கி வீல் சேரை உருட்டிக் கொண்டு போனாள் சிந்தியா.

செயற்கையாக வளர்க்கப்பட்டிருந்த பச்சைப் பசேல் புல் தரை அவள் பாதம் பட்டதும் மெத்தென அமுங்கி சிந்தியா விற்கு சுகமான உணர்வைத் தந்தது.

மூன்று மாதத்திற்கு மேலாக ஒரே அறையில் படுத்திருந்த வருக்கு புதுக் காற்று தெம்பையும் மகிழ்ச்சியையும் கொடுத்தது. நிறையப் பேசினார்.

அரைமணி நேரம் தோட்டத்தில் சுற்றி விட்டு வீட்டிற்குள் வந்து ஹாலில் 'சன்' டிவி பார்த்தார்கள். பழைய தமிழ்ப் படம் என்றவுடன் வலியை மறந்து சேரில் அமர்ந்தபடி ஆவலாக பார்த்தார் சங்கரி. சிந்தியாவும் அங்கிருந்த இரட்டை சோபா ஒன்றில் அமர்ந்து படம் பார்த்தாள்.

பழைய படங்களில் அவ்வளவு விருப்பம் இல்லாத சிந்தியா அத்தைக்குத் துணை என்ற நோக்கத்தில் படத்தில் ஒன்றாமல் அமர்ந்திருந்தாள்.

ஒரு நாளும் இல்லாத திருநாளாக மாலை ஐந்து மணிக்கே வீடு வந்து சேர்ந்த வெங்கட் தாயையும், மனைவியையும் ஒருங்கே கவனித்து தாயிடம் நலம் விசாரித்தபடி, கையில்

இருந்த ப்ரீப்கேஸை டீபாயில் வைத்து விட்டு கழுத்தில் கட்டியிருந்த டையையும் தளர்த்தி விட்டுக் கொண்டு சிந்தியா அமர்ந்திருந்த இரட்டை சோபாவில் சகஜம் போல் அவளருகே நெருக்கமாக அமர, சட்டென்று எழுந்தாள் சிந்தியா. ஆனால் அருகில் அமர்ந்தவன் சிந்தியா மேலே நகர முடியாமல் அவளின் கரத்தை அழுத்தமாகப் பிடித்தான்.

நீலக்கண்ணால் வெங்கட்டை முறைத்து எச்சரித்தபடி தன் கரத்தை விடுவித்துக் கொள்ள சிந்தியா எத்தனிக்க, வெங்கட்டின் புருவங்கள் நெறிந்தது. கண்களில் கடினத்துடன் அவளின் இரும்புப் பிடி மேலும் உறுதியானது. மேலே ஒன்றும் செய்ய முடியாமல் சிந்தியா திகைத்துப் போனாள்.

திரைப்படத்தில் ஒன்றிப் போயிருந்த சங்கரி பின்புறமாக நடந்த மவுன நாடகத்தை உணராமல் திரைப்படத்தில் தெரிந்த ஜால்பத்தைப் பகிர்ந்துக் கொள்ள சிந்தியாவின் பின்புறமாக திரும்ப, சட்டென்று உதட்டை கடித்தபடி, அவளருகில் அமர்ந்தாள் அவள்.

"அம்மாவின் முன்னால் உன்னை என்ன செய்து விடப் போகிறேன் என்ன இந்த பயம். நமக்கிடையே நடக்கும் உண்மை விஷயங்கள் அவருக்கும் தெரிந்து, அவர்களின் நிம்மதி சந்தோஷம் எல்லாம் மீண்டும் கெட்டுப் போக வேண்டுமா?" அடிக்குரலில் சீறியபடி அவன் கேட்க -

இவனிடம் பயமா? என்று ஒரு நொடி எண்ணிய சிந்தியாவின் நெஞ்சம் கட்டுப்பாட்டிற்குள் நிற்காமல் வேகமாக தடதடக்க, முகம் சிவந்து போனாள்.

பயம் அவனிடமா?



இல்லை அவளிடமேயா?

பல்லைக் கடித்துக் கொண்டு அமர்ந்திருந்த சிந்தியாவின் வெண் கழுத்தில் இருந்த சின்ன பூனை முடிகள் அவன் மூச்சுக் காற்றுப் பட்டு சிலிர்த்து நிலைகுத்தி நின்றன. பிறகும் தாயுடன் வெங்கட் பேசிக் கொண்டு, இவளிடமும் ஓரிரு வார்த்தைகள் பேசி உரையாடல்கள் நடைபெற்றாலும், சிந்தியாவிற்கு அருகாமையில் இனம் புரிந்தும் புரியாத மன இறுக்கத்தைக் கொடுத்தது. அது எரிச்சலையும் கிளப்பியது. இனி தாங்க முடியாது என்று அவள் பொறுமையை இழந்த சமயம் நல்ல வேளையாக சங்கரி "டயர்டா இருக்கு. சற்றுப் படுக்கணும்" என்று சொல்லவும், அப்பாடா என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் சிந்தியா. அவளின் தவிப்பையும், நிம்மதியையும் பார்த்து அவன் பரிகாசமாய் உதட்டைப் பிதுக்குவதைக் கண்டு சிந்தியாவிற்கு அவனை அறையலாம் போல ஆத்திரம் வந்தது.




அன்று காலையில் பெய்த மழையில் வீட்டுக்கு முன்னால் இருந்த மல்லிகைப் பந்தல் அப்படியே சாய்ந்தது. வாசலை மறைத்திருந்ததால், சிந்தியா தோட்டக்காரனின் உதவி கொண்டு பந்தலை நேராக நிமிர்த்திக் கொண்டிருந்தாள்.

"ரங்கம் அந்த கிளையை விட்டு விடாதே. பார்.. பார்.. மறுபடியும் கொடி சரிகிறது" என்று எச்சரிக்கை விடுத்தபடி ஓடி வந்து மீண்டும் சரிந்த பகுதியைத் தாங்கிக் கொண்டாள்.

"அம்மா, நீங்கக் கொடியை கீழே விடுங்க, பூச்சிப் பொட்டு நிறைய கிடக்கும். கடிச்சிறப் போகுது. நானே தனியா கட்டிடுவேன்" என்று கொடியை பால்கனியில் ஏற்றி படற விடுவதற்கு என்று ஏறி இருந்த இரும்பு ஏணியில் இருந்து அவசர அவசரமாக இறங்கினாள் ரங்கம்... அதற்குள்...

'ஆன்ட்டி.. ஆன்ட்டி..' என்று கூவிக் கொண்டு தன் முன் ஓடி வந்து நின்ற வாண்டுகளைச் சந்தோஷத்தோடு பார்த்தாள் சிந்தியா.

பக்கத்து பங்களா வாசிகள்.

இவள் வந்த நாளில் இருந்து தோட்டத்தில் அவள் வந்து நிற்கும் போதெல்லாம் அந்த வாண்டுகள் இங்கே ஓடி வந்துவிடும். ஒரே பேச்சும் சிரிப்புமாக நேரம் பறந்து விடும். அதுவும் அந்தப் பையன் இந்த ஆறு வயதில் ரொம்ப பெரிய மனிதன் என்ற நினைப்புடன் பேசுவதைக் கேட்ட சிந்தியாவிற்குச் சிரிப்புதான் வரும்.

"என்னடா சாத்விக், என்ன விஷயம்?" என்று சின்னச் சிரிப்புடன் கையில் தாங்கிப் பிடித்திருந்த கிளையை ரங்கத்திடம் கொடுத்தப்படி கேட்டாள் சிந்தியா.

"இல்ல ஆன்ட்டி வந்து..." என்று பேசத் துவங்கியவனை இடித்துக் கொண்டு முன்னால் வந்து நின்றது இன்னொரு வாண்டு.

"டேய், நான்தான் சொல்லுவேன். இது எல்லாம் பொம்பிளைங்க விஷயம்" என்று முறைத்துவிட்டு.

"நீங்க நேத்து எங்கப் போனீங்க ஆன்ட்டி. நான் எவ்வளவு அழகா டிரஸ் பண்ணியிருந்தேன் தெரியுமா? பட்டுப்



பாவாடை, ஒட்டியாணம், நெத்துச் சுட்டி அப்புறம் இவ்வளவு பூ" என்று கை விரித்துக் காட்டிட்டு, பிறகு தொடர்ந்து.

"தேவதை மாதிரி இருந்தேனாக்கும் இல்லேன்னா" என்று திரும்பி சாத்விக்கை பார்த்தது அந்தச் சிட்டு.

அவன் "இல்லலே இல்லை பேயாட்டாம் இருந்தே" என்று பழிப்புக் காட்டி விட்டான். தொடர்ந்து.

"நான் நேற்று பஞ்சகச்சம் கட்டியிருந்தேன் ஆன்ட்டி. அழகா எங்கப்பாவாட்டம் இருந்தேனாக்கும்."

"இல்லை நீ குரங்காட்டம் இருந்தே" இடைப் புகுந்து சொன்னது அந்தச் சிட்டு.

"நானா குரங்கு. நீ தான் குரங்கு" என்று இருவரும் மாறி மாறிச் சண்டையிட தன்னை மறந்து சிரித்தாள் சிந்தியா.

"அடேய்.. அடேய்... இங்கேயும் வந்து சண்டையை ஆரம்பிச்சாச்சா? திவ்யா இங்கே வா உன்னை என்ன சொல்லச் சொல்லி அனுப்பினேன். இதென்ன சண்டை... வீட்டுக்கு வா.. உன்னை.." என்று அதட்டி உருட்டியபடி வந்து நின்ற சார்மினாவை பார்த்தவுடன்,

"வாங்க" என்று புன்னகையுடன் வரவேற்றாள் சிந்தியா.

"எங்க வீட்ல கொலு வைச்சிருக்கோம் சிந்தியா. நேற்று சாயங்காலம் உங்களைக் கூட்டிட்டு ஆன்பெட்டலுக்கு ஸ்கேன் எடுக்க போயிருந்ததாக சொன்னாங்க, ஏதாவது ப்ராப்ளமா? என்று கேட்டாள் சார்மினா.

"இல்லை, ரொட்டீன் செக்கப்தான். கவலைப்படும்படியாக ஒன்றும் கிடையாது" என்று சிந்தியா பேசிக் கொண்டிருக்கும் போதே, திவ்யா அவளிடம்.

"ஆன்ட்டி, இன்னைக்கு பூத்த குண்டுமல்லி அத்தனையும் ரங்கத்திடம் சொல்லி எனக்குப் பறித்து தரச் சொல்லுங்களேன்" என்று கிசுகிசுத்தது.

"ஏய் திவ்வி ஆன்ட்டி காதை ஏன் கடிக்கிறே?" என்று மிரட்டிய சார்மிளாவை வீட்டினுள் அழைத்துச் சென்றாள் சார்மிளா, சங்கரியுடன் சிறிது நேரம் கதையளந்து விட்டு கூல்டிரிங்ஸ் அருந்தி விட்டுப் பின் குங்குமம் கொடுத்து கொலுவிற்கு சிந்தியாவை அழைத்தாள். அவர்கள் கிளம்புகையில் மறக்காமல் சின்ன பிரம்புக் கூடை நிறைய குண்டு மல்லிகைப் பூக்களை திவ்யாவிடம் கொடுத்தாள் சிந்தியா.

கண்கள் ஆசையில் விரியப் பூக்களை சந்தோஷத்தோடு வாங்கிச் சென்றாள் சிறுமி.

மறுநாள், சங்கரி சிந்தியாவைக் கண்டிப்பாக பக்கத்து வீட்டு கொலுவில் கலந்து கொள்ளுமாறு சொல்லவே, சிந்தியாவும் அரைமனதாகவே தயாரானாள். சங்கரி சொன்னது போலவே அரக்கு சிவப்பு பட்டுப் புடவை அணிந்து அதற்கு மேட்சாக கைகளிலும் காதுகளிலும் கழுத்திலும் அணிந்தாள். பட்டாக முன் சுருண்டு விழுந்த நீண்ட கூந்தலை ஒதுக்கி அழகாக தளரப் பின்னி பூ வைத்து, பொட்டு, லிப்ஸ்டிக் என்று மிகைப் படுத்தாமல் அலங்காரம் செய்து முடித்தாலும், கண்ணாடியில் பிரதிபலித்த பிம்பத்தைக் காண்கையில் சிந்தியாவிற்கே வித்தியாசமாக இருந்தது.

இந்த மாதிரி அலங்காரங்கள் எல்லாம் கல்யாணமான புதிதில் ஆசையாசையாக, வகை வகையாக நிறைய செய்திருக்கிறாள். ஆனால் கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாக இதில் எல்லாம் அவ்வளவு நாட்டம் இருந்ததில்லை. நீண்ட நாட்களுக்குப் பிறகு இன்றுதான்.. தங்க விக்ரகம்



போன்று தன் முன் வந்து நின்ற மருமகளைக் கண்டதும் சங்கரி விழி விரித்தார்.

"அம்மாடி கொள்ளை அழகு. என் கண்ணே பட்டுடும் போல இருக்கே" என்று ஆவலாக சிந்தியாவின் கை பற்றினார் அவர்.

சிந்தியாவின் அழகு இப்பொழுது பன்மடங்கு கூடியிருப்பது போல் பட்டது அவருக்கு.

"போயிட்டு சீக்கிரம் வந்துடும்மா, வெங்கட் ஆபீஸிலிருந்து வர நேரம் இல்லையா" என்று சொல்லி சிந்தியாவை அனுப்பி வைத்தார் அவர்.

கொலு வீட்டிலும் சிந்தியாவின் அழகு எல்லோர் கண்களிலும் வியப்பை உண்டாக்கியது. அதிலும் ஒரு இளம் பெண் இவளருகில் வந்து,

"நீங்கள் தான் நம்ம ஹீரோவோட வொய்ஃப்பா" என்று கண்களில் சின்னச் சிரிப்புடன் விசாரிக்க, புரியாமல் சிந்தியா அருகில் இருந்த சார்மிளாவைப் பார்க்க,

"இந்தப் பக்கம் நீங்கள் இல்லாத சமயம் நிறையப் பெண்கள் வெங்கட்டின் கவனத்தை ஈர்க்க முயற்சித்திருக்கிறார்கள்" சார்மிளா மெல்ல சிந்தியாவின் காதைக் கடிக்க,

"இம்மி அளவு கூட உங்க விஸ்வாமித்திரரை எங்களால் அசைக்க முடியவில்லை. அதனால் கவலையை விடுங்க" என்று அந்தப் பெண் சொனாலி ஸ்நேகமாகச் சொல்லிச் சிரிக்க, சிந்தியாவிற்குள் மெல்ல ஒரு இதம் பரவியது.

கொலு பதினோரு படிகளில் மிகவும் சிறப்பாக இருந்தது. எல்லோரும் அவளை ஒரு சின்ன பாடலையாவது பாடச்

சொல்லி வற்புறுத்தவே, சிந்தியா கொலு பொம்மைகளின்முன் விரிக்கப்பட்டிருந்த ஜமுக்காளத்தில் அமர்ந்து,

"காக்கை சிறகினிலே நந்தலாலா" பாரதியார் பாடலை இனிமையாகப் பாடினாள். பிறகு கொஞ்ச நேரம் இருந்து பேசிக் கொண்டு இருந்து விட்டு தாம்பூலம் எடுத்துக் கொண்டு வீட்டிற்குத் திரும்பினாள் சிந்தியா.

வீட்டில் அதற்குள் வெங்கட் வந்திருந்தான். அம்மாவைப் பார்த்துவிட்டு அறையிலிருந்து வெளியே வந்தான். கேட்டைத் தாண்டி வீட்டிற்குள் வந்து கொண்டிருந்த கட்டிய மனைவியின் அழகில் கட்டுண்டு அப்படியே சிலை போல் நின்று விட்டான். அவன் கண்கள் ஏக்கத்தில் விரிந்தன.

சிந்தியாவிற்கு வெங்கட்டைக் கண்ட மாத்திரத்தில் என்னென்றே புரியாமல் நெஞ்சம் படபடத்தது. சமாளித்துக் கொண்டு, அவன் கண்களை சந்திக்க சிந்தியா அதில் தெரிந்த 'ஏக்கம்' கண்டாள். அது அவளை என்னவோ செய்தது. மெல்ல குனிந்து கொண்டு அவனைத் தாண்டி நடக்கையில், மென்மையாக அவன் காதுகளில் மட்டும் கேட்கும்படியாக அவன் முணுமுணுத்த பாட்டில் இருந்த வேட்கையில் சிந்தியாவின் முகம் 'கும்' மென்று சிவந்து போயிற்று.




நாட்கள் மெல்ல உருண்டு சென்றது. சூர்யநாராயணன் மனைவியுடன் அடிக்கடி சிந்தியாவையும், சங்கரியையும் வந்து பார்த்துப் போனார். விமலா பெண்ணை 'எக்ஸ்ரே' கண்களுடன் ஊன்றிக் கவனித்தார். மகள் முகத்தில் சற்று தெரிந்த தெளிவில்



மகிழ்ந்தார். மஞ்சுவிடம் இருந்து போன் கால்கள் வந்து கொண்டிருந்தது.

ஒரு நாள் பெங்களூரில் இருந்து சாரதா, சங்கரியின் அக்கா தன் குடும்பத்தோடு சங்கரியின் உடல் நிலை முன்னேற்றத்தை விசாரிக்க என்று வந்திறங்கினார்.

"தலைவலின்னு கூட சங்கரி ஒரு நாளும் படுக்கையில் படுத்ததில்லை. அவளுக்கா இந்த மாதிரி வியாதி வரணும்" என்று கண்களை கசக்கினார் அவர்.

அவரின் மூன்று வயதுப் பேரன் வந்த அரை மணி நேரத்திலேயே தான் எப்பேற்பட்டவன் என்று காட்டி விட்டான்.

துருதுருவென்று வீட்டின் ஒரு மூலை முடுக்கையும் விடாமல் குடைந்தான்.

மேலே கீழே என்று எல்லா அறைகளிலும் நுழைந்து லைட், ஃபேன், ஏசி என்று எல்லா சுவிட்சுகளையும் இயக்கி விட்டான். ஸ்டீரியோவை முழு சத்தத்தில் வைத்தான். டி.வி.யை ஆன் செய்தான்.

"ஐய்யே உங்க வீட்டு கேபிள் கனெக்ஷன் கிளியராகவே இல்லை. நான் டியூன் பண்ணித் தரேன்" என்று டி.வி.யை போட்டு குடைந்தான்.

ஷோ கேசில் அழகுக்கு வைத்திருந்த சாமான்களை எல்லாம் விளையாட என்று கையில் எடுத்துக் கொண்டான்.

"லஞ்ச்'க்கு சாப்பிட எனக்கு பரோட்டாவும் சிக்கனும் வேண்டும் என்று வந்ததுமே சொல்லிவிட்டான். அலங்கார மாக ஹாலில் வைக்கப்பட்டிருந்த மூன்று அடி நடராஜர்

சிலையைத் தூக்க முயற்சித்தான். முடியாமல் போகவே அது நல்லாவே இல்லை என்று குறை சொன்னான்.

வரவேற்பு ஹாலில் இருந்த சோபாவில் குடிக்க கொடுத்த டம்ளர் நீரை அப்படியே ஊற்றி அதில் ஏறி 'தங்கு' 'தங்கு' என்று குதித்துச் சிரித்தான்.

மூன்று வயது பொடியன் வந்த சில நிமிடங்களிலேயே இவ்வளவு சேட்டையா செய்வான் என்று மயக்கமே வந்தது சிந்தியாவிற்கு. பொடியனின் தாய், தந்தை, தாத்தா, பாட்டி எல்லோரும் சங்கீயைச் சுற்றி அமர்ந்து அவரிடம் பேசிக் கொண்டிருக்கவே, பொடியனைக் கவனிக்க வேண்டிய முழு பொறுப்பும் அவளுடையதாயிற்று.

அவன் எதையும் போட்டு உடைத்து விடக் கூடாதே என்று அவன் பின்னாலேயே சென்றாள். அப்படியும் வெங்கட்டின் கூலிங் கிளாஸ் ஒன்றை கையிலெடுத்து விட்டான் அவன்.

"டேய் ஜோ, அது அங்கிளோட கண்ணாடி உடைச்சிடாதே நல்ல பையனா ஆன்ட்டிக்கிட்டே கொடுத்திடுமா" என்று கெஞ்சினாள்.

அவள் பேசியதை அவன் எங்கே கவனித்தான். ஸ்டைலாக கண்ணாடியை தன் முகத்தில் மாட்டிக் கொண்டு, "நான் விக்ரம் மாதிரியே இருக்கேன் இல்லே" என்று போஸ் கொடுத்தான்.

சின்னப் பிள்ளைகள் எது பேசினாலும் ஆமாம் போட வேண்டும் என்று கற்றிருந்தாள் சிந்தியா.

"ஆமாம் அக்க விக்ரம்" தான் என்று ராகம் பாடினாள். உடனே அந்த ஜோவிற்கு குஷி வந்துவிட்டது.



"இப்பப் பாருங்க விக்ரம் மாதிரி கண்ணாடியைத் தூக்கிப் போட்டு பிடிக்கிறேன். நீங்க அசந்துடுவீங்க" என்று கூலிங் கிளாஸை உயர தூக்கிப் போட அது அவன் பிடியில் சிக்காமல் கீழே விழுந்து உடைந்தது.

உலகமே வெறுத்துப் போனது, சிந்தியாவிற்கு. அவனை நறுக்கென்று குட்ட வேண்டும் போல கைகள் பரபரத்தன.

இப்படியா பிள்ளையை வளர்ப்பாங்க, என்று எரிச்சலடைந்தாள்.

"அச்சச்சோ, உடைச்சிட்டேனே, ரொம்ப சாரி ஆன்ட்டி" என்று முகத்தை பரிதாபமாக வைத்துக் கொண்டு கட்டிலில் ஏறி அவள் கன்னத்தில் முத்தமிட்டான் அந்த ஜோ.

அவ்வளவுதான் சிந்தியாவின் கோபமெல்லாம் பாகாக உருகி விட்டது. அப்படியே அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். அதன் பிறகு வேலையாளை கண்ணாடி உடைந்த இடத்தைத் துடைக்கச் சொல்லிவிட்டு, அவனைக் கையில் தூக்கிக் கொண்டு சமையல் அறைப் பக்கமாகச் சென்றாள்.

அங்கு பரோட்டாவும், சிக்கனும் தயாராவதைக் கவனித்து விட்டு சிறுவனைக் கையில் இருந்து இறக்க பிரியமற்று, தூக்கிக் கொண்டே ஹாலுக்கு வந்தாள்.

சிந்தியாவின் கழுத்தில் கிடந்த நகைகளை கையில் எடுத்து அழகு பார்த்துக் கொண்டிருந்தான் ஜோ.

"ஆன்ட்டி இதுதான் உங்க தாலியா" என்று திடீரென்று சிந்தியாவின் தாலி சரட்டை காட்டிக் கேட்க,

'இந்தக் காலத்துப் பிள்ளைகள் படுவேகம்தான்' என்று அசந்து போய் வாய் அடைத்து நின்றாள் சிந்தியா.

அதே சமயத்தில் அங்கு வந்த வெங்கட் காதுகளிலும் ஜோவின் பெரிய மனித தோரணையில் கேட்கப்பட்ட கேள்வி விழுந்தது.

சிந்தியா என்ன பதில் சொல்கிறாள் என்று கேட்பதற்காகச் சற்று நின்றான். அவள் அமைதியுடன் இருப்பதைக் கண்டு எரிச்சலடைந்தான்.

''உற்றார், உறவினர், பெரியோர் ஆசியுடன் நான் உன் ஆன்ட்டி கழுத்தில் கட்டிய தாலி அது'' என்று சிந்தியாவின் முகத்தை தீவிரமாகப் பார்த்துக் கொண்டே சொன்னான் அவன்.

அவன் குரல் கேட்டு திடுக்கிட்டுத் தலையை அவன் புறமாகத் திருப்பினாள். உதட்டைக் கடித்துக் கொண்டு கண்கள் இடுங்க, அவன் தன்னையே முறைத்துப் பார்ப்பதன் காரணம் விளங்காமல் நின்றாள் சிந்தியா. இப்படி கடுமையாக உற்று நோக்க அவள் என்ன தவறு செய்தாள்? அதற்குள் ஜோ அவள் இடுப்பில் இருந்து வழுக்கிக் கொண்டு ஓடினான்.

''ஏன் சிந்தியா நான் கட்டிய தாலியை தாலி என்று சொல்லக் கூடப் பிரியம் இல்லை என்றால் அதைக் கழற்றி எறிந்து விட வேண்டியதுதானே'' என்று விரோதமான குரலில் அவன் பேச சிந்தியா வெலவெலத்துப் போனாள்.

தாலியைக் கழற்றி எறிய வேண்டுமா?

முகத்தில் முத்து முத்தாக வேர்க்க, திக்பிரமை பிடித்து நின்றாள் அவள்.

தன்னுடைய குழந்தையைக் கருவிலேயே அழித்தவனாயிற்றே இவன். இவனிடத்தில் எப்படி நல்ல பண்புகளை



எதிர்பார்க்க முடியும் என்று வெறுத்துப் போய் விறு விறு என்று தன்னுடைய அறைக்குள் முடங்கிக் கொண்டாள்.

'பாவி பழிக்காரா' என்று மனதுக்குள் அவனைத் தூற்றினாள்.

அவனையே வேண்டாம் என்று ஒதுக்கி விட்டவளுக்கு 'அவன்' கட்டிய தாலியைப் பற்றி அவன் பேசிய பேச்சு பிடிக்காமல் போனது ஏன் என்று புரியவில்லை.




சங்கரியின் அக்கா குடும்பம் இருப்பதால், இரவுச் சாப்பாடு வேலைகள் ஒழுங்காக நடைபெறுகிறதா என்று கண்காணித்து விட்டு சங்கரியைப் பார்க்க அவர் அறைக்கு சிந்தியா செல்ல,

''சிந்து உன்னைத்தான் தேடிட்டுயிருந்தேன். என்னோட மெடிக்கல் ரிப்போர்ட்டை வெங்கட் ரூமுக்கு எடுத்துப் போயிருந்தான். கொஞ்சம் எடுத்துட்டு வாம்மா, நம்ம ரமேசும் டாக்டர்தானே பார்க்கணும்னு சொன்னான்'' என்று தன் அக்கா மகனைச் சுட்டிக் காட்டினார்.

''சரி அத்தை'' என்று சொல்லி விட்டு வெளியே வந்த சிந்தியாவிற்கு ஒரே யோசனையாக இருந்தது.

ஃபேக்டரியில் இருந்து வெங்கட் இரவு வீடு வந்து விட்டதற்கான அறிகுறிகள் அத்தனையும் இருந்தது. பொதுவாக இந்த நேரத்தில் கம்ப்யூட்டர் ரூமில்தான் இருப்பான் என்று தன்னைத் தானே நிதானித்தபடி மெல்லப் படியேறி அவன் அறை அருகே வந்தாள். கதவு முழுவதும்

நிறைந்திருந்தது. அவளும் அவனும் பகிர்ந்து கொண்ட அறை. மெல்லிதாக ஒரு உணர்வு சிந்தியாவின் இதயத்தை அவள் எதிர்பாராத வண்ணம் தாக்க, சிந்தியாவின் முகம் சூடாயிற்று. வெங்கட்டும் அறையில்தான் இருந்தான்.

உள்ளே இருந்த சோபாவில் அமர்ந்து ப்ரீப் கேஸை மடியில் வைத்து அதன் மேல் பேப்பரை வைத்து கைப்பட ஏதோ தீவிரமாக எழுதிக் கொண்டிருந்தான். அவன் அருகே இருந்த மேஜையில் சங்கரியின் பச்சை நிற மெடிக்கல் ஃபைலைக் கண்டதும் அவனை சட்டை செய்யாத பாவனையில், மெல்ல அவனைத் தாண்டி, ஃபைலை எடுக்க சிந்து நடக்க, அதே கணம் கால்களை குறுக்கி வைத்து எழுதிக் கொண்டிருந்தவன், எழுதி முடித்த களைப்பில் கண்களை மூடிக் கொண்டு கால்களையும், கைகளையும் விரித்து நெட்டி முறிக்கச் சற்றும் எதிர்பாராமல் நீட்ட, அவன் கால்களில் தடுக்கி, தடுமாறி பூ மாலையென வெங்கட்டின் மேல் விழுந்தாள் சிந்தியா.

வெங்கட் மடியில் இருந்த பெட்டியும் பேப்பரும் தரையில் சரிய, மாயாஜாலம் போல முகத்தோடு முகம் நோக்கியபடி மிக மிக அருகில் தெரிந்த மனைவியை வைத்த விழி மாறாமல் பார்த்தான்.

''நான்..'' என்று இழுத்த சிந்தியாவின் வார்த்தைகள் உதட்டிலேயே உறைய இருவரும் சில நொடிகள் ஒருவரையொருவர் பார்வையால் விழுங்கியபடி இருக்க, பார்வை பரிமாறல் உதட்டுப் பரிமாறலாக மாறிய கணத்தை இருவரும் உணரவில்லை.

சில நொடிகளோ, பல யுகங்களோ நீடித்திருந்த நிலையில் இருவரும் கரைந்துப் போயிருந்தார்கள்.



டெலிபோன் மணியடிக்க, தன்னிலை உணர்ந்து சிந்தியா, முகம் அவமானத்தில் சிவக்க அவசர அவசரமாக விலக,

கூடவே எழுந்த அவன் கைகள் அவளை தாவி பிடித்தது.

''நீ எப்படி மறுத்தாலும் இல்லை என்று அழிச்சாட்டியம் செய்தாலும், நம் இருவரிடமும் பரஸ்பரம் உள்ள ஈர்ப்பு அப்படியேதான் இருக்கிறது சிந்து'' என்று அவன் குரலில் கரகரப்புடன் கண்களில் கூர்மையுடன் சொல்ல,

சிந்தியா செந்தணலில் நிற்பது போல் தவித்துப் போனாள். சற்றுமுன் நடந்த நிகழ்ச்சியில் உடல், சக்தி அத்தனையும் கலங்கிப் போயிற்று.

எவ்வளவு பெரிய தீங்கிழைத்தவன்?

எப்படி மறந்துப் போனேன்?

என்ன முட்டாள்தனம்?

கண்களை கரித்துக் கொண்டு அழுகை வர, வெங்கட் அவள் நிலை புரியாமல் மீண்டும் அவளை நெருங்க, சிந்தியா அவன் பிடியில் சிக்காமல் இருந்த மறுகையால் அவனை அடிக்க கன்னத்தை குறி வைக்க, அதை நொடியில் உணர்ந்த வெங்கட், அவள் கரத்தை வளைத்துப் பிடித்தான். ஆனால் கனிந்திருந்த அவன் முகம் பாறையாக இறுகிப் போயிற்று.

''கணவன் மனைவி உறவுக்கு அர்த்தம் தெரியுமா? சிந்து கணவன் மனைவியை அடிப்பதையே பொறுத்துக் கொள்ளாதவன் நான். ஆனால் நீ.. என்னையே.. சை..''

''இந்த நிலைக்கு என்னை ஆளாக்கியதே, நீங்கள். என்னுடைய சந்தோஷம், சிரிப்பு எல்லாவற்றையும் அழித்து

"தரைமட்டமாக்கியது நீங்கள்.." அவளால் வார்த்தைகளை முடிக்க முடியாத அளவுக்கு அவனிடம் இருந்து உறுமல் கிளம்ப, வாயடைத்துப் போனாள் சிந்தியா.

"இந்த நிலைமைக்குக் காரணம் யார்? நானா.. காரணமே சொல்லாமல் என்னை விட்டுப் பிரிந்து போனவள் நீ. என்னை வேண்டாம் என்று சொன்னவள் நீ. நீ மூன்று மாதத்தில் திருமண வாழ்க்கையை குலைத்தவள் நீ. என் நிம்மதி சந்தோஷம் எல்லாவற்றையும் சுட்டுப் பொசுக்கியவள் நீ. செய்வதை எல்லாம் செய்துவிட்டு எவ்வளவு தைரியமாக என் மேல் பழியைப் போடுகிறாய்? எவ்வளவு தைரியம்.." அவன் வார்த்தைகளை குரல் உயர்த்தி அதிர்ந்துபேசாமல் மெதுவாக பேசினாலும், அதில் படர்ந்திருந்த கோபம், அவன் முகம் சிவந்திருந்த சிவப்பிலும், அவளைப் பிடித்திருந்த கரங்களை முறிந்து விடும் அளவுக்கு அழுத்தியிருந்த விதத்திலும் தெரிந்தது. சிந்தியா வலியில் உதட்டைக் கடித்தாள். நெஞ்சமோ படுவேகமாக அடித்துக் கொண்டது.

சிந்தியாவின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். சட்டென்று அவளை உதறி விட்டு நடந்தான். கதவை அவன் சாத்திய வேகத்தில் சிந்தியாவின் காதில் 'உய்' என்ற சத்தம்தான் வந்தது.

எதிர்பாராது நடந்து விட்ட நிகழ்ச்சியில் சிந்தியா தடுமாறினாள்.

தவறு செய்துவிட்டு மற்றவர்கள் மேல் பழியைப் போடுவது மனித குலத்தின் இயல்புதானே. உத்தமியின் போல கோபப்பட்டுப் பேசினால் செய்த தவறு இல்லை என்றாகிவிடுமா?



சிந்தியாவின் மனம் மேம்போக்காக இப்படி நினைத்தாலும், சற்று முன் அவனுடன் பகிர்ந்து கொண்ட அந்நியோன்னியத்தை நினைத்து முகம் சிவந்து போயிற்று.

அவள் இத்தனைக் காலமாக மனதில் அவன் மேல் வளர்த்து வைத்திருந்த வெறுப்பு ஆட்டம் கண்டு விட்டதா? இனிமேலும் இப்படி கணவனாக தன்னை ஆக்கிரமித்தால் அவளால் எதிர்க்க முடியுமா?

சிந்தியாவிற்கு கண்களில் கண்ணீர் பொங்கியது.




**சா**ரதா குடும்பத்தினர் அன்று இரவு சங்கரியின் வீட்டிலேயே தங்கி அடுத்த நாள் காலையில் 'பழனி'க்கு 'ஜோ'விற்கு முடி எடுக்கப் போக வேண்டும் என்று முடிவெடுத்ததால், சிந்தியா தான் உபயோகப்படுத்திய அறையையும், அதன் பக்கத்தில் இருந்த மற்றொரு விருந்தினர் அறையையும் அவர்களுக்கு என்று தயார்ப் படுத்திக் கொடுக்க வேண்டியதாயிற்று.

இரவுப் பொழுதை ஹாலில் கிடந்த சோபாவில் படுத்துக் கடத்தி விட வேண்டியதுதான் என்று எல்லோரும் தூங்கப் போகும் வரை பொறுத்திருந்தாள் சிந்தியா.

"சிந்து இன்னும் நீ தூங்கப் போகவில்லையா? மணி பத்தாயிருச்சே. வெங்கட் அப்பவே போயாச்சு. நீயும் போ" என்று கடைசியாகப் படுக்கப் போன சாரதா, சிந்தியா ஹாலில் யோசனையாக அமர்ந்து இருப்பதைப் பார்த்து அவளை விரட்டினார்.

"அந்தைக்கு பதினோரு மணிக்கு சரியாக மருந்து கொடுக்க வேண்டும். நர்ஸை நம்ப முடியாது. அதனால் நானே பார்த்துக் கொடுத்துட்டுத்தான் தினமும் தூங்கப் போவேன் அத்தே" என்று அவர் நம்பும்படியான பொய்யை எடுத்து விட்டாள்.

வெங்கட் அறையில் போய்ப் படுக்க நேரிடுமோ என்று நினைத்தாலே நெஞ்சு உதறியது. ஆனால் சாரதா சிந்தியாவை அவ்வளவு சுலபத்தில் விட்டுவிடவில்லை.

"இன்னைக்கு சங்கரியை நான் கவனிச்சுக்கறேன். நீ போய்த் தூங்கு" என்று சொன்னதோடு நில்லாமல் சிந்தியா எழுந்து வெங்கட் அறைக்குள் செல்லும் வரை கண்காணித்துவிட்டுத் தான் அவர் சங்கரியின் அறைக்குள் சென்றார்.

அவர் வற்புறுத்தவே வேறு என்ன சொல்லி மறுப்பது என்று தெரியாமல் சிந்தியா உதட்டைக் கடித்துக் கொண்டு அவன் அறைக்குள் மெல்ல அடியெடுத்து வைத்தாள்.

ஒரே நாளில் இரண்டாவது முறை வெங்கட் சீரான மூச்சுடன் படுக்கையில் வெற்று மார்புடன் தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தவுடன்தான் அவளின் நெஞ்சப் படபடப்பு நின்றது.

அவன் காலையில் கண் முழித்து, தன்னை அவன் அறையில் கண்டுவிடும் முன்பு, தான் எழுந்து வெளியேறிட வேண்டும் என்ற எண்ணத்துடன் சத்தமில்லாமல் பூனையடி டுத்து வைத்து அங்கிருந்த ஒற்றை சோபாவில் உட்கார்ந்தாள். உட்கார்ந்தவுடன் என்னென்னவோ நினைவுகள் வந்து அவளைப் பாடாய்ப் படுத்தியது. இன்று நமக்கு ராத்திரிதான் என்று நினைக்கையிலேயே கண்களை ருகிக் கொண்டு தூக்கம் வந்தது.



சோபாவில் காலை மடக்கிக் கொண்டு தூங்கப் போனாள் சிந்தியா.

விடியற்காலையில் தூக்கம் லேசாகக் கலைய படுக்கையில் திரும்பிப் படுக்க முயன்றவள், நகரவே முடியாமல் தான் கட்டுண்டு கிடப்பதை உணர்ந்து திடுக்கிட்டு கண்களை மலர்த்தினாள்.

அவளின் கொடி இடையை சுற்றி கணவனின் கை இறுகி இருப்பதும் தான் அவன் புஜத்தில் தலை வைத்துப் படுத்திருப்பதையும் நம்ப முடியாமல் கனவா நினைவா? என்று புரியாமல் கண்களை ஒரு முறை தட்டி விழித்தாள்.

நிஜம் என்று புரிந்தபோதும், சிந்தியாவிற்கு விலகத் தோன்றவில்லை. தூக்கத்திலும் பிரகாசத்துடன் இருந்த கணவன் முகத்தை கண் இமைக்காமல் பார்த்தாள். பார்க்கப் பார்க்க அவள் நெஞ்சம் விம்மிப் போயிற்று. சட்டென்று ஒன்றுமே யோசிக்காமல் கணவனின் கன்னத்தில் தன் இதழ் பதித்தாள் சிந்தியா. சரியாக அதே நேரத்தில் தூக்கத்தில் அவன் புரள, சிந்தியாவின் இடுப்பை வளைத்திருந்த அவன் கை இறுக்கமும் சற்று தளர, கடகடவென்று சிந்தியா படுக்கையில் இருந்து எழுந்தாள்.

உதடு மெல்லியதாகத் துடிக்க, கண்கள் கலங்கிச் சிவக்க, வேகமாக அறையை விட்டு வெளியேறி குளியலறைக்குள் புகுந்தாள்.

ஷவரை திருகி அதனடியில் போய் நின்றவளின் கண்ணீர் தண்ணீரோடு கலந்துபோனது.

தன்னையே இழிவாக எண்ணினாள். எவ்வளவுதான் வெங்கட்டை வெறுத்தாலும், தன் மனதிலிருந்து அவனைக் கணவன் என்ற ஸ்தானத்தில் இருந்து இறக்கவில்லை என்ற உண்மை அவளை ஒரு குலுக்குக் குலுக்கிற்று.

நான் எப்படி அவன் அருகில் படுத்திருக்கக் கூடும் என்று சிந்தியா தேவையில்லாமல் சிந்தனை செய்யவில்லை. கணவனின் பலம் அவளறியாததா?

குளியலறைக்கு வெளியே அரவம் கேட்கவும் தான் வெகு நேரம் தண்ணீரில் இருப்பது புரிய மடமடவென்று ஈரத் துணிகளைக் களைந்து, முன் தினமே குளியலறை வார்டு ரோப்பில் தான் எடுத்து வைத்திருந்த மாற்றுடைக்கு மாறினாள்.

வெங்கட் இல்லாத வாழ்க்கை அவளுக்கு பாலைவனம் தான். ஆனால் அவன் மனதை மதிக்காமல், படுக்கையை மட்டும் பகிர்ந்து கொள்ள நினைக்கும் கணவன் சிந்தியாவிற்கு வேண்டியிருக்கவில்லை.

குளித்து மனதை நிதானப்படுத்தினாலும், தான் யோசிக்காமல் செய்த செய்கையை எண்ணி முகம் குன்றிப் போனாள்.

அதுவும் அவன் அறிந்திருந்தால்?

கடவுளே?!

சாரதா குடும்பத்தினர் எல்லோரும் வாடகைக்குக் கார் எடுத்துக் கொண்டு பழனிக்கு கிளம்பிவிட, எதிலும் மனம் லயிக்காமல் சங்கரியின் அறையில் வந்து அமர்ந்தாள். பொடியன் ஜோ வந்த ஒரு நாளிலேயே அவளின் அன்பைப் பெற்று விட்டான். எங்கும் அவன் குரல் நிறைந்திருப்பதைப் போல ஒரு உணர்வு அவளுக்கு ஏற்பட்டது.



"இன்று பேப்பரில் என்ன நியூஸ்மா?" என்று சங்கரி சிந்தியாவிடம் கேட்க,

அங்கிருந்த பேப்பரை எடுத்துப் படித்துக் காட்டினாள் சிந்தியா.

அதில் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டு சிறிது நேரம் மற்றவற்றை மறந்தாள். எல்லாம் சிறிது நேரம்தான். அதன் பிறகு மீண்டும் வெங்கட்டின் கம்பீரமான முகம் அவளை வேறு எதையும் யோசிக்க விடாமல் செய்தது.

மாலையில் அவன் வீட்டிற்கு வந்ததும், தாயின் நலம் பற்றி வழக்கம் போல இரு வார்த்தைகள் அவனிடம் பேச, சிந்தியாவிற்கு அவன் முகத்தை நிமிர்ந்து கூடப் பார்க்க முடியாமல் முகம் சிவந்துப் போனது. பதிலாக முணுமுணுப்பாக ஏதோ சொல்லிவிட்டு அவன் பார்வையில் இருந்து மறைந்தாள் அவள்.

அவனை முத்தமிட்டதை அவளாலேயே இன்னும் நம்ப முடியவில்லை. எண்ணி எண்ணிக் கூடச் செய்த காரியத்தை செய்தது அவளா? அவளுக்குள்ளேயே அவளறியாத சிந்து ஒளிந்துக் கொண்டிருப்பதை போல் அவளுக்கு ஒரு கற்பனையைத் தந்தது.

வெங்கட் இருக்கும் இடத்தில் அவளால் ஒரு விநாடி கூட சகஜமாக இருக்க முடியாதபடி முகம் சிவந்து போனது.

வெங்கட் விழிகள் பளிச்சிட, உதட்டோரம் சின்ன வளைவுடன் அவளை விநோதமாகப் பார்ப்பதை அவள் உணரவில்லை.




எப்பொழுதும் காலையில் தான் எழுந்தவுடன் தன் முன் வந்து நிற்கும் மருமகள் இன்று பத்து மணி வரை கண்ணில் படாமல் போகவே சங்கரிக்கு திகிலாக இருந்தது.

இரண்டு நாட்களாக சிந்தியாவின் முகம் வாட்டமாக, யோசனையாக இருந்ததைக் கவனித்துக் கொண்டு வேறு இருந்தார்.

ஃபேக்டரி கிளம்பும் முன்பு அம்மாவிடம் சொல்லிக் கொள்ள வந்து நின்ற வெங்கட்டைக் கவலையுடன் பார்த்தார் சங்கரி.

"நேற்று சிந்தியாவுடன் சண்டை ஏதுவும் போட்டாயா, வெங்கட்?" என்று அவனை நேராகக் கேட்டார்.

"என்னம்மா? ஏன் கேட்கறீங்க?" என்று புரியாமல் புருவத்தை உயர்த்திக் கேள்வி கேட்டான் வெங்கட். அவன் குழப்பத்தை உணராமல் "திரும்பவும் அவள் வீட்டை விட்டுப் போயிட்டாளா?" என்று மெல்லிய குரலில் சிறிது நடுக்கத்துடன் கேட்டார் சங்கரி.

இரண்டு நாட்களாக சிந்தியாவின் முக மாற்றத்தைக் கவனித்தவன், அதற்கு வேறு அர்த்தம் கற்பித்து சந்தோஷத்தில் இருந்தான். ஆனால், அம்மா கேட்ட கேள்வியில் உதட்டைக் கடித்தான். சற்று அதிகப்படியாக அவளிடம் உரிமை எடுத்துக் கொண்டு, மேலும் அவள் வெறுப்பைச் சம்பாதித்து விட்டோமோ? என்று உள்ளுக்குள் பயந்து போனான்.

ஆனால் தன் பயத்தைக் காட்டிக் கொள்ளாமல் அம்மாவைத் தேற்றும் முயற்சியில் வேகமாக சிரித்துக் கொண்டு,



"ஏம்மா கண்டதையும் நினைச்சுக் கவலைப்படறீங்க? அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை. இனிமேல், எங்களுக்குள் சண்டையே வராது. நீங்க நிம்மதியாக இருங்க. நான் ஃபேக்டரி போகும் முன் அவளை உங்களிடம் அனுப்பி வைக்கிறேன். தோட்டத்தில் செடி ஏதாவது பார்த்துக் கொண்டிருப்பாள்" என்று சொல்லிவிட்டு வேகமாக அறையிலிருந்து வெளியே வந்தான்.

சிந்தியாவை இனி அவள் போக்கில் விடுவதாக இல்லை. மீண்டும் அவனை விட்டுப் பிரிந்து போயிருந்தாலும், வலுக்கட்டாயமாக திரும்பி அவளை அழைத்துக் கொண்டு வந்துவிடும் உறுதி அவனிடமிருந்தது.

கீழ்த்தளத்தில் அவளைத் தேடியவன் அவள் அங்கு இல்லாததைக் கண்டு கடகடவென்று படிகளை இரண்டிரண்டாகத் தாண்டி அவளுடைய அறைக்கு வந்தான்.

அதற்குள் அவன் நெஞ்சு தவித்துப் போனது. அறைக் கதவு சாத்தியிருக்கவே, கதவை வேகமாகத் தள்ளினான்.

உள்ளே படுக்கையில் கழுத்து வரை மூடிக் கொண்டு ஜுரத்தில் முனங்கியபடி படுத்திருந்த சிந்தியாவைக் கண்டு ஒரு நொடி நிம்மதியடைந்தாலும், மறுகணம் பதட்டமானான். வேகமாக அவள் அருகில் சென்று நெற்றியில் கை வைத்துப் பார்த்தான். அவன் கை தீயாய் சுட்டது.

உடனே தன்னுடைய அறைக்கு பாய்ந்து சென்று போன் செய்து டாக்டரை வரவழைத்தான். காலையில் இருந்து அவள் அறையில் இருந்து வெளியே வரவில்லை என்று சமையல்காரம்மா சொன்ன செய்தியில், ஒன்றும் சாப்பிட்டு

இருக்க மாட்டானே என்று பாலும், இட்லியும் கொண்டு வரச் சொன்னான்.

டாக்டர் வந்து சேரும் வரை அவன் பக்கத்திலேயே செய்வதறியாது நின்றான். அவனுடைய வரவை சிந்தியா உணரவில்லை. ஜுர வேகத்தில் அவள் கண்களை இறுக மூடியிருந்தாள்.

"வெங்கட் இது வைரல் ஃபீவர் மழையினால் சென்னை முழுவதும் பரவியிருக்கு. ஜாக்கிரதையாக மருந்து, மாத்திரை கொடுத்து கவனித்தால் இரண்டே நாட்களில் குணமாகி விடும்" என்று தன்னுடைய பிரிஸ்கிரிப்ஷன் பேடில் மருந்து எழுதிக் கொடுத்தார் டாக்டர்.

இரண்டு நாட்கள் சிந்தியாவின் தேவைகளைத் தானே அருகில் இருந்து கவனித்தான்.

ஜுரம் குறைந்து கண் முழித்துப் பார்க்கும் போதெல்லாம் வெங்கட்டை கண்டவளுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. அதுவும் அவனே, நேரா நேரத்திற்கு மருந்து கொடுத்து பாலில் குழைத்த சாதத்தை ஸ்பூன் கொண்டு மிகப் பொறுமையாக ஊட்டி விடவும் உள்ளுக்குள் இளகிப்போனாள்.

ஜுரம் வேகம் வேறு மிச்சமிருந்த, அவள் உறுதியை குலைத்து விட அவனுடைய பணிவிடைகளைக் கண்டு கண்களில் இருந்து கண்ணீர் பெருகிற்று.

சிந்தியாவின் கண்ணீர் காரணம் புரியாமல் அவளை ஒட்டி அமர்ந்திருந்த வெங்கட், புருவங்கள் நெறிய அவளைப் பார்த்துக் கொண்டே தன்னுடைய கைக்குட்டையால் கண்ணீரைத் துடைத்து விட்டான்.



சிந்தியாவிற்கு ஜுரம் என்றறிந்தவுடன் சங்கரியும் கவலையானார்.

வெங்கட்டின் அக்கறையான கவனிப்பால் சரியாக இரண்டு நாட்களில் நன்றாக குணமடைந்து விட்டாள் சிந்தியா.

நாட்கள் மெல்ல ஊர்ந்தன. நாட்கள் செல்லச் செல்ல சிந்துவிடம் நிறைய மாறுதல் உண்டாயின.

இந்த இரண்டு வருடங்களில் கணவனைக் கண்களால் காணாமல் இருந்த வரை தெரியாமல் இருந்த இழப்புகள் தினம் தினம் கணவனைப் பார்க்கும் போது இழப்புகளின் அளவு பெரியதாக இருந்தது. நிறைய சமயங்களில் அவளை நிலை தடுமாற வைத்தது.

மறக்கவும், மன்னிக்கவும் தெரிந்த மிகச் சராசரி பெண்ணாகத்தான் அவள் இருப்பதாக மிகவும் வலியுடன் புரிந்துக் கொண்டாலும், சின்னக் கருவை அவளிடம் கூட சிறு அனுமதி பெறாமல் அழிக்க நினைத்த கேவலமான செய்கையை ஒரு நொடி நினைத்தால் கூட மனதில் அவன்மேல் வெறுப்பு ஏறி வந்து உட்கார்ந்து விடுவதை அவளால் தவிர்க்க முடியவில்லை.

அவனுடன் ஒட்டி உறவாடவும் முடியாமல் விலகிப் பறந்து ஓடி விடவும் முடியாமல் ஒரு புது விதமான சங்கிலியில் அவள் சிக்கி விட்டிருந்தாள்.




சங்கரிக்கும் உடல் நிலை வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தது.

அன்று சூரியநாராயணனும், விமலாவும் வீட்டிற்கு சிந்தியாவைப் பார்க்க வந்தனர்.

மஞ்சுவிற்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயமாகி இருக்கிறது என்று சொன்னார்கள்.

"மாப்பிள்ளை வீட்டுக்காரங்க, இந்த மாசத்திலேயே கல்யாணத்தை முடித்துவிட வேண்டும்ன்னு ரொம்ப அவசரப்படறாங்க சிந்து. அதனால் தேதிக் குறிக்க ஜோசியரைப் போய் நாளைக்குப் பார்க்கலாம்னு இருக்கேன்" என்றார் சூர்யநாராயணன்.

"மஞ்சுவுக்கு மாப்பிள்ளையைப் பிடிச்சிருக்காப்பா?" என்று ஆர்வமாகக் கேட்டாள் சிந்தியா.

"ம்.. ம்.. பிடிக்கதான் இருக்கு. மாப்பிள்ளை நேற்று மஞ்சுவுடன் தனியா பேசணும்ன்னு வந்தார். அப்புறம் அரை மணி நேரத்துக்கெல்லாம் பீச் வரை போய்விட்டு வரோம்ன்னு இரண்டு பேரும் கிளம்பிட்டாங்க. இந்த காலத்துப் பசங்கயில்லையா, எல்லாத்துலேயும் அவசரம்தான்" என்று சிரிப்புடன் முடித்தார்.

"மஞ்சுவையும் கூட்டிட்டு வந்திருக்கலாமேப்பா. அவளைப் பார்த்து நாளாயிடுச்சு" என்று தன்னுடைய ஏக்கத்தைச் சொன்னாள் சிந்தியா.

"அது என்னவோ தெரியவில்லை சிந்து. நீ உன் மாப்பிள்ளையோடு கிளம்பியதிலிருந்து அவளுக்கு உன்னைப் பற்றி ஒரே யோசனைதான். சிந்து சந்தோஷமாக இருப்பாளா? அட்ஜஸ்ட் ஆயிருப்பாளா?ன்னு அடிக்கடி கேட்டுட்டே இருந்தா. ஆனா அவினாஷைப் பார்த்து கல்யாணம் நிச்சயம் ஆனவுடன் முழுசும் அவனைப் பற்றித்தான் பேச்சு."



"மஞ்சுவிற்கு மனம் போல் மாங்கல்யம் கிடைச்சிருக்கு" என்று மிகவும் சந்தோஷப்பட்டாள் சிந்தியா.

அம்மா, அப்பாவை பார்த்தவுடன்தான் சிந்தியா முகம் அழகாக ஜொலிக்குது என்று பரிவோடு சொன்னாள் சங்கரி.

இடையில் ஒரு நாள் சங்கரியை வந்து பார்த்துவிட்டுப் போன டாக்டர் அவரின் உடல்நிலை முன்னேற்றத்தைப் பார்த்து ஆச்சர்யமானார்.

"நீங்க இதே மாதிரி மனசு சந்தோஷத்தோடு குணமாகணும் என்ற ஆசையோடு இருந்தீங்கன்னா, இன்னும் எண்ணி ஐந்து மாதத்தில் எழுந்து நல்லா நடமாட ஆரம்பிச்சிடுவீங்க" என்று நம்பிக்கை அளித்துவிட்டுப் போனார்.

காரணம்

மகள் முகத்தில் இருந்த தெளிவு.

இப்படி கணவனையும், மனைவியையும் இணைக்கத்தான் கடவுள் இப்படி ஒரு வியாதியை எனக்குக் கொடுத்தானோ? என்று உள்ளுக்குள் ஒரு சந்தோஷம் உண்டு அவருக்கு.

சிந்தியாவிடம் நிறையக் கதை பேசினார். தன்னுடைய வாலிபப் பிராயத்தில் நடந்த சில கூத்தான நிகழ்ச்சிகளைப் பற்றி அவர் வேடிக்கையாக சொன்னதைக் கேட்டு சிந்தியா கிளுகிளுத்துச் சிரித்தாள்.

கிண்டலாக அவள் சிரிக்கச் சிரிக்க பேசுவதில் கேட்டுக் கொண்டேயிருக்கலாம் போல இருந்தது அவளுக்கு.

நிறைய நேரங்களில் வெங்கட்டும் அவர்களுடன் சேர்ந்து கொள்வான். சிந்தியாவிற்கு அவனிடம் நிறைய மாற்றங்களை

கவனிக்க முடிந்தது. இரண்டு வருடத்திற்கு முன், திருமணம் நடந்த புதிதில், அவன் காலை ஏழு மணிக்கு 'வேலை' என்று கிளம்பினால், வீடு வர அனேகமாக இரவு பத்து பதினொன்று ஆகிவிடும். ஆனால் இப்பொழுது மெதுவாக நிதானமாக காலை பத்து மணிக்கு ஃபேக்டரிக்கு கிளம்பினால், மாலை ஐந்து, ஆறு மணிக்கு அரக்க பரக்க ஓடி வந்தான்.

எட்டத்தில் இருந்து பார்க்கையில் தம்பதியர் இருவரும் சகஜமாகப் பேசுவது போல் இருந்தாலும் வெங்கட், சித்தியாவின் கண்களை நேருக்கு நேர் சந்திக்கும் போதெல்லாம், அவன் பார்வையில் கேள்வி, தேடல், ஏக்கம், எதிர்பார்ப்பு அத்தனையும் கலந்திருந்தது.

எல்லாவற்றையும் மிஞ்சி அவன் பார்வையில் நிறைந்திருந்த கரை காண முடியாத காதலை, அன்பை, சித்தியா உணரவில்லை.

அன்றும், அந்த சாயங்கால வேளையில் சங்கரியும், சித்தியாவும் சுவாரஸ்யமாக ஊர் கதையைப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"காலேஜ் படிக்கிற நாளில், ஒரு நாள் 'பாச மலரை' வீடியோவில் பார்த்துவிட்டு, நீங்க ஏன் எனக்கு தங்கச்சியை பெத்துத் தரவில்லைன்னு சண்டைக்கு வந்துட்டான். உன் புருஷன் ஒரு தங்கச்சி இருந்தா எவ்வளவு நல்லா இருக்கும். அவளுக்கு அது பண்ணித் தருவேன், இது பண்ணித் தருவேன். அவள் கேட்பதை எல்லாம் தட்டாமல் செய்வேன். அப்படிப் பாசத்தில் உருகிடுவேன். அப்படி இப்படிச் சொல்லிக் கடைசியில் தங்கச்சிப் பைத்தியமாகி, ஒரு நாள் நீயனா நான் ஒரு தங்கச்சியைத் தந்து எடுக்கப் போகிறேன்னு நுனைக்கு



இப்ப அமெரிக்காவில இருக்கிற ராகுலையும் கூட்டிட்டு ஒரு காலேஜ் வாசலுக்குப் போய் நின்று இருக்காங்க. கடைசியில் இவன் கற்பனைத் தங்கச்சியைப் போல் ஒருத்தியைப் பார்த்துட்டு தங்கச்சி.. அப்படின்னு சொல்லி கையைப் பிடிக்க அவள் விட்டாள் பாரு ஒரு அறை. இவன் கன்னத்தில் அன்னைக்கு இவன் முகத்தை நீ பார்த்திருக்கனும் என்று சொல்லிக் கண்களை இடுக்கி, வாயில் காற்றடக்கி உப்ப வைத்துக் கொண்டு 'இப்படித்தான் இருந்தது' என்று சொல்லிச் சிரித்தார் சங்கரி.

"அதற்குப் பிறகு தங்கச்சி என்று பெயர் எடுத்தாலே காத தூரம் ஓடிவிடுவான் வெங்கட்" என்று மேலும் சிரித்தார்.

மனைவி மட்டும் பிள்ளை பெற்றுக் கொள்ளக் கூடாது. ஆனால் தாய் மட்டும் எவ்வளவு பிள்ளை வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாமா? என்று தனக்குள் பேசி இறுகியிருந்த சித்தியா, ஒரு கன்னத்து அறையில் அவன் தங்கச்சி பைத்தியம் தெளிந்தது என்று அத்தை சுவைபடக் கூறியதைக் கேட்டு, அந்தக் காட்சியை கற்பனை செய்து சத்தம் போட்டுச் சிரித்தாள்.

"ஆள்தான் வாட்டசாட்டமாக வளர்ந்திருக்கானே தவிர மனசு குழந்தைம்மா, வாயிலே விரலை விட்டாக் கூடக் கடிக்கத் தெரியாது" என்று பெருமையுடன் மகனைப் பற்றி அவர் பேச, அதைக் கேட்டுக் கொண்டே வெங்கட்,

"ஆமாம் கடிக்கத் தெரியாதுல முழுங்கிடுவேன்" என்று சொல்லிச் சித்தியாவைப் பார்த்துக் கண் சிமிட்ட முதலில் திகைத்து பின் முகம் சிவந்தாள் சித்தியா.

அதன் பிறகு தாயும், மகனும் சேர்ந்து அடித்த அரட்டையிலும், தன்னை மறந்து சிந்தியா சிரிச்ச சிரிப்பிலும் வீடே குலுங்கியது.

ரொம்ப வருஷங்களுக்குப் பிறகு, அந்த வீட்டில் குதூகலத்தை கேட்டு வாசலில் நின்றிருந்த மல்லிகைப் பந்தல் தன்னுடைய இலைகளை சிலிர்த்து பூக்களை உதிர்த்தது.




அன்று டைனிங் ஹாலில் சங்கரிக்கு மதியம் சாப்பிட சாப்பாடு எடுத்து வைத்துக் கொண்டிருந்த சிந்தியாவின் முன்பு சத்தமில்லாமல் வந்து நின்றாள் மஞ்சு.

"மஞ்சு..." விழி அகலத் தங்கையை ஆச்சர்யத்தோடு வரவேற்றாள் சிந்தியா.

"வாம்மா கல்யாணப் பொண்ணு" என்று சங்கரியும் வாய் நிறைய அழைக்க, பின் நலம் பற்றிய பேச்சோடு மஞ்சுவின் வருங்கால மாப்பிள்ளையைப் பற்றிய பேச்சும் அதுவுமாக டைனிங் ரூம் களைகட்டியது. மூவருமாக சேர்ந்து அமர்ந்து உணவு சாப்பிட்டு முடிக்கவும்,

"ரொம்ப நாள் கழிச்சு தங்கச்சி வந்திருக்கா, மேலே கூட்டிட்டுப் போய் பேசும்மா" என்று சங்கரி சொல்ல, சங்கரியை மருந்து கொடுத்து படுக்க வைத்துப் பின் மஞ்சுவை தன்னுடைய அறைக்குள் அழைத்துச் சென்றாள்.

அக்காவின் 'தனி' அறையை நோட்டம் விட்ட மஞ்சுவிற்கு கண்களில் கண்ணீர் தளும்பியது.



"அக்கா, நீ இன்னும் அத்தான் மேல் கோபமாகத்தான் இருக்கிறாயா? உங்களிடையே ஒன்றும் சரியாகவில்லையா?" என்று குரலில் அழுகையுடன் கேட்க,

திடீரென்று மஞ்சுவிடம் இருந்து பிறந்த கேள்வியில் சிந்தியா விழிகள் அகலமாக விரிந்தன.

கண்களைத் துடைத்தபடி மஞ்சு தொடர்ந்தாள்.

"அக்கா உன் வாழ்க்கையில் என்ன குழப்பம் என்று என்னிடம் கூடவா நீ சொல்லக் கூடாது. உன் கோபத்தைப் பார்த்தால் அத்தான் ஏதோ தவறு செய்திருக்கிறார் என்று புரிகிறது. ஆனால் அது என்ன தவறு என்று யாருக்காவது, ஏன் அட்லீஸ்ட் அத்தானுக்காவது தெரியுமா? என்ன தவறு செய்தோம் என்று புரியாமல் தண்டனை அனுபவிப்பது ரொம்ப அநியாயம் தெரியுமாக்கா?"

"மஞ்சு ப்ளீஸ், நானே பழசை மறந்திட்டேன், நீ திரும்பவும் கிளறாதே."

"எங்கே இந்த தனி அறையைப் பார்த்தால் நீ பழசை மறந்த மாதிரியா தெரியுது. உன்னோட வாழ்க்கையை நீயே கெடுத்திடாதே. அத்தானை மாதிரி நல்ல மனுஷனை நான் பார்த்ததே கிடையாது. என்ன பார்க்கிறே.. அத்தை கிட்டே பேசிட்டுயிருந்தேன். சொன்னாங்க. நீ வீட்டை விட்டு போனப்பறம், எத்தனை முறை கேட்ட பிறகும், நீ வரவே மாட்டேனு முரண்டு பண்ணப் பிறகு, இந்த இரண்டு வருஷமா அத்தானுக்கு வேறு கல்யாணம் செய்து வைக்க எப்படி முயற்சி பண்ணாங்களாம் தெரியுமா? அத்தான் ஒரு இம்மி கூட அசையவில்லையாம் எனக்கு சிந்துதான். அவள் இல்லை என்றால் வேறு யாரும் இல்லை. நான் இப்படியே இருந்து

விட்டுப் போறேன் என்று அழுத்தமாகச் சொல்லி விட்டாராம் தெரியுமா?"

மஞ்சு பேசப் பேச சிந்தியாவிற்கு சர்வமும் கலங்கியது. இந்த விஷயம் அவள் அறியாதது.

"சும்மா பிடிவாதம் பிடிக்காதேக்கா, மன்னிக்கத் தெரிஞ்சாத்தான் அவன் மனுஷன். எப்பவும் ஒரே விஷயத்தில் நிற்காதே. கொஞ்சம் இறங்கி வா. நீ தவறுன்னு நினைச்சதை என்னோட கோணத்தில் இருந்து மட்டும் பார்க்காமல் அத்தானோட கோணத்தில் இருந்தும் பார்."

ஆனால்.. வெங்கட்டின் கோணத்தில் இருந்து பார்த்தாலும் செய்த தவற்றில் துளியும் நியாயம் இல்லையே.. சிந்தியாவின் இந்த நினைவு ஓட..

"அத்தானைப் பார்க்கறப்ப எல்லாம் எனக்கு பாவமா இருக்கும்க்கா. வீடு போக வழி தெரியாமல் திருவிழாக் கூட்டத்தில் மாட்டிக்கிட்ட குழந்தை மாதிரி உனக்கு அவர் மேல் எதனால் வெறுப்பு என்று நீ கண்டிப்பாக சொல்லவில்லை என்று அவர் மேல் எழுதி ஒட்டியிருக்கிறது தெரியுமா? அவர் நிலையில் நான் இருந்தேன்னா? இல்லை வேறு யார் இருந்தாலும் நீ இப்படி முறுக்கிக் கிட்டு நிக்கறதுக்கு, திரும்பி கூடப் பார்த்திருக்க மாட்டாங்க தெரியுமா? எப்படியோ போகட்டும் என்று விட்டு ஒழிஞ்சிருப்பாங்க. ஆனா அவர் மீண்டும் மீண்டும் உன்கிட்டேயே வரார் என்றால் உன் மேல் அவர் வைத்திருக்கும் அன்பையும், ஆசையையும் நினைச்சுப் பாருக்கா. அதுக்கு நீ கொடுத்து வைச்சிருக்கணும்."

"ப்ளீஸ் மஞ்சு ஸ்டாப் இட். கல்யாணம் நிச்சயமான உடனே பெரிய மனுஷி மாதிரிப் பேச ஆரம்பிச்சிட்ட. என் விஷயம்



நான் பார்த்துக்கறேன். அதை விடு வேற பேசு" என்று மஞ்சுவின் பேச்சை நிறுத்த முயற்சித்தாள். மஞ்சு பேசப் பேச ஏற்கனவே இளகியிருந்த நெஞ்சம் இனி தடாலடியாக வெங்கட்டின் காலடியில் விழுந்து விடுமோ என்று அவளுக்குப் பயமாக இருந்தது.

ஆனால் மஞ்சுவின் முகம் சிவந்து, கண்களில் கண்ணீர் கொப்பளித்தது.

"நான் இவ்வளவு பேசின பிறகும் நீ புரிஞ்சுக்க மாட்டியாக்கா. எனக்குக் கல்யாணம் முடிந்ததும் நீ திரும்பவும் வீட்டுக்கு தனியா வந்து நிற்கப் போறீயோன்னு உன் மனசுல ஒரே நெருடல். திருமணமாகியும் நீ பிறந்த வீட்டில் இருப்பதால் எனக்கு இரண்டு மூன்று வரன்கள் தட்டிப் போனதே. அதை மனதில் வைத்துக் கொண்டுதானே இங்கே வந்தாய்? என் வாழ்க்கைக்குத் தடையாக நீ இருப்பதற்குப் பயந்துதானே இங்கே வந்தாய். எனக்குத் தெரியும்க்கா. ஆனால் ப்ளீஸ்க்கா, எனக்குத் திருமணம் முடிந்தவுடன் மீண்டும் கிளம்பி வந்துவிடாதே. புத்திசாலித்தனமான முடிவை எடுக்கா, ப்ளீஸ்க்கா" என்று கிட்டத்தட்ட அழுகையில் கெஞ்சவே தொடங்கினாள் மஞ்சு.

வீட்டு பக்கத்தில் பிஸினஸ் சம்பந்தமாக ஒரு ஹோட்டலில் 'மீட்டிங்' முடித்துவிட்டு களைப்பாக இருக்கவே, குட்டித் தூக்கம் போடலாம் என்று வீட்டுக்கு வந்து, தன்னுடைய அறைக்குள் நுழைய எத்தனிக்க வெங்கட்டின் காதுகளில் மஞ்சு அழுகையில் கெஞ்சிய கெஞ்சல்கள் மொத்தமாக தெளிவாக விழுந்தது.

சில நொடிகள் செயலிழந்து போனான்.

முகம் பாறையாக இறுகியது.

கை முஷ்டி நரம்புகள் புடைத்துக் கொண்டு கிளம்பின.

'மை காட்' என்று முணுமுணுத்தபடி நெற்றியை அழுத்தமாகத் தேய்த்தான். அங்கே நிற்கப் பிரியப்படாமல், தட தட வென்று படியிறங்கிப் போக, முகம் செவ செவக்க, காரை எடுத்துக் கொண்டு வேகமாக வெளியேறினான்.

சிந்தியா தன் அம்மாவின் மேல் உள்ள பிரியத்தால், அவர்களுக்கு உடம்பு முடியவில்லை என்றவுடன் வந்திருக்கிறாள் என்று நம்பியவன், இந்த சில நாட்களில் அவளின் நடவடிக்கையில் இருந்து அவன், அவளின் மனதில் இருக்கிறான் என்று நம்பியவன், மஞ்சு பேசிய பேச்சில் இடிந்து போய் விட்டான். இந்தக் கோணத்தில் அவன் சிந்திக்கவே இல்லை. ஸ்டியரிங் வீல் பிடித்திருந்த கை கோபத்தில் இறுகியிருந்தது. மொத்தத்தில் அவளின் அன்பு இங்கே யில்லை...

உண்மையில் சிந்தியாவால் முன்பு போல் வெங்கட்டை வெறுக்கவே முடியவில்லை. மாறாக அன்புதான் கூடியது. பெரிய தீங்கைச் செய்தவன் மேல் எப்படி அன்பு பெருக முடியும் என்பதுதான் சிந்தியாவிற்குப் புரியவில்லை.

ஆனால் தப்பு செய்த 'வெங்கட்' தண்டனையைக் கண்டிப்பாக அனுபவித்தே தீர வேண்டும். மனைவியை பிரிந்தே ஆக வேண்டும் என்று அவள் மனம் வாதிட்டது. ஆனால் அது உள்ளே மற்றொரு குரல் தவறே செய்யாதவன் அவன் ஏன் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று கேள்வி கேட்டது.



அவன் மேல் அடங்காத வெறுப்பைச் சுமந்து கொண்டு இரண்டு வருடங்கள் பிரிந்திருந்த சிந்தியாவால், அவன் மேல் அளவில்லாத பிரியத்தை வைத்துக் கொண்டு எப்படி பிரிந்திருக்க முடியும் என்று திகைப்பாக இருந்தது.

ஆனால் சங்கரி உடம்பு குணமடைந்தவுடன் போய்த்தானே தீர வேண்டும். இது அவளே தனக்குள் விதித்திருந்த கட்டுப்பாடாயிற்றே. மீற முடியுமா?

ஆனால் மஞ்சுவிடம், அவள் நினைப்பதுபோல் இங்கு ஒரு விஷயமும் நடக்கவில்லை. அவளுக்கும், வெங்கட்டுக்கும் இடையில் உறவு மிகவும் பலப்பட்டுக் கொண்டிருக்கிறது. முடிவு நல்லதாகவே அமையும் என்று கூறி அவளை சமாளித்து சமாதானப்படுத்தி அனுப்பினாள். மஞ்சுவின் முகம் மலர்ந்தது.




"நம்ம ஃபேக்டரி ஆண்டு விழாவிற்கு என்ன புடவைம்மா கட்டிட்டுப் போகப் போறே" என்று சங்கரி சிந்தியாவைக் கேட்க, போர்வையை அவரின் இடுப்பு வரை இழுத்து விட்டுக் கொண்டிருந்த சிந்தியா அவர் பேசியது புரியாமல் விழித்தாள்.

அவள் பார்வையில் பொருள் புரிந்தது. சங்கரி கண்களை சுருக்கினாள்.

"நம்ம ஃபேக்டரியின் பன்னிரெண்டாவது ஆண்டு விழா நாளைக்கு கொண்டாடறதைப் பத்தி வெங்கட் உங்கிட்டே சொல்லவில்லை?" என்று சந்தேகமாகக் கேட்டார்.

எங்கே அவன்தான் ஒரு வாரமாக அவள் இருந்த திசைக்கே வரவில்லையே. எப்பொழுதாவது சந்திக்க நேர்ந்தாலும், கண்கள் இடுங்க கடுமையான பார்வை பார்த்தான். இந்த அழகில் ஃபேக்டரி கொண்டாட்டத்தைப் பற்றி அவனிடம் சொல்வதாவது.

ஆனால் சங்கரியிடம் சமாளித்துக் கொண்டாள். "ஓ... அதுவா அத்தை சொன்னார், அது நாளைக்கா? நான் மறந்தே போனேன்" என்று தலையை கையால் லேசாகத் தட்டிக் கொண்டாள்.

ஒரு நிமிடத்தில் என்ன வெல்லாமோ நினைத்துக் கலங்கிப் போன சங்கரி இப்பொழுது நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

வெங்கட், ஃபேக்டரியில் நூறு பேருக்கு மேல் வேலை செய்கிறார்கள். இரசாயனப் பொருட்கள் அதாவது, குளோரின், காஸ்டிக் சோடா, ப்ரோமைட்ஸ், ப்ரோமின்ஸ், கால்சியம் குளோரைடு, சோடா ஆஷ் போன்றவற்றைத் தயாரித்து சோப், பேப்பர், பெயிண்ட் காலணிகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்குச் சப்ளை செய்கிறார்கள்.

வெங்கட் அப்பா சின்ன அளவில் தொடங்கி வைத்ததை வெங்கட் பெரிய அளவில் உற்பத்தி செய்து வியாபாரத்தைப் பெருக்கியிருந்தான்.

வெகு சீராகச் சென்ற உற்பத்தி இரண்டு வருடத்திற்கு முன்னால் சரியாக சொல்லப்போனால் வெங்கட் சிந்தியா திருமணத்தின் போது வெகுவாகத் தடைப்பட்டது.

சூப்பர்வைசர், குடித்துவிட்டு வேலை பார்த்த லேபர் ஒருவரை திட்டி விட, அவன் குடிபோதையில் தாறுமாறாகப்



பேச, கோபத்தில் சூப்பர்வைசர் அவனை அடித்து விட்டார். அடி வாங்கிய லேபர், லேபர் கமிட்டி மெம்பர் அவன் ஊரிலுள்ள எல்லா லேபர்ஸ்ஸையும் கூட்டி வந்து தகராறு பண்ண ஆரம்பித்தான்.

அதே சமயம் தொழிலில் நிறைய போட்டியும் இருந்ததால் வெங்கட் லேபர் ப்ராப்ளத்துடன் தொழில் போட்டியையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது.

தொழிலாளி சூப்பர்வைஸர் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டால்தான் விடுவேன் என்று விடாப்பிடியாக வம்பு பண்ண, சூப்பர்வைசரோ, தப்பு பண்ணியது அவன், அவன்தான் என்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று சொல்ல, இரு கோஷ்டியாக ஊழியர்கள் பிரிந்தார்கள்.

எப்படித்தான் அத்தனை கஷ்டத்தையும் தாண்டி சுமுகமாகத் தொழிற்சாலையை வெற்றிகரமாக நடத்தினானோ அதை அவனிடம்தான் கேட்க வேண்டும்.

"அவன் அப்பாவோட கனவுதான் இந்த ஃபேக்டரி சிந்து. ஆனால் அவர் ஆரம்பிக்கும் போது இவ்வளவு பெரிசா இல்லை. இவன் தலையெடுத்தவுடன் தான், இந்த அளவுக்குப் பெரிசாக்க. உங்களுக்குக் கல்யாணமான புதுசில் லேபர் தகராறு காரணமாக ஃபேக்டரியை மூட வேண்டிய நிலை வந்துடுச்சு சிந்து.. பேக்டரி மட்டும் கொஞ்சநாள் மூடியிருந்தால், அத்தனைக் காலம் செய்து கொண்டிருந்த சப்ளை அனைத்தும் கம்படீடர் கையில் போயிருக்கும். புதுசா பொண்டாட்டி வந்த துரதிர்ஷ்டம் இப்படி ஃபேக்டரியையே மூட வேண்டிய தாயிற்றுன்னு யாரும் சொல்லிவிடக் கூடாதுன்னு ராத்திரி, பகல் பார்க்காமல் தீரவே தீராதுங்கிற பிரச்சினையை எப்படி

முடிச்சாங்கரது அவனுக்கே வெளிச்சம். நீ வேறு வந்து புதுசன்னு பிரச்சினையைக் கண்டு பயந்து போவியேன்னு உன்னிடம் கூட என்னைச் சொல்ல விடவில்லை. அப்புறம் எல்லாம் சரியா முடிஞ்சாச்சான்னு நிம்மதி வரும்போது நீ பிரிஞ்சு போயிட்ட. அப்போவெல்லாம் அவன் ரொம்பக் கஷ்டப்பட்டாம்மா. அவன் முகத்தைப் பார்க்க சகிக்காது 'உர்'னு இருப்பான். அப்புறம் இரண்டு வருஷம் கழிச்சு திரும்பவும் நீ வந்த அன்றுதான் அவன் முகத்தில் ஒளியைப் பார்த்தேன். ஆனால், மீண்டும்..." என்று இழுத்தார் அவர்.

அவனைப் பற்றி அவர் சொல்லச் சொல்ல சிந்தியா, அவன் அவளுக்கு செய்த கொடுமையை மறந்தே போய் விட்டாள். நிஜம்மா என் மேல் அவ்வளவு அன்பா என்று உருகித்தான் போனாள்.

"இந்த இரண்டு வாரமா அவன் ஏதோ குழப்பத்தில் இருப்பது எனக்குத் தெரியுது சிந்து. உங்களுக்குள்ளே அப்படி என்னதான் பிரச்சினையோ" என்று அங்கலாய்த்தார்.

பின் "சிந்து நீ சீக்கிரமா ஒரு குழந்தையைப் பெத்து அவன் கையில் கொடு எல்லாம் சரியாகிவிடும்" என்று முடித்தார்.

பிரச்சினையே அங்கதானே இருக்கு என்று மனம் வெதும்பினாள் சிந்தியா.




இரவு சாப்பிடுகையில் பொதுவாக "நாளைக்கு ஃபேக்டரி ஆண்டு விழா. நீ வரவேண்டும் இல்லை என்றால் அம்மா [illegible] வருத்தப்படுவார்கள்" என்று எங்கோ



வெறித்தபடி வெங்கட் சொல்ல, சிந்தியாவிற்குக் கலக்கமாக இருந்தது.

நான் அவனுடைய எண்ணங்களுடன் ஒத்து வரமாட்டேன் என்று புரிந்து என்னைக் கழற்றி விடலாம் என்று நினைக்கிறானோ?

இல்லையென்றால் என் மீது திடீர் என்று ஏன் வெறுப்பு. முகத்தைக் கூடப் பார்க்க மாட்டேன் என்கிறானே என்று கோபப்பட்டாள்.

இப்பொழுதெல்லாம் அவள் மனம் அவனிடம் என்ன எதிர்பார்க்கிறது என்றே அவளால் புரிந்துக் கொள்ள முடியவில்லை.

அத்தை இவனைப் பற்றி என்னவெல்லாம் சொன்னார்கள். நான் இல்லாதபோது அழுது வடிந்தானாம். என்னைப் பார்த்தால்தான் சிரிக்கிறானாம். நம்பும்படியாகவும் இருக்கின்றது என்று வறட்டு சிரிப்பொன்றை உதிர்த்தாள்.

இந்த அழகில் பிள்ளையாவது ஒன்றாவது என்று எண்ணியவள் பகற் கனவில் மூழ்கிப் போனாள்.

கனவில் அவளுக்கும், வெங்கட்டுக்கும் ஆசைக்கொன்று ஆஸ்திக்கு ஒன்றாய் இரண்டு குழந்தைகள் பிறப்பதாகவும், இருவரும் குழந்தைகளை அருமை பெருமையாக வளர்ப்பதாகவும் கண்டு சிரிப்பில் பூரித்தாள்.

சாப்பிடாமல் தனக்குள் சிரித்தபடி முகம் ஜொலிக்க அமர்ந்திருந்த சிந்தியாவை வெங்கட் கண் கொட்டாமல் பார்த்து ஒரு நெடிய மூச்சை விட்டான்.

அவனுக்குக் கிட்டவே கிட்டாத பாக்கியம்.

மறுநாள் ஃபேக்டரிக்கு கிளம்பும் போது அவனுக்கு மூடு சரியாக இருந்தது மாதிரி இல்லை. கர்ம சிரத்தையாக சிந்தியா பார்த்துப் பார்த்துத் தன்னை அலங்கரித்துக் கொண்டது அவன் கண்களில் படவேயில்லை.

ஃபேக்டரியில் கணவனுக்கு இருந்த மதிப்பையும், மரியாதையையும் காண்கையில் சந்தோஷப்பட்டது மனம்.

திருவிழாக் கூட்டம் போல் ஃபேக்டரியில் வேலை செய்யும் அத்தனை பேரும் குடும்பத்துடன் வந்திருப்பதைக் கண்டு வியந்தாள்.

வண்ணக் காகிதங்கள் தோரணமாக வழியெல்லாம் கட்டி விடப்பட்டிருந்தன. சின்னப் பிள்ளைகளுக்கு விளையாட்டுப் போட்டி ஒன்று தனியே நடந்துக் கொண்டிருந்தது.

பிரபலமான ஒருவரின் இன்னிசைக் கச்சேரி தொடங்குவதற்குத் தயாராக இருந்தது.

போதாதற்கு சிந்தியாவை காட்சிப் பொருளாக நினைத்து ஒவ்வொருவரும் விழி விரியப் பார்த்துக் கொண்டு இருப்பதைக் கண்டு சங்கடப்பட்டாள் சிந்தியா.

அவள் சங்கடத்தை உணர்ந்த வெங்கட், "அழகா இருந்தால் அப்படித்தான் உற்றுப் பார்ப்பார்கள்" என்று சிந்தியாவின் காதோடு சொல்ல, சிந்தியாவிற்கு உள்ளே மகிழ்ச்சி குமிழிட்டது. அவளை ரசிக்கிறானா? கண்களில் சந்தோஷத்துடன் கணவனை நிமிர்ந்து பார்க்க, அவனோ கண்கள் மின்ன வேறிடம் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.



விழா முடிந்து மேலும் இருந்து இன்னிசைக் கச்சேரியை அரை மணி நேரம் கேட்டு விட்டு சிந்தியாவை அழைத்துக் கொண்டு வீடு செல்லக் கிளம்பினான்.

காரில் ஏறும் முன்,

"நீங்க இரண்டு பேரும் இன்று போல் என்றும் இணை பிரியாமல் இருந்து எங்களை வாழ வைக்க வேண்டும்" என்று முதிர்ந்த பெண்மணி பெரிய பூசணிக்காயில் சூடம் ஏற்றி சுற்றிப் போட்டார்.

"அவசியமற்றது இல்லையா" என்று அவர் சுற்றி போடுகையில் சிந்தியாவிற்கு மட்டும் கேட்கும் திணுசில் முணுமுணுத்தான் வெங்கட்.

நீ எனக்கு அவசியம் இல்லை. அம்மா குணமடைந்தவுடன் நீ உன் வழியில் பிரிந்து செல்லலாம் என்கிறானோ என்று கஷ்டப்பட்டாள்.

சிந்தியாவிற்கு அதுவரை இருந்த சந்தோஷமெல்லாம் 'புஸ்' என்று வடிந்தது.

எனக்கு மட்டும் ஏன் வாழ்க்கை இப்படி சோகவனமாக இருக்கிறது. அவ்வளவு பெரிய பாதகமான செயலை இவன் செய்யாதிருந்தால் என் வாழ்க்கை எவ்வளவு நன்றாக இருக்கும் என்று ஏங்கினாள். ஒரு வேளை அச் செயலுக்காக வருந்துகிறானோ? மன்னிப்பு கேட்பானோ? வருங்காலத்தில் இனி அதுபோல தவறிழைக்க மாட்டேன் என்று உறுதி தருவானோ?

அவனுடன் சேர்ந்து வாழ ஆசை கொண்ட நெஞ்சம் அதற்கான சாத்தியக் கூறுகளை எண்ணி அலசியது

நாட்கள் நகழ்ந்து சென்றன.

ஒரு நாள் மஞ்சு பட்டுப் புடவை செலக்ட் செய்வதற்கு சிந்தியா கண்டிப்பாகக் கூட வரவேண்டும் என்று வந்து கூட்டிக் கொண்டு சென்றாள். மஞ்சுவின் கல்யாண வேலை வெகு வேகமாக நடந்துக் கொண்டிருந்தது.

சங்கரியும், மஞ்சுவின் திருமணப் பரிசாக, பத்து பவுனில் கழுத்து ஹாரம் ஒன்றை ஆர்டர் கொடுத்து செய்து வாங்கி வைத்தார்.

"மஞ்சுளாவையும் மாப்பிள்ளையும் விருந்துக்கு அழைக்கும் போது, பரிசாகக் கொடுக்காலம் சிந்து" என்று அவளிடம் பேச்சோடு பேச்சாக சங்கரி சொல்லி வைத்தார்.

உலகத்தில் உள்ள சந்தோஷம் அத்தனையும் மஞ்சு குத்தகைக்கு எடுத்துக் கொண்டது போலிருந்தது சிந்தியா விற்கு. எப்பொழுதும் ஒரே சிரிப்பும், கொண்டாட்டமாக, கூடவே அவினாஷைப் பற்றிய பேச்சமாக, இவள் கல்யாண நாளை ஆவலுடன் எதிர் நோக்கி கொண்டிருந்தாள். இங்கோ.

வெங்கட் வீட்டிலிருக்கும் நேரத்தைக் குறைத்தான். சிந்தியாவிடம் பேச்சே கிடையாது.

நொந்துப் போனாள் சிந்தியா.




அன்று மஞ்சுவின் திருமணம் நன்றாக நடந்தேறியது.

வீட்டு ஆளாய் இல்லாமல் வேற்று ஆள் போல் ஒதுங்கி வெங்கட் கல்யாணத்தில் கலந்துக் கொண்டது சிந்தியாவைக் கஷ்டப்படுத்தியது.



அதுவும் கல்யாணம் முடிந்தவுடன் அவளருகில் வந்து அவன் கிளம்புவதாகவும், அவள் வருவதாக இருந்தால் வீட்டுக்குச் சென்றவுடன் கார் அனுப்பி வைப்பதாகவும் கண்களில் அனல் பறக்கக் கோபத்தை உள்ளடக்கிய குரலில் அவள் காதுகளில் மட்டும் கேட்கும் படியாகச் சொல்ல..

சிந்தியா திகைத்துப் போனாள். அவள் கண்களில் 'குபுக்' என கண்ணீர் தேங்கியது. அவள் என்ன தவறு செய்தாள்? ஏன் பார்வையால் தீயாய் சுடுகிறான்? அவள் வருவதானால் கார் அனுப்பி வைப்பானா? அதற்கு என்ன அர்த்தம்? வராதே என்கிறானா? கண்ணீரை மறைப்பதற்காக சிந்தியா இமையை தாழ்த்தி நிமிரும் முன் அவன் சென்று விட்டிருந்தான். எதிரில் விமலாதான் நின்று கொண்டிருந்தாள்.

பெண்ணின் கண்களில் கண்ணீரைக் கண்டதும் பெற்ற மனம் தவித்துப் போனது.

வேக நடையுடன் வெங்கட் வாசலைக் கடந்ததை விமலா கவனித்தார்.

சிந்தியாவின் கண்ணீரில் அவள் மனம் வெங்கட் வசப்பட்டு விட்டதை விமலாவிற்கு நிரூபிக்க "என்னடா.." என்று பேச்சை தொடங்குவதற்கு முன் சிந்தியாவிற்கு அழுகையில் உதடு பிதுங்கியது.

பெண் இருந்த நிலையை உணர்ந்த விமலா சட்டென்று அவள் கரம் பற்றி அருகில் காலியாகவிருந்த மணப்பெண் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

கல்யாண வீட்டுக் கலகலப்பெல்லாம், அறைக் கதவை மூடியதும் அடங்கியது.

"அம்மா.." என்று தாயின் மடியில் முகம் கவிழ்த்து அழுகையில் கரைந்தாள் சிந்தியா.

சில நிமிடம்.. பெண் அழுது மன இறுக்கம் சிறிது குறையட்டும் என்று பொறுத்திருந்த விமலா மெல்ல பெண்ணின் முதுகை ஆதரவாக தடவ, சிந்தியாவின் அழுகையும் சற்று நேரத்தில் நின்றது.

தாயின் மடியில் ஒரு மூச்சு அழுது ஒரு விதமான தெம்பைத் தந்தது. மெல்ல நிமிர்ந்து தாயின் முகம் நோக்க, அவர் கண்களும் கலங்கியிருந்தது.

"சிந்தும்மா எல்லாம் சரியாப் போகும். மனசில் கணவன் மேல் அன்பு இருக்கும் போது வெளிப்படுத்த வேண்டும் பேச உட்கார்ந்து இரண்டு பேரும் பேசினாலே பிரச்சினை தெளிவாகி விடும். பேசடாம்மா" என்று கண்கள் கனிய விமலா பேச,

"இல்லம்மா, இப்போது நான் வெங்கட்டிடம் பேச ரெடி தான். ஆனால் அவருக்குத்தான் என்னிடம் பிடித்தம் இல்லை" என்று சிந்தியா முதல் முறையாக தாயிடம் தன் விஷயத்தை உதடு துடிக்கப் பகிர்ந்து கொள்ள,

சிரித்தார் விமலா.

"முட்டாள் தனமாகப் பேசாதே சிந்து. பிரச்சினையே நீ தான். வெங்கட் உன்னைப் பார்க்கும் பார்வைகள் எங்களுக்கு நூறு கதை சொல்கிறது நீயானால்... விடு. அதைப் பற்றி நான் பேசுவது சரியல்ல. இன்னும் நீ சின்னப் பெண்ணில்லை அறிவு முதிர்ச்சி வந்துவிட்ட நாலும் தெரிந்த பெண். உன் வாழ்க்கை உன் கையில் அதை சிறப்பாக்குவதும், உயிரூட்டுவதும் உன் கையில்" சிந்து இமை தட்டாமல் விழிப்பதைக் கண்டு,



"எந்த விஷயமானாலும், வெங்கட்டிடம் பேசு, அவன் தான் உன் உலகம். அவனைப் பிரிந்து இருந்த இரண்டு வருடத்தில் உன் முகத்தில் ஒரு நாளும் நான் நிம்மதியை, சந்தோஷத்தைக் கண்டதில்லை. உன் நிம்மதி, சந்தோஷம் எல்லாம் அவனிடம்தான். அதை மறுத்து உன்னைய நீ தண்டித்துக் கொள்ளாதே சிந்து. நம்பிக்கையோடு இரு. நான் மஞ்சுவை மறுவீடு அழைத்துச் சென்று விட்டு நாளை உன்னை 'உன்' வீட்டில் பார்க்கிறேன். நல்ல முடிவா எடு" என்று சொல்லி பெண்ணின் நெற்றியில் ஆதரவாக முத்தமிட்டார் அவர்.

யோசனை வயப்பட்டாள் சிந்தியா.




கல்யாண வீட்டில் இருந்து மதியம் மூன்று மணிக்கு வீடு வந்து சேர்ந்தாள் சிந்தியா. தன்னுடைய அறைக்கு வந்தவள் கசகசத்த பட்டுப் புடவையை களைந்து குளித்து மஞ்சள் நிற கோட்டா சேலைக்கு மாறினாள்.

சேலை மாற்றிக் கொண்டிருக்கும் போதே அறிவிப்பில்லாமல் வெங்கட், அவளுடைய அறைக்குள் வந்து நின்றான்.

அவனைக் கண்ட பதட்டத்தில் அவசர அவசரமாக மாராப்பை நெஞ்சில் போட்டாள் சிந்தியா. அதற்குள் அவன் பார்வை அவள் நெஞ்சில் பட்டு மீண்டும் திரும்பியது.

முகம் சிவக்க சேலையை முழுவதும் சுற்றியவள்,

"ஏன்.. என்ன வேண்டும்?" என்று திக்கினாள்.

அவளுக்குப் பதில் சொல்லும் முன்பு அறையை கேள்விக் குறியோடு சுற்றிப் பார்த்துவிட்டு,

"இன்னும் நீ கிளம்பவில்லை" என்று கடுமையான குரலில் கேட்டான்.

"என்னது? எங்கே?" என்று புரியாமல் சிந்தியா விழிக்க..

"தங்கையின் கல்யாணம் நல்லபடியாக முடிய வேண்டும் என்று திட்டம் போட்டு இங்கே வந்தவளாயிற்றே. அதுதான் கல்யாணம் நல்லபடியாக முடிந்து விட்டதே. இன்னும் இங்கே உனக்கென்ன வேலை? அல்லது வேறு ஏதாவது திட்டம் கைவசம் இருக்கிறதா?" என்று அவளைக் குற்றம் சாட்டிப் பேசினான் அவன்.

அவன் பேசியதை நம்ப முடியாத தோரணையில் சிந்தியா கண்களை அகல விரிக்க...

"ஆகா, என்ன அப்பாவித்தனமான பார்வை..." என்று வார்த்தைகளால் சாடினான்.

அவள் பேசாமல் அவனையே இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருக்க,

"ஊரெல்லாம் தேடி, உன்னைப் போய் என் மனைவியாக தேர்ந்தெடுத்தேன் பார், என்னைச் சொல்லணும்" கை முஷ்டி இறுகத் தலையில் கை வைத்துக் கொண்டு சோபாவில் பொத்தென்று கால்கள் அகல அமர்ந்தான் அவன்.

அடிபட்டது போல தலையை சிலுப்பினாள் அவள்.

சிந்தியா தன்னை விட்டுச் சென்று விடுவாளோ என்ற நினைப்பில் கோபத்தில் உச்சஸ்தாயில் இருந்தான் வெங்கட். என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் அவன் பேசியது சிந்தியாவை எவ்வளவு தூரம் காயப்படுத்தியிருக்கக் கூடும் என்று அவன் உணரவே இல்லை.



"தங்கைக்குத் திருமணம் ஆக வேண்டும் என்ற திட்டத்துடன் இப்பொழுது இந்த வீட்டிற்கு வந்தாய் சரி சிந்தியா. இரண்டு வருஷங்களுக்கு முன் எந்தத் திட்டத்துடன் என்னைத் திருமணம் செய்தாய்? எந்த திட்டத்துடன் என்னை விட்டுப் பிரிந்து போனாய்? எந்த திட்டத்துடன் என்னை வெறுத்தாய்? ஏதாவது திட்டம் ஒவ்வொன்றுக்கும் வைத்திருக்கிறாயா? சொல்.. சொல்.." என்று சரமாரியாக கேள்விகளைக் கோபத்தில் அடுக்க...

சிந்தியா கண்கள் வெறிக்க அவனையே பார்த்தாள். நெஞ்சு வேகமாக ஏறி இறங்கியது.

பிறகு அலமாரியின் மேல் இருந்த சூட்கேஸை எக்கி எட்டி எடுத்து கட கட வென்று தன்னுடைய துணிகளால் அதை நிரப்பத் தொடங்கினாள்.

அவள் கிளம்பத் தயாராவதைக் கண்டு, "நான் என் அம்மா எப்படிப் போனாலும் உனக்கு பொருட்டேயில்லை. உன்னுடைய திட்டம், உன்னுடைய நலன்தான் உனக்குப் பெரிது. அப்படி என்னத்தான் தவறு செய்து விட்டேன் நான். கொடுமைக்காரி, என் நிம்மதியை அழிக்க என்றே வந்த பிசாசு" என்று இறுக மூடியிருந்த பற்களுக்கிடையே வார்த்தைகளைத் துப்பினான் வெங்கட்.

யார், யாரைக் கொடுமைக்காரி என்பது விவஸ்தை வேண்டாமா? இவனுக்குச் சரியான பதிலை சொல்லிவிட்டுத் தான் போக வேண்டும் என்று கண்களில் சீற்றத்துடன்.

"யார் கொடுமைக்காரி? நானா.. நானா..?" என்று தன் நெஞ்சில் கை வைத்து கண்கள் சிவக்க ஆக்ரோஷமாகக் கேட்டவள், அவன் பதிலை எதிர்பார்க்காமல் தொடர்ந்து...

"சின்ன சிசுவை, கர்ப்பத்தில் இருக்கும் பொழுதே கொல்ல ஏற்பாடு செய்த நீங்கள் மிக மிக நல்லவர்தான்" என்று மூச்சிரைக்கப் பேச..

திகைத்துப் போனான் அவன். சில நொடிகள் அங்கே ஒரு சின்ன சப்தத்தையும் காணும்.

"எப்படித் தெரியும்? உனக்கு யார் சொன்னது?" என்று உறுமியபடி சோபாவில் இருந்து விசுக்கென்று எழுந்து நின்றான் அவன்.

அவன் குரலில் இருந்த பதற்றத்தை உணர்ந்த சிந்தியா;

"இந்த ஈன காரியத்தைப் பற்றி சொல்ல யாருக்கு வாய் வரும்... நீங்கள் டாக்டரிடம் கருவைக் கலைக்கச் சொன்னதை இந்த இரண்டு காதுகளால்தான் கேட்டேன்" என்று உணர்ச்சி வசத்தால் மாறி விட்டக் கீச்சுக் குரலில் கத்த.

"மைகாட்" என்று அதிர்ச்சியடைந்து, தன்னுடைய இரு கைகளாலும் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

"ஏன் உங்கள் கொடும்பாதகச் செயலை நான் தெரிந்து கொண்டேன் என்று கலக்கமாக இருக்கிறதா?" என்று அவன் இருந்த நிலை கண்டு இளக்காரமாக கேட்டாள் சிந்தியா.

அவன் பேசியதைக் காதில் வாங்கவே இல்லை வெங்கட்.

"உன்னிடம் சொல்ல எனக்குத் தைரியம் இல்லையே" என்று அவளுக்கு கேட்காமல் முணுமுணுத்தான். சொல்லித் தீர்வதைத் தவிர வேறு வழியில்லை என்று புரிந்து அதற்கு தன்னைத் தயார் படுத்திக் கொண்டு,

"சிந்தியா உனக்கு ஞாபகமிருக்கிறதா? மூன்று மாதக் கர்ப்பத்தைச் சோதிக்க என்று உன்னை மூன்று முறை



டாக்டரிடம் அழைத்துச் சென்றேனே? ஏன் தெரியுமா? முதல் முறை சோதனையிலேயே டாக்டர், கரு ஊனமுடைய, ஊனம் என்றால், கை கால் பற்றியல்ல, நான் பேசுவது மூளை வளர்ச்சியடையாத குழந்தையாக வருமோ என்று சந்தேகப்பட்டார். பிறகும் சந்தேகத்தை நிவிர்த்திக்க இரண்டாம் முறை சோதனை செய்ததில் நூறு சதவீதம் குழந்தை ஊனமானதாக பிறக்கும் என்று சொன்னார். அதைக் கேட்டு நான் கலங்கிப் போனேன். நீயோ, குழந்தை, குழந்தை என்று வானலோகத்தில் சஞ்சரித்தது நன்றாகத் தெரிந்தது. உன்னிடம் குழந்தைப் பற்றிச் சொன்னால் தாங்க மாட்டாய் என்று தெரிந்துதான் தானாகக் கரு கலைந்து போனது போல ஏற்பாடு செய்தேன்.

நான் உன்னிடம் கருவின் வளர்ச்சியைப் பற்றி சொல்லியிருந்தால் என்ன செய்திருப்பாய் தெரியுமா? முதல் முறையாக கரு கொண்டிருக்கிறேன் அதை அழிப்பது பாவம். எப்படி இருந்தாலும் அது என் குழந்தை என்று அழுது அழிச்சாட்டியம் செய்திருப்பாய். நீ ஒன்று சொல்லி என்னால் மறுக்க முடியுமா? என்பது சந்தேகம்... அதனால்தான்.." என்று யோசித்து யோசித்து ஒன்றும் விடாமல் அவன் சொல்ல,

சிந்தியாவின் முகம் வெளுத்துப் போயிற்று.

"நான் நம்ப மாட்டேன். நம்ப மாட்டேன் செய்வதையும் செய்து விட்டு என்னைச் சமாதானப்படுத்த பொய்ச் சொல்றீங்க, பொய் பொய்.." என்று முகத்தை மூடிக் கொண்டு விசும்பியபடி நிற்கக் கூட சக்தியில்லாமல் கட்டிலில் அமர்ந்தாள்.

"சத்தியம் சிந்தியா, என் அம்மாவின் மேல் சத்தியம்.." என்று அவள் அழுவதைக் காணப் பொறுக்காமல் முகத்தைத் திருப்பி சுவரைப் பார்த்துச் சொல்.

என்னவோ குழந்தையை அன்றுதான் இழந்தது போல் அழுது தீர்த்தாள் சிந்தியா. திடீரென்று நிஷா சொன்னது ஞாபகத்தில் வர.

"நிஷா சொன்னாளே, உங்களுக்கு குழந்தைங்க பிடிக்கவே பிடிக்காது. குழந்தைகள் பிறந்தால் பெண்கள் அசிங்கமாயிடு வாங்க. அப்புறம் அந்த அவலட்சணத்தைக் கட்டிட்டு யார் அழுவாங்க அப்படின்னு நீங்க..."

பொறுமை இழந்தான் வெங்கட்.

"நிஷாவிற்கு கர்ப்பப் பையில் கோளாறுன்னு டாக்டர் குழந்தை பிறக்காதுன்னு சொல்லிவிட்டார். அவகிட்டே போய் குழந்தைகள் அழகு, பொக்கிஷம், குழந்தை இருந்தால் அப்படி இருக்கும், இப்படி இருக்கும்னு வெறுப்பேற்றச் சொல்கிறாயா? நாம் வெறுப்பாகப் பேசப் பேச அவளுக்கும் குழந்தைகள் வாழ்க்கையில் முக்கியம் இல்லையோ என்று தோன்றத் தொடங்கி விடாதா?" என்று உணர்ச்சியற்ற குரலில் சொன்னான்.

அவள் கண்களில் இன்னும் தன் மேல் நம்பிக்கை வராததைக் கண்டு, டக்கென்று தன் அறைக்குச் சென்றான்.

மீண்டும் வரும்போது கையில் கத்தை பேப்பர்கள் இருந்தன.

"என் பேச்சில் நம்பிக்கை இல்லாவிட்டால் மெடிக்கல் ரிப்போர்ட்டைப் படித்துத் தெரிந்து கொள்" என்று அவனுடைய மெடிக்கல் ரிப்போர்ட்டையும் அவள் இருந்த திக்கில் விட்டெறிந்து விட்டுச் சென்றான்.



ரிப்போர்ட்டை ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிப் பார்த்த சிந்தியாவிற்கு கண்ணீர் மடை திறந்த வெள்ளம் போல் பெருகியது. கருவின் வளர்ச்சி சீராக இல்லை, ஊனமுடையது என்று தெளிவாக அதில் எழுதியிருப்பதைப் படித்தவுடன் தலையைச் சுற்றியது சிந்தியாவிற்கு.

'எவ்வளவு பெரிய தப்பு செய்திருக்கிறோம். தன் மனம் நோகக் கூடாது என்று பார்த்துப் பார்த்துச் செய்த கணவனை ஒரே நிமிடத்தில் தூக்கி எறிந்திருக்கிறோமே. இதற்கு மன்னிப்பு உண்டா?' என்று அழுகையில் கரைந்தாள்.

நெடுநேரம் தன்னறையிலேயே தன் தப்பை எண்ணி அழுது வடிந்தவள், தன் தவறுக்கு அவனிடம் மன்னிப்புக் கேட்கவில்லை என்றால் இந்த ஜென்மத்தில் தனக்கு நிம்மதி கிடைக்கப் போவதில்லை என்று உணர்ந்து மெல்ல அவனுடைய அறைக்குள் அடியெடுத்து வைத்தாள்.

உடை மாற்றாமல் அவன் நெற்றியில் கையை வைத்து கண்களை மறைத்தபடி படுக்கையில் படுத்திருப்பதைக் கண்டு அவன் அருகில் போய் நின்றாள். நெஞ்சம் தடதடத்தது. எவ்வளவு நல்ல கணவன். இவனை இரண்டு வருடங்கள் என்னுடைய அறியாத்தனத்தில் சோதனைக்குள்ளாக்கியிருக்கிறேனே என்று கண்கள் கசிந்தன.

அவனிடம் எதைச் சொல்வது? எப்படிச் சொல்வது? என்று உதடு கடித்து யோசித்தவளுக்கு எதற்கும் தைரியம் வரவில்லை. விழி நிறைய அவனைப் பார்த்தாள். அவனிடம் அசைவு இல்லாததைக் கண்டு, அவனை நெருங்கும் மன வலிமையை இழந்தாள்.

மண வாழ்க்கையின் ஆதாரமே ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, ஒருவரின் மேல் ஒருவர் நம்பிக்கை கொள்வதும் தான். அந்த ஆதாரமே இல்லை என்றால்? சிந்தியா அவன் முன்பு நிற்கக் கூட, தகுதியில்லாதவளாக உணர்ந்தாள். மெல்லத் திரும்பி நடக்க எத்தனிக்கையில் திடீரென்று 'சிந்தியா' என்ற அவனின் ஆண்மைக் குரல் மெதுவாக அழைக்கவும், அவள் நடை நின்றது. கழுத்தைத் திருப்பி அவனைப் பார்த்தாள் சிந்தியா.

"இங்கே வா" என்பதுபோல் அவன் தலை அசைக்க, சிந்தியா மீண்டும் அவன் அருகில் போய் நின்றாள்.

பிறகு அவனாகவே பேசுவான் என்கிற மாதிரியாக அவள் அவனைப் பார்த்துக் கொண்டே இருக்க,

சிந்தியா துடித்த உதட்டை கடிப்பதும், தரையில் கண் ஓட்டுவதுமாக நிமிடங்களை ஓட்டினாள்.

என்ன பேசுவான்?

அவன் கண்களை சந்திப்பதற்குக் கூடத் தைரியம் இல்லை.

பின் அவர்களுக்கு இடையே நீண்ட அமைதியை சகிக்க மாட்டாமல், கண்ணீர் அடக்கியபடி, "என்னை மன்னித்து விடுங்கள்" என்று தொண்டை கரகரக்கப் பேசினாள்.

அடுத்த விநாடி சிந்தியா, வெங்கட்டின் இறுக்கமான அணைப்பில் இருந்தாள். இனி ஒரு நொடிப் பொழுதும் கூட அகல முடியாது போல் அவனுடன் ஒட்டிக் கொண்டு கண்ணீர் வடித்தாள்.

"எப்படி என்னை விட்டு விட்டுப் போக உனக்கு மனம் வந்தது. எப்படி உனக்கு..." என்று கேட்டவன் குரல் உணர்ச்சி வசத்தால் கரகரப்பாக இருந்தது சிந்தியாவிற்குப் புரிந்தது.



"உன்னை அழைத்து வந்துவிட வேண்டும் என்று திருச்சிக்கு வந்தபோது நீ பேசிய பேச்சுக்கு என்னுடைய தன்மானத்திற்கு வந்த இழுக்காக எண்ணி, இனி உன்னைப் பார்க்கவே கூடாது என்று முடிவு செய்தேன். ஆனால் உன் மேல் எனக்கிருந்த அன்பு, என் கர்வத்தை உருக்கியது. உன்னை மீண்டும் என்னுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டு, அதற்கு அம்மாவையும் சாக்காக வைத்து உன்னை இங்கு அழைத்து வந்தபோது எவ்வளவு நம்பிக்கையில் இருந்தேன் தெரியுமா?

என்மேல் உனக்கு ஏன் இந்த வெறுப்பு என்று மட்டும் புரிந்துக் கொள்ளவே முடியவில்லை. உனக்கு வேறு யாரிடமாவது ஈடுபாடு உண்டா என்று நீ அறியாமல் கண்காணித்தேன். அப்படியும் உனக்கு யாரும் இருந்தது போல் தெரியவில்லை.

பின்பு, அன்று ஒருநாள் சாரதா பெரியம்மா வந்திருந்த இரவு நீ என்னை முத்தமிட்டாய் நினைவிருக்கிறதா? அன்று உன் மேல் எனக்கிருந்த சந்தேகங்கள் அத்தனையும் தரைமட்டமாயின."

வெட்கத்தில் முகம் குங்குமமாகச் சிவந்து போயிற்று சிந்தியாவிற்கு. அவனிடத்தில் இருந்து முகத்தை மறைக்க விலக எத்தனிக்க, வெங்கட் அவளை இன்னும் அதிகமாக அணைத்துக் கொண்டான்.

"அன்று உன்னை என் அறையில் கண்டதும், கனவா? என்று கண்களைக் கசக்கினேன். தூக்கத்தில் நீ தேவதையைப் போல் ஜொலிக்கவும் என்னை அடக்கத் தெரியாமல் மெல்லத் தூக்கி உன்னை என் அணைப்பில் படுக்க வைத்தேன்.

உண்மையைச் சொல்கிறேன் கண்ணம்மா, இந்த இரண்டு வருடத்தில் நான் நிம்மதியாகத் தூங்கிய நாள் அது ஒன்றுதான். என்னை எப்படி எல்லாம் ஏங்க வைத்தாய் தெரியுமா?'' என்று கண்களில் ஒளி மின்னக் கேட்டான் வெங்கட்.

''இனிமே எந்தக் கணமும் என்னை விட்டுப் போக மாட்டாயே?'' என்று அவன் சந்தேகத்தோடு கேட்க.

''ம்கும், மாட்டவே மாட்டேன். என் உயிர் இங்கிருக்க, என் உயிரை விட்டு செல்ல என்னால் முடியுமா?'' என்று அவன் நெஞ்சில் முகத்தை மறைத்தபடி சிந்தியா வசனம் பேச,

வெங்கட், சிந்தியாவின் கண், மூக்கு, வாய், கன்னம், என்று தென்பட்ட இடங்களில் எல்லாம் கண்மூடித்தனமாக முத்தமிடத் தொடங்கினான்.

சிந்தியாவின் முகம் நாணத்தில் பல மடங்கு அழகாகப் பிரகாசித்தது.

